Vol.4, Issue 1 | Annual Subscription ₹420

ஜூன் 2021

@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Rotary



Update your mailing address to receive *Rotary News* regularly

Subscription in charge	District numbers
Kalpana *kalpana@rotarynewsonline.org*	2982, 3020, 3054, 3090, 3100, 3170, 3181, 3182, 3190, 3250, 3262
Sasikala *sasi@rotarynewsonline.org*	2981, 3012, 3110, 3120, 3141, 3142, 3201, 3211, 3212, 3261, 3291
Valli *valli@rotarynewsonline.org*	3000, 3030, 3060, 3070, 3080, 3131, 3132, 3232, 3240
Anuvarshini *anu@rotarynewsonline.org*	3011, 3040, 3053, 3150, 3160, 3202, 3231

You can reach our Subscription chief Senthil Kumar on *senthil@rotarynewsonline.org*

You can also call 044-42145666 or 9840078074, ask for the subscription person in charge of your district, and lodge a complaint.

But above all, make sure of the following:

1. You have paid your *Rotary News* dues to your club.
2. The club has sent the dues to Rotary News Trust.
3. Your name and full postal address, with the correct pincode, and preferably email and phone number, are given to us.

கோவிட் நோய்ப்பரவல் சவால்களுக்கு இடையிலும் ரோட்டரி செய்திகள்

அறக்கட்டளைக் குழு ஒவ்வொரு மாதமும் இதழைத் தொடர்ந்து கொண்டுவருகிறது, அனுப்பிவைக்கிறது. நம் சந்தாதாரர்கள் அனைவரும் சரியான நேரத்தில் இதழைப் பெறுவதற்கு எங்களால் இயன்ற அனைத்தையும் நாங்கள் செய்கிறோம். ஆனால், உங்களில் சிலருக்கு இதழின் பிரதிகள் வருவதில்லை என்று தொடர்ந்து புகார்கள் எழுகின்றன.

அதற்குச் சாத்தியமுள்ள காரணங்கள்:

- உங்கள் முகவரி மாறியிருக்கலாம், அது எங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். உங்களுக்கு உங்கள் இதழ் கிடைக்கா விட்டால், தயவுசெய்து, உடனே எங்களுக்கு உங்கள் புதிய முகவரியைக் குறிப்பிடுங்கள், ஒருவேளை, நீங்கள் வீடு மாறாவிட்டால், பழைய முகவரியைச் சரியான அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் குறிப்பிடுங்கள். நீங்கள் எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவேண்டிய முகவரி rotarynews@rosaonline.org
- உங்களுடைய சமீபத்திய தகவல்கள் RIன் தெற்கு ஆசிய அலுவலகத்தில் இருந்தாலும், அந்தத் தரவுகள் எங்களுக்குக் கிடைக்காது என்பதைத் தயவுசெய்து நினைவில் வையுங்கள். அந்தத் தரவுகளைப் பெறுவதற்கு நாங்கள் பலமுறை முயன்றுள்ளோம், RIன் தனியுரிமைக் கொள்கையால், அந்த முயற்சிகள் பலன் தரவில்லை. ஆகவே, எங்களுடன் நேரடியாக உரையாடுங்கள்.
- உங்களுக்கு உங்கள் பிரதி கிடைக்காவிட்டால், தயவுசெய்து, உங்கள் அஞ்சல்காரர் அல்லது அஞ்சல் அலுவலகத்துடன் இதுபற்றிப் பேசுங்கள், விசாரியுங்கள்.
- சங்க அலுவலர்களுக்கு ஒரு கோரிக்கை, தயவுசெய்து, உறுப்பினர்கள் விலகுவது, புதிய உறுப்பினர்கள் சேர்வது பற்றி அவ்வப்போது எங்களுக்குத் தெரிவியுங்கள். ஓர் உறுப்பினர் விலகுவதை நீங்கள் எங்களுக்குச் சொல்லா விட்டால், அவர் பணம் செலுத்தாமல் இதழைத் தொடர்ந்து பெறுவார். அத்துடன், புதிதாகச் சேர்ந்த உறுப்பினர் சந்தாத் தொகையைச் செலுத்திய பிறகும் இதழைப் பெறமாட்டார், ஏனெனில், புதிய உறுப்பினரைப்பற்றி ரோட்டரி செய்திகள் அறக்கட்டளை அலுவலகத்துக்கு எந்தத் தகவலும் வருவதில்லை.
- நீங்கள் நினைவில் வைக்கவேண்டிய இன்னொரு விஷயம், RI தன்னுடைய செயல்முறைக் கையேட்டில் தெரிவிக்கிறபடி, அனைத்து ரோட்டரியன்களும் தி ரோட்டரியன் (இப்போது ரோட்டரி என்ற பெயரில் வெளிவருகிறது), அல்லது ஓர் உள்ளூர் இதழ் என ஏதேனும் ஒரு ரோட்டரி இதழுக்குச் சந்தா செலுத்தவேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால், சங்கம் இடைநிறுத்தப்படலாம்.■



உள்ளே

12 கனவுகள் மெய்ப்படும்: சேகர் மேத்தா
ரோட்டரி நியூஸ்-உடன் உரையாடுகிறார் உள்வரும் RI தலைவர் சேகர் மேத்தா, தன்னுடைய தலைமை ஆண்டுக்கான தன் கனவுகள், முக்கியத்துவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்.

28 பெல்தங்கடி ரோட்டரி சங்கத்தின் தண்ணீர் சேமிப்புத் திட்டங்கள்
இந்தச் சங்கம் பல புதுமையான, திரும்பப் பயன்படுத்தக்கூடிய, பணத்தைச் சேமிக்கும் நீர்ப் பாதுகாப்புத் திட்டங்களை நடத்தியுள்ளது.

36 போராளி, சீர்திருத்தவாதி மகேஷ் கோட்பாகி!
RIDE மகேஷ் கோட்பாகி அளித்துள்ள பேட்டியில், தன் தனிப்பட்ட மற்றும் ரோட்டரி பயணத்தைப் பகிர்ந்துகொள்கிறார்.

46 கோவிட்: அமைதியாக இருங்கள், வீட்டில் தனித்திருங்கள்
தொற்று நோய்கள் நிபுணர் Dr V ராமசுப்ரமணியன் கோவிட் நோயிலிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ள சில வழிமுறைகளை கூறுகிறார்.

56 கோவிட் நிவாரண பணிகளில் ரோட்டரியின் அயராத சேவை!
நாடு முழுவதுமுள்ள ரோட்டரி சங்கங்கள் தங்கள் சமூகங்களுக்கு உதவக் கோவிட் தொடர்பான சவால்களைத் தீர்க்கின்றன.

60 மெகா திட்டங்களுக்கு புகைப்பட போட்டி மூலம் நிதி திரட்டிய RID 3190
பெங்களூரு, அதைச் சுற்றியுள்ள மூன்று சுற்றுச்சூழல் திட்டங்களை ஆதரிக்கும் ரோட்டரி செயல் குழு மற்றும் பன்னாட்டுத் தோழமை.

68 மேம்பட்ட ஒளி பரவட்டும்
பசுமைப் பத்தியில், சந்தையில் கிடைக்கிற மிகச் சிறந்த ஆற்றல் சேமிப்பு விளக்குகளைப்பற்றிய உதவிக் குறிப்புகள்.

76 சீ-சா விளையாட்டிலும் நிலைத்தன்மை
இந்த நெருக்கடியான காலகட்டத்தை நேர்முறை சிந்தனைகளுடன் கடக்க சில யோசனைகள்.

அட்டையில்: RIPE சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி

படம்: ஹேமந்த் பன்ஸ்வால்.

சென்னை-ஹம்பர்க் மிதிவண்டி பயண கட்டுரை மிக அருமை

மே இதழின் அட்டைப் படத்தில் அமைந்திருந்த வானவில் பின்னணி இந்த நோய்ப்பரவல் நேரத்தில் ஒரு "நம்பிக்கைக் கீற்றை" அளிக்கிறது. பல நாடுகளின் வழியாக மிதிவண்டி ஓட்டும் இந்த இளைஞருடைய பேரார்வத்தை அந்தக் கட்டுரை காண்பிக்கிறது.

கோவிட் சூழல் பற்றிய உங்கள் ஆசிரியர் பக்கம் நம் நாட்டின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கிறது, கிட்டத்தட்ட ஒவ்வொரு குடும்பமும் அன்புக்குரிய ஒருவரை இழந்துள்ள சூழ்நிலையைக் காண்பிக்கிறது.

அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன் தேவையுள்ளவர்களை அடையாளம் கண்டு உதவுவதன்மூலம் ரோட்டரியின் MCH நல்கையைப் பயன்படுத்தும்படி நம்மைச் சரியான நேரத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ஜெய்ஸ்ரீயின் சிறுமியர் கொண்டாட்ட நாள் உண்மையில் நெஞ்சைத் தொட்டது. WASH திட்டங்களின் அளவைப் பெருக்குதல், ஷீலா நம்பியாரின் இதுவும் கடந்து செல்லும், குழப்ப நாட்களில் அமைதி என்ற புத்தகத்தைப்பற்றிய சந்தியா ராவின் கட்டுரை, S R மதுவின் இசை மற்றும் மெட்டு போன்ற கட்டுரைகள், பசுமைக்குத் திரும்புவோம் பத்தி, கோயம்பத்தூரில் சமையலறைத் தோட்டம், கோட்டயத்தில் டயாலிசிஸ் மையம், மிதிவண்டி ஓட்டுதலுக்கான இந்தியத் தோழமை பற்றிய கட்டுரைகள் ஆகியவை இந்த இதழை மிகச் சிறப்பாக்கிவிட்டன.

ரோட்டரிமீது RIDE வெங்கடேஷ் காட்டும் மனமார்ந்த ஆர்வம், அர்ப் பணிப்புணர்வு, அவர் குழுவைத் தன்னுடன் அழைத்துச்செல்லுதல் அனைவரும் அறிந்த உண்மைகள். வினிதா வெங்கடேஷ்பற்றிய தகவல் களைப் பகிர்ந்துகொண்டதற்கு நன்றி; அவர்களுடைய திருமணப் புகைப்படம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

நன் நாராயணன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

மே இதழின் அட்டைப் படம் மிகச் சிறப்பு. சென்னையிலிருந்து ஹம்பர்க்குக் மிதிவண்டியில் சென்ற Rtn நரேஷ் குமாரை எண்ணி ரோட்டரியன்களாகிய நாம் பெருமைப்படுகிறோம். அவருடைய வாழ்க்கைக் கதை, பயணம் மற்றும் பயணத்தின் குறிக்கோள் ஆகியவை மிகச் சிறப்பானவை. கொரோனாவைரஸின் இரண்டாம் அலையின் அழிவை உண்டாகும் தாக்கங்களை ஆசிரியர் குறிப்பு நன்கு விளக்குகிறது.

RI தலைவர் ஹோல்கர் நாக் பரிமாற்றத் திட்டங்களின் தேவையைச் சரியாக வலியுறுத்துகிறார். RI இயக்குநர்கள் எதிர்வரும் காலங்களில் இளைஞர் சேவைத் திட்டங்களைத் தக்கவைத்துக்கொள்ளவேண்டும் என்று கோருகிறார்கள். அறங்காவலர் தலைவர் ரவீந்திரன் அனைவருக்கும் ஊக்கம் அளிக்கும் ஒரு செய்தியை வழங்குகிறார். RIDE A S வெங்கடேஷ் மற்றும் வினிதாவின் ஆர்வமூட்டும் வாழ்க்கைக் கதையைப் படித்து மகிழ்ந்தோம். நம் அமைப்பை வளர்க்க, உங்கள் ரோட்டரி கதைகளைச் சொல்லுங்கள்: ஜெனிஃபர் ஜோன்ஸ் என்ற கட்டுரை வண்ணமயமான புகைப்படங்களுடன் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

RIPE சேகர் மேத்தாவுடைய மனித்தத்தன்மைச் செயல்களுக்காக அவருக்கு D Litt பட்டம் வழங்கப் பட்டது என்று படித்து மகிழ்ந்தோம். கோட்டயத்தில் ஓய்வின்றி மிகச் சிறப்பாகப் பணியாற்றி ரோட்டரி டயாலிசிஸ் மையத்தை அமைத்திருக்கும் அனைவருக்கும் வாழ்த்துகள்.

கீதா தத் பற்றிய பாடலின் பாலரினா கட்டுரை மிகச் சிறப்பானது.

ஃபிலிப் முலப்பொனெ M T, RC
ட்ரிவான்ட்ரம் சப்அர்பன் — D 3211

இளம் ரோட்டரியன் நரேஷ் குமாரின் சைக்கிள் பயணம்பற்றிய கட்டுரை,

இளம்பிள்ளைவாதத்தைத் தடுக்கும் ஊழியர்கள் கொலை

ஆஃப்கானிஸ்தானிலுள்ள ஜலாலாபாதில் மூன்று இளம்பிள்ளை வாதத் தடுப்பு ஊழியர்கள் தீவிர வாதிகளால் கொல்லப்பட்டதை அறிந்து நான் அதிர்ச்சியடைந்தேன். தங்கள் உயிரைத் தியாகம் செய்த இந்தத் துணிவான ஆன்மாக்களை ஆசிர்வதிக்கும்படி ரோட்டரியன்கள் அனைவரும் கடவுளை வேண்டுவோம்.

நாம் அனைவரும் இதனால் சோகத்தில் இருந்தாலும், உலகிலிருந்து இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் நம் முயற்சிகளை நாம் எப்போதும் நிறுத்தமாட்டோம்.

ராமகிருஷ்ணா K
RC புத்தூர் — D 3181

ஆஃப்கானிஸ்தானில் மூன்று போலியோப்ளஸ் தன்னார் வலர்கள் கொடுமையாகக் கொல்லப் பட்டிருப்பது உண்மையில் அதிர்ச்சி யளிக்கிறது. மனிதத்தன்மைக்கான அன்புக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்த அந்த ஆன்மாக்களின் மீது கடவுள் தன்னுடைய அருளைப் பொழியவேண்டும் என்று நாம் அவரை வேண்டுவோம்.

டோமி ஏபென், RC ஆலப்பி — D 3211

ரோட்டரி தலைப்புகள், மக்களுக்கு ஆர்வம் அளிக்கிற பலவிதமான கட்டுரைகளை நன்கு கலந்து அளிக்கும் ரோட்டரி செய்திகள் ஒரு மிகச் சிறந்த படிப்பு அனுபவமாக உள்ளது.

பூம் பூம் மாடு கட்டுரையில் ஆசிரியருடைய பதவி உயர்வு வாய்ப்புகளைப்பற்றி எருதிடம் கேட்கப்

RIPN ஜெனிஃபர் ஜோன்ஸ் தன்னுடைய கிளிமஞ்சாரோ மலையேற்றம்பற்றிப் பேசுதல் ஆகியவற்றுடன் மே இதழ் ஆற்றல் மிக்கதாக அமைந்தது.

RIDகள் பரத் பான்ட்யா மற்றும் கமல் சங்வியின் செய்திகளும் ஊக்கம் அளித்தன. ஆனால், RIDE A S வெங்கடேஷைப்பற்றிய கட்டுரை மிகச் சிறப்பாக அமைந்தது.

G R பாஸ்கரன், RC விருதுநகர் எலைட் — D 3212

RID கமல் சங்வி இளைஞர்கள்மீது முதலீடு செய்வதுபற்றிய ஒரு பொருத்தமான செய்தியை வழங்கியிருக்கிறார். RYLA, இளைஞர் பரிமாற்றம், மாதிரி UN அவை போன்ற நம் திட்டங்களும், பிற ரோட்டராக்ட், இன்டராக்ட் நிகழ்ச்சிகளும், இளைய தலைமுறைமீது நம் அக்கறை, அன்பை உலகுக்கு நிரூபிக்கும் நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

கோவிட் நோய்த்தொற்றுபற்றிய உங்கள் ஆசிரியர் பக்கம், நம் பல்வேறு பரிமாற்றத் திட்டங்களைப்பற்றிய RI தலைவரின் பார்வைகள் ஆகியவை படிக்க ஆர்வமூட்டின.

R ஸ்ரீனிவாசன், RC மதுரை மிட்-டவுன் — D 3000

சிறுமியர் கொண்டாட்ட நாள் கட்டுரையில் RID 3080ன் சோடி சிக்வாயிஷ் திட்டத்தைப்பற்றி விவரிக்கப்பட்டிருந்ததைப் படித்து மிகவும் மகிழ்ந்தேன்.

உதய்சிங் ராஜ்புத், RC பெல்காம் மிட்-டவுன் — D 3170

பட்டபோது அது தன் தலையைத் தீவிரமாக ஆட்டிய கதையைப் படித்து நான் விழுந்து விழுந்து சிரித்தேன். எருதுகள் குறைந்துவருவதால், அவற்றின் கழுத்திலிருந்து ஒலிக்கும் மணி ஓசையை இப்போது அவ்வளவாகக் கேட்க இயலுவதில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.

கோபிநாத், RC பெங்களூர் இந்திராநகர் — D 3190

நம்முடைய அடிப்படைத் தேவையை, குளித்தல், துவைத்தல் போன்றவற்றுக்காக நாள்தோறும் தேவைப்படும் அளவை நாம் புரிந்துகொண்டால், நீரைச் சேமிக்க இயலும். வெளிநாடுகளில் குளிப்பதற்கு வாளித் தண்ணீரைப் பயன்படுத்தும் அமைப்பு இல்லை. அந்த நாடுகளில் எல்லாரும் ஷவரில்தான் குளிக்கிறார்கள், அது நீரைச் சேமிக்கிறது.

கோவிந்த் தாஸ் அக்ரவால் RC பேளூர் — D 3291

RIPN ஜெனிஃபர் ஜோன்ஸ் பாலினச் சமநிலையைக் கொண்டு வருவதை இலக்காகக் கொண்டிருப்பது பாராட்ட வேண்டியது (ஆசிரியர் பக்கம், ஏப்ரல் இதழ்). ஆனால், நியூசிலாந்து PM ஜசிந்தா ஆர்டெர்ன் மற்றும் ஜெர்மனியின் ஏஞ்சலா மெர்கலை மிகச் சிறந்த தலைவர்களுக்கான எடுத்துக்காட்டுகளாகக் கூறுவது சரியாகாது. நம் நாட்டில் கிட்டத் தட்ட 1–2% பெண் MPகள் மற்றும் MLAக்கள் தான் உள்ளார்கள். காரணம் என்னவென்றால், பெண்கள் தங்களுடைய கூட்டுக்குள்ளிருந்து வெளியில் வருவதில்லை.

பெண்களுடைய ஆற்றல் ஒரு நாட்டின் வலிமைக்கு அடிப்படையாக ஆகவேண்டும்; ஏனெனில், அவர்கள் எல்லாத் துறைகளிலும் தங்கள் திறமையை நிரூபித்துள்ளார்கள், ஆனால், ஆணாதிக்கச் சமூகம் பெண்கள் தன்னிச்சையாகவும் திறனுடனும் இருப்பதை விரும்புவதில்லை.

ராஜ் குமார் கபூர் RC ரூப்நகர் — D 3080

ஏப்ரல் இதழின் அட்டைப் படக் கட்டுரை, சுந்தரி திட்டத்தின்கீழ் 100 இளம் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கும் RID 3232ன் முன்னெடுப்பை விளக்கியது, இது மிகவும் பாராட்டப் படவேண்டியது.

RIPE சேகர் மேத்தா குறிப்பிட்டபடி, ரோட்டரியன்களாகிய நாம் தாக்கம் மிகுந்த திட்டங்களைக் காண்பது மிக முக்கியம். இதில் கவனிக்கவேண்டிய சில பகுதிகள்: சமூகத்துக்கு ஆற்றல் அளித்தல், சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வழி செய்தல் மற்றும் பெண் தொழில்முனைவோரை உருவாக்குதல்.

ராம் பட்நாகர், RC தானே பிரீமியம் — D 3142

பள்ளி மாறுவதுவின் அபாயங்கள் என்ற LBW கட்டுரை எனக்குப் பிடித்திருந்தது. எனக்கு வயது 70. சமீபத்தில் என் முன்னாள் வகுப்புத் தோழர்களின் ஒரு குழுவை நான் கண்டறிந்தேன். அதில் என்னைச் சேர்க்கும்படி நான் கேட்டுக் கொண்டேன். என் வகுப்பிலிருந்த சில பையன்களின் பெயர்களைக் கூறும்படி அவர்கள் என்னைக் கேட்டார்கள், எனக்கு எந்தப் பெயரும் நினைவில் இல்லை. அவர்கள் என்னைக் குழுவில் சேர்க்கத் தயங்கினார்கள். ஆனால், நான் திருப்பித் தராத சில பள்ளி நூலகப் புத்தகங்களை என்னால் காண்பிக்க இயலும் என்று நான் சுட்டிக் காட்டியபோது, அவர்கள் என்னை உடனே அந்தக் குழுவின் உறுப்பினராக ஆக்கினார்கள்!

சதீஷ் வ்யாஸ், RC பாவ்நகர் — D 3060

நம் பூமியையும் சூழலையும் காப்பது பற்றிய RI தலைவரின் எண்ணங்கள் சரியான நேரத்தில் வந்துள்ளன. சிறுமியர் கொண்டாட்ட நாள் கட்டுரை, மிகச் சிறந்த மனிதத் தன்மைச் செயலை வெளிப்படுத்தியது. அத்துடன், RID 3232 இளம், பெண்கள் 100 பேருக்குப் பயிற்சி அளிப்பது பாராட்ட வேண்டியது. வருவாய் உருவாக்கும் இப்பயிற்சியால் இந்தப் பெண்கள் பலன் பெறுவார்கள்.

விநாயக் தியோதர் RC நாசிக் — D 3030

We welcome your feedback. Write to the Editor:
rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.
Mail your project details, along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/ webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

சவால்களை வாய்ப்புகளாக காண்போம்

ஜனவரி 2020ல், ரோட்டரி வாய்ப்புகளைத் திறக்கிறது என்னும் என்னுடைய தலைமைக் கருப்பொருளை நான் அறிவித்தபோது, ரோட்டரி ஏற்றுக்கொள்ள வேண்டிய மாற்றங்களைப் பற்றிப் பேசியபோது, அந்த மாற்றம் இவ்வளவு விரைவாக வரும் என்று நம்மில் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால், சவால்களை வாய்ப்புகளாகக் காண்பதை நான் எப்போதும் நம்புவேன். இந்த ஆண்டு, நாம் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, ரோட்டரி என்னவாக இருக்கலாம் என்பதை மறு கற்பனை செய்தோம். பல ஆண்டுகளாக, ரோட்டரியை இன்னும் நெகிழ்வுத் தன்மை கொண்டதாக, தகவமைக்கக்கூடியதாக ஆக்கும் வழிகளை நாம் பேசியுள்ளோம்.

இப்போது, இணையக் கூட்டங்கள் ஒரு வழக்கமான நடைமுறையாகிவிட்டன. சங்கங்கள் உலகெங்குமிருந்து விருந்தினர்களை அழைக்கின்றன.

சுசேனும் நானும் உலகெங்குமுள்ள ரோட்டரி குடும்ப உறுப்பினர்களைச் சந்திக்க விரும்புகிறோம்; சென்ற ஆண்டில் உங்களை நேரில் பார்க்க இயலாதது எங்களுக்கு வருத்தம்தான். ஆனால், என்னைப் பொறுத்தவரை, அது ரோட்டரியை அனுபவிக்கிற ஒரு புதிய வழியாக அமைந்தது. நாங்கள் மெய்நிகர் வழியில் உலகெங்கும் சென்றுவந்தோம். நேருக்கு நேராக நான் உங்களில் எத்தனைப் பேரைச் சந்தித்திருக்க இயலுமோ, அதைவிடக் கூடுதலாக ஆயிரக்கணக்கானோரை சந்தித்தேன்.

தலைவர் என்றமுறையில், எவான்ஸ்டனில் உள்ள என்னுடைய அலுவலகத்தில் நான் நுழையவே இல்லை. எனினும், பணிகளைச் செய்யப் புது வழிகளை நாம் கண்டறிந்தோம், பயணச் செலவுகளையும் குறைத்தோம்.

நாம் கற்றுக்கொண்டதைப் பயன்படுத்தி நம்முடைய உறுப்பினர்களுக்குப் புதிய அனுபவங்கள், வாய்ப்புகளை வழங்குவோம். நம்முடைய சங்கங்கள் வலுவாகத் தொடர வேண்டுமென்றால், ஒவ்வொரு நிலையிலும் இன்னும் இளமையான, இன்னும் பன்முகத்தன்மை கொண்ட ரோட்டரி நமக்குத் தேவை.

பன்முகத்தன்மை என்பதன் பொருள் பகுதிக்குப் பகுதி மாறுபடலாம். ஆனால், எல்லாப் பின்னணி கொண்ட மக்களையும் வரவேற்கவேண்டும் என்று நான் உங்களை ஊக்குவிக்கிறேன். நாம் அனைவரும் செய்யக்கூடிய இன்னொரு விஷயம், பெண்களின் எண்ணிக்கையைப் பெருக்குவது, அவர்களுடைய பங்களிப்பை எல்லா இடங்களிலும் மிகுதியாக்குவது.

பலர் இப்போது ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்களைச் சமமானவையாகப் பார்ப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இந்தத் திசையில் தொடர்ந்து முன்னேறுவோம், நாம் செய்யும் ஒவ்வொன்றிலும் பங்குபெறுவதற்கு ரோட்டராக்ட் சங்கங்களை அழைப்போம். இளம் தலைவர்களை அணுகுவதற்கான எந்த வாய்ப்பையும் வீணடிக்க வேண்டாம்; ரோட்டராக்டுடன் இணைந்து செயல்படுவோம், நம்முடைய பல புதிய அணுகுமுறைகளில் முதலீடு செய்வோம்.

நியாயமான வழங்குதலுக்காகக் குரல் கொடுப்பது மற்றும் தவறான தகவல்களை எதிர்ப்பது ஆகியவற்றின் வழியாகத் தடுப்பு மருந்து வழங்கல் பரப்புரைகளை ஆதரித்துக் கோவிட்-19ஐ எதிர்க்கும் ரோட்டரியின் பணியை எண்ணி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஆனால், இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைப்பதற்காக நாம் செய்யக்கூடிய அனைத்தையும் நாம் தொடர்ந்து செய்யவேண்டும். அத்துடன், சுற்றுச்சூழல் என்ற ஒரு புதிய கவனப் பகுதியில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகளும் நமக்குக் கிடைத்துள்ளன.

ரோட்டரி வாய்ப்புகளைத் திறக்கிறது என்று நான் முதன்முறையாக அறிவித்தபோது இருந்த உலகம் வேறு, இன்றைய உலகம் வேறு. இந்த ஆண்டில், ரோட்டரி என்னவாக இருக்க இயலும் என்பதை நாம் எப்படி மேம்படுத்தினோம் என்பதை எண்ணி நாம் அனைவரும் பெருமைப்படலாம். நாம் தொடர்ந்து இந்தப் பாதையில் முன்னேறுவோம்.

உலகை மாற்றுவதற்கு நமக்கு உதவக்கூடிய பல வாய்ப்புகள் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன. இன்னும் சிறந்த சாதனைகளைச் செய்வதற்காகக் கதவுகளைத் திறக்கத் தயாராவோம். புதிய யோசனைகளுக்கான அந்தக் கதவுகளை நாம் திறக்கும்போது, நம் மனங்களும் நம் இதயங்களும் திறந்துகொள்ளும். ரோட்டரியில் நாம் செய்கிற ஒவ்வொன்றும், எங்கோ எவருக்கோ இன்னொரு வாய்ப்பைத் திறக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஹோல்கர் நாக்
RI தலைவர்

தொலைதூரத் துயரம்

கோவிட் தொற்று இரண்டாவது அலை இந்தியாவின் பல பகுதிகளில் வீசி வரும் நிலையில், ஏறக்குறையை ஒவ்வொரு குடும்பத்தினரும் தனிப்பட்ட முறையில் ஏதாவது ஒரு வகையில் இழப்பைச் சந்தித்து வருகிறார்கள். ஆரோக்கியமாக இருப்பவர்கள்கூட திடீரென மரணிக்க நேரிடுகிறது. ஒரு காலத்தில் இந்திய மருத்துவ முறைகளும், வசதிகளும் சிறந்தவை என்று எண்ணி நாம் பெருமைப் பட்டுக்கொண்டிருந்தோம். ஆனால், இப்போது அதுவே ஒரு கேள்விக்குறியாகி உள்ளது.

எனினும் நமது உறவினர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு ஆக்சிஜன் கிடைக்காமல் தவிப்பதையும், மருத்துவ மனையில் இடம் கிடைக்காமல் இருக்கும் நிலையையும் பார்க்கும்போது மனம் வலிக்கிறது. ஆனாலும் இந்தியாவில் தில்லி, மும்பை, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட இடங்களில் தினசரி தொற்று அளவு ஏறக்குறைய 4 லட்சத்தை எட்டிவிட்டது. மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு போதுமான அளவு ஆக்சிஜன் அளிக்க முடியவில்லை. மருத்துவமனைக்கு வெளியிலும் ஆக்சிஜன் படுக்கைகள் கேட்டு பலரும் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. ஏற்கெனவே மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் பலர் உயிர்காக்கும் ஆக்சிஜன் பற்றாக்குறையால் உயிரிழக்க நேரிட்டுள்ளது.

கோவிட் தொற்றுப் பரவல் தாக்குதலுக்கு ரோட்டரி நியூஸ் அறக்கட்டளை குடும்பத்தினரும் தப்பவில்லை. எங்கள் குழுவின் உறுப்பினரான சித்ராவின் கணவர், 48 வயதில் தமிழக அரசுப் பணியில் இருந்தவர் பலியாகி விட்டார். தந்தையை இழந்து தவிக்கும் கல்லூரி செல்லும் மகனுக்கு இனி சித்ராதான் பாதுகாவலர். இதேபோல K விசுவநாதன் என்பவர் தாயாரை இழந்துவிட்டார் மற்றும் பிரதீஷ் தந்தையை இழந்து தவிக்கிறார். இந்த மூவரும் ஆரோக்கியமாக இருந்த நிலையிலும் கோவிட் தொற்று அவர்களின் உயிரைப் பறித்துவிட்டது. இந்த நெருக்கடியான கால கட்டத்தில் பெரும்பாலானவர்கள் தங்கள் சொந்தங் களை இழந்து துக்கத்தில் ஆழ்ந்திருப்பார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

கோவிட் வைரஸ் தொற்றால் பலியாவோர் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், பொது முடக்கம், மாநிலத்தின் எல்லைகள், ஏன் நாட்டின் எல்லைகள் மூடல் ஆகியவை காரணமாக நமது சொந்தங்களின் உயிரிழப்பால் ஏற்படும் துக்கத்தைக் கூட தொலைவில் இருந்துதான் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. மெய்நிகர் சந்திப்பு மூலமே அவர்களுக்கு நாம் இறுதி மரியாதை செலுத்த முடிகிறது. ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் வசித்து வருகின்றபோதிலும், கரோனா தொற்று காரணமாக எல்லைகள் மூடப்பட்டதால், உயிரிழந்த தங்கள் தாய், தந்தை, குழந்தைகள், உறவினர்கள் என சொந்தங்களையும், பிரியமான நண்பர்களின் முகத்தை பார்க்கக்கூட செல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

எனக்குப் பிடித்த பெண் எழுத்தாளர்களில் ஒருவரான சிமாமந்தா நகோஸி அதிசி, கடந்த ஆண்டு ஜூன் மாதம் தந்தையை இழந்த துயரத்தை, சமீபத்தில் தாம் எழுதிய “Notes on Grief” புத்தகத்தின் மூலம் வெளிப்படுத்தி யுள்ளார். தந்தை அவரின் சொந்த ஊரான நைஜீரியாவில் இருந்தார். அதிசி அமெரிக்காவில் வசித்து வருகிறார். பொது முடக்கம் காரணமாக எல்லைகள் மூடப்பட்டன.

என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. என்னுடைய தந்தைக்கு 88 வயது. அவரைவிட வயதானவர்கள் ஆரோக்கியத்துடனும் உயிருடனும் இருக்கும்போது என் தந்தையின் மரணம் சொல்ல முடியாத துயரத்தை ஏற்படுத்தி மனதை நெருடுகிறது. என் கோபம் எனக்கு அச்ச உணர்வை ஏற்படுத்துகிறது, பயம் எனக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. நான் ஏன் கோபத்துடனும், அச்சத்துடனும் இருக்கிறேன்? நான் படுக்கைக்குச் செல்லவும், எழுந்திருக்கவும் பயப்படுகிறேன். எனது ஆன்மா சிதறிக் கொண்டிருக்கும்போது மூச்சு விடுதல் மட்டும் மாறாமல் இருக்கிறது. உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது எப்படி? நான் அமெரிக்காவில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். நான் விரக்தியிலும், வலியிலும் துடிக்கிறேன். நைஜிரிய விமான நிலையம் எப்போது திறக்கப்படும் என்ற செய்தியைத் தேடி காத்திருக்கிறேன். ஆனால், அது நைஜிரிய நிர்வாகத்தினருக்கே தெரியாது போலும்!

முடிந்தால் அதிசியின் Notes on Grief புத்தகத்தைப் படியுங்கள். அது கடினமான சூழ்நிலையை வெற்றிகரமாக சமாளிக்க உங்களுக்கு உதவும்.

ரஷீதா பகத்

Governors Council

RI Dist 2981	DG R Balaji Babu
RI Dist 2982	DG K S Venkatesan
RI Dist 3000	DG A L Chokkalingam
RI Dist 3011	DG Sanjiv Rai Mehra
RI Dist 3012	DG Alok Gupta
RI Dist 3020	DG Muttavarapu Satish Babu
RI Dist 3030	DG Shabbir Shakir
RI Dist 3040	DG Gajendra Singh Narang
RI Dist 3053	DG Harish Kumar Gaur
RI Dist 3054	DG Rajesh Agarwal
RI Dist 3060	DG Prashant Harivallabh Jani
RI Dist 3070	DG CA Davinder Singh
RI Dist 3080	DG Ramesh Bajaj
RI Dist 3090	DG Vijay Arora
RI Dist 3100	DG Manish Sharda
RI Dist 3110	DG Dinesh Chandra Shukla
RI Dist 3120	DG Karunesh Kumar Srivastava
RI Dist 3131	DG Rashmi Vinay Kulkarni
RI Dist 3132	DG Harish Motwani
RI Dist 3141	DG Sunnil Mehra
RI Dist 3142	DG Dr Sandeep Kadam
RI Dist 3150	DG Nalla Venkata Hanmanth Reddy
RI Dist 3160	DG B Chinnapa Reddy
RI Dist 3170	DG Sangram Vishnu Patil
RI Dist 3181	DG M Ranganath Bhat
RI Dist 3182	DG B Rajarama Bhat
RI Dist 3190	DG B L Nagendra Prasad
RI Dist 3201	DG Jose Chacko Madhavassery
RI Dist 3202	DG Dr Hari Krishnan Nambiar
RI Dist 3211	DG Dr Thomas Vavanikunnel
RI Dist 3212	DG P N B Murugadoss
RI Dist 3231	DG K Pandian
RI Dist 3232	DG S Muthupalaniappan
RI Dist 3240	DG Subhasish Chatterjee
RI Dist 3250	DG Rajan Gandotra
RI Dist 3261	DG Fakir Charan Mohanty
RI Dist 3262	DG Saumya Rajan Mishra
RI Dist 3291	DG Sudip Mukherjee

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

RI இயக்குனர்

ஒருவருக்கு ஒருவர்

இந்த நோய்ப்பரவலின்போது, 4, 5, 6, 7 பகுதி ரோட்டரியில் இடம்பெற்றுள்ள ஆண்களும் பெண்களும் தங்கள் இதயத்தாலும் ஆன்மாவாலும் உழைத்து மக்களுக்கு உதவியுள்ளார்கள், இவை அனைத்தையும் உழைப்பு, புதுமைச் சிந்தனை எண்ணத்துடன் செய்துள்ளார்கள்.

ரோட்டரி நமக்குப் பார்க்கக் கண்களை அளிக்கிறது, நேசிக்க இதயத்தை அளிக்கிறது, சேவை செய்யக் கைகளை அளிக்கிறது. ரோட்டரியன்களுடைய பார்க்கும் கண்கள், நேசிக்கும் இதயம், அரவணைக்கும் கைகளால் இந்த இரண்டு ஆண்டுகள் சிறப்பாகியுள்ளன. காரணம், அவர்கள் தொட்டுள்ள வாழ்க்கைகள், அவர்கள் கொண்டுவந்துள்ள மாற்றம், பல சாதனைகள், அனுபவங்கள், நினைவுகள். ரோட்டரியன்களாகிய நீங்கள் செய்யும் அனைத்துச் சேவைகளுக்காகவும் உங்களுக்கு நன்றி!

நம்முடைய மிகச் சிறந்த ஆளுநர்கள் முன்னணியில் நின்று பேரார்வத்துடனும் ஊக்கத்துடனும் நம்மை வழிநடத்தியுள்ளார்கள். இரு தொகுப்பு ஆளுநர்களுக்கும் அவர்களுடைய குழுக்களுக்கும் பாராட்டுகள்!

ரோட்டரி செய்திகளுடைய பக்கங்கள் வழியாக உங்கள் அனைவருடனும் உரையாடுவது ஒரு சிறப்பு உணர்வாக இருந்தது. ஆசிரியர் ரஷீதா பகத் தலைமையில் ரோட்டரி நியூஸ் குழுவினர் செய்துவரும் மிகச் சிறந்த பணிக்காக அவர்களுக்குப் பாராட்டுகள்!

மாற்றம் ஒன்றுதான் எப்போதும் மாறாதது என்ற உண்மையை இந்த நோய்ப்பரவல் நமக்குக் காண்பித்துள்ளது. நேருக்கு நேர் மற்றும் மெய்நிகர் வடிவக் கூட்டங்களின் தொகுப்புதான் புதிய "இயல்பாக" மாறும் என்று தோன்றுகிறது. இதன்மூலம், நமக்கு இரண்டின் நன்மைகளும் கிடைக்கும், இதுதான் ரோட்டரியின் எதிர்காலம் என்று நான் உணர்கிறேன்.

பல திட்டங்கள், செயல்பாடுகள், ரோட்டரியன்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் பொழிந்த அன்பு, நேசத்தைக் கண்டு மாதவியும் நானும் மிகவும் நெகிழ்ந்தோம். நாங்கள் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம். RI இயக்குநர் பொறுப்பிலிருந்து நான் விடைபெறுகிற இந்த நேரத்தில், இந்த அன்பான நினைவுகளும் அவற்றின் நறுமணங்களும் இனிவரும் ஆண்டுகளில் என்னோடு இருக்கும் என்பதை நான் உணர்கிறேன். உள்வரும் இயக்குநர்கள் இரண்டாண்டுகளுக்குக் குறிப்பிடக்கூடிய ரோட்டரி சேவையை வழங்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

மிகச் சிறந்த அன்பு இருக்கும் இடத்தில் எப்போதும் அதிசயங்கள் நடக்கும்". ரோட்டரி என்னும் அந்த அதிசயத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள், ரோட்டரி புதிய வாய்ப்புகளைத் திறக்கிற இந்த நேரத்தில், வாழ்க்கைகளை மாற்றுவதற்கு நாம் அனைவரும் சேவை புரிவோம். விடைபெறுகிறேன். ரோட்டரியை அனுபவியுங்கள், உங்களை அனுபவியுங்கள்.

Dr பரத் பாண்ட்யா
RI **இயக்குனர்,** 2019–21

களின் செய்திகள்

புதிய இயல்புக்குத் தயாராகுங்கள், மெய்நிகர் உலகுக்கு வாருங்கள்

கொரோனாவைரஸ் பரவல் தொடங்கிய பின் ஒரு புதிய உலகம் அறிமுகமாகியிருக்கிறது, இது பாலினச் சமநிலையைக் கொண்டுவருகிறது, வீட்டு, குடும்பப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளச் செய்கிறது, மனத் தடைகளை உடைத்துக் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் பெண்களுக்கு வாய்ப்புகளைக் கண்டறிகிறது. இது நாட்டின் மேம்பாட்டுக்கு அவசியமாகும்.

மெய்நிகர் கூட்டங்கள் இப்போது இயல்பாக நடத்தப்படுகின்றன; பயிற்சிகள் தோழமையும் மெய்நிகர் உலகில் நடக்கிறது. இந்தப் பரந்த உலக மாற்றத்தால், ரோட்டரியன்களுக்கும் குறிப்பிடக்கூடிய அளவு கற்றல் அனுபவம் கிடைக்கிறது, அவர்கள் தடைகளை உடைக்கிறார்கள், மாற்றத்துக் கேற்பத் தங்களைத் தகவமைத்துக்கொள்கிறார்கள்.

தோழமை என்பது, ரோட்டரியின் மைய மதிப்பீடுகளில் ஒன்று. ஜூன் மாதம், ரோட்டரியின் தோழமை மாதமாகும். இந்த மாதத்தில் ரோட்டரியன்கள், அவர்களுடைய துணைவர்கள், ரோட்டராக்டர்கள் குழுவாக ஒன்று சேர்ந்து மதிப்புமிக்க பொழுதுபோக்குச் செயல்பாடுகளில் பொது ஆர்வத்தைப் பகிர்ந்து கொள்வார்கள். பிற தொழில் வல்லுனர்களுடன் பழகுவதன் வழியாக நம்முடைய தொழில் சார்ந்த முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கும், சேவைக்கான புதிய வாய்ப்புகளை ஆராய்வதற்கும் இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

மாற்றத்துக்கேற்ப விரைவாகவும் செயல்திறனோடும் தங்களைத் தகவமைத்துக் கொண்டு, தங்களுடைய அனைத்துப் பயிற்சிகள் மற்றும் தோழமைக் கூட்டங்களையும் மெய்நிகர் தளங்களில் நடத்துகிற DGEக்களை நான் பாராட்டுகிறேன். பாட்டுக்குப் பாட்டு, தம்போலா, இசை மற்றும் நடனப் போட்டிகள், குடிமையியல் ஆளுமைகளுடன் சந்திப்பு போன்ற பல புதுமைச் சிந்தனை கொண்ட தோழமைக் கூட்டங்களை நான் கண்டுள்ளேன். இந்த மாற்றம் நமக்கு உண்மையில் நல்ல பலனை அளித்துள்ளது.

அனைத்து DGகளும் தங்களுடைய OCVக்களை மெய்நிகரில் நடத்த வேண்டும், 100% உறுப்பினர் தக்கவைத்தலுடன் தங்கள் சேவை ஆண்டை நிறைவுசெய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மெய்நிகர் தளத்தைப் பயன்படுத்தி உங்கள் உறுப்பினர்கள் அனைவரோடும் பேசுங்கள், அவர்களில் சேவைப் பேரார்வத்தை ஊக்குவியுங்கள், ஜூன் மாதத்தில் உங்கள் சங்கத்தலைவர்கள் மூன்று புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என்று ஊக்குவியுங்கள். உறுப்பினர் எண்ணிக்கைதான் நம்முடைய ஒரே நீடித்திருக்கும் சொத்து என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

கமல் சங்வி
RI இயக்குனர், 2019–21

Board of Permanent Trustees & Executive Committee

PRIP Rajendra K Saboo	RI Dist 3080
PRIP Kalyan Banerjee	RI Dist 3060
RIPE Shekhar Mehta	RI Dist 3291
PRID Panduranga Setty	RI Dist 3190
PRID Sushil Gupta	RI Dist 3011
PRID Ashok Mahajan	RI Dist 3141
PRID P T Prabhakar	RI Dist 3232
PRID Dr Manoj D Desai	RI Dist 3060
PRID C Basker	RI Dist 3000
TRF Trustee Gulam A Vahanvaty	RI Dist 3141
RID Dr Bharat Pandya *Chairman, Rotary News Trust*	RI Dist 3141
RID Kamal Sanghvi	RI Dist 3250
RIDE A S Venkatesh	RI Dist 3232
RIDE Dr Mahesh Kotbagi	RI Dist 3131

Executive Committee Members (2020–21)

DG Sanjiv Rai Mehra Chair – Governors Council	RI Dist 3011
DG Sudip Mukherjee Secretary – Governors Council	RI Dist 3291
DG Sangram Vishnu Patil Secretary – Executive Committee	RI Dist 3170
DG Prashant Harivallabh Jani Treasurer – Executive Committee	RI Dist 3060
DG S Muthupalaniappan Member – Advisory Committee	RI Dist 3232

ROTARY NEWS / ROTARY SAMACHAR

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

ROTARY NEWS / ROTARY SAMACHAR

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

ஆவலுடன் எதிர்நோக்கும் நேரம்

எதிர்காலத்தை எண்ணி எனக்கு எந்த அச்சமும் இல்லை என்று ஒருமுறை சொன்னார் வின்ஸ்டன் சர்ச்சில், அதன் மர்மங்களை ஆவலுடன் எதிர் நோக்குவோம், அதை நம் கண்களிலிருந்து மறைக்கும் திரைகளைக் கிழித்து எறிவோம், தன்னம்பிக்கை, துணிச்சலுடன் முன்னேறுவோம்.

சர்ச்சில் தன்னுடைய மிகப் புகழ் பெற்ற சில சொற் பொழிவுகளில் நாம் ஒன்றாக முன்னேறுவோம் என்கிற சொற்றொடரைப் பயன்படுத்துவார். போரினால் சிதைந்திருந்த தன்னுடைய நாட்டைத் துணிச்சலுடன் வழிநடத்துவதற்கு அவருக்குத் தெரிந்த ஒரே வழி, எதிர்காலத்தை ஆவலுடன் எதிர்நோக்குவதுதான்.

ஒவ்வொரு தலைமுறையும் தனக்கே உரிய சவால்களை எதிர்கொள்கிறது; நாம் நம்முடைய சவாலை வாழ்ந்து கொண்டிருக்கிறோம், இந்தச் சவாலால் நம்மைத் தடுத்து நிறுத்த இயலாது.

ஓராண்டாக மக்களால் ஒருவரையொருவர் சந்திக்க இயலவில்லை, குடும்பங்கள் தனித்தனியாக இருக்கின்றன, தொழில்கள் முன்னேறத் தடுமாறுகின்றன எனினும், பல துறைகளில் நாம் முன்னேறியுள்ளோம். ரோட்டரி அறக்கட்டளை நல்கைகளின் வழியாகச் சங்கங்களும் மாவட்டங்களும் நோய்ப்பரவலால் பாதிக்கப்பட்ட தங்கள் சமூகங்களுக்குப் படைப்புணர்வுள்ள தீர்வுகளைக் கொண்டுவந்தார்கள். மார்ச் 2020முதல் இந்த அறக்கட்டளை கோவிட்-19 தொடர்பான முன்னெடுப்புகளுக்காக 34 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையை நல்கையாக வழங்கியுள்ளது.

நம்முடைய பன்னாட்டு நல்கைகளுக்கான தேவை மிகக் கூடுதலாக இருந்தது. இவை எந்த அளவு புகழ்பெற்றிருந்தன என்றால், தேவைகளை வளங்களுடன் சமநிலைப்படுத்திக் கூடுதல் மாவட்டங்களைப் பங்குபெறச் செய்வதற்கான ஒரு கவனமான முயற்சியாக, 1 ஜூலையில் தொடங்கும் நல்கை நிதியளித்தல் கொள்கையை நாம் மாற்றவேண்டியிருந்தது.

இந்த ஆண்டு, ரோட்டரி அறக்கட்டளை துணிவாக முன்னேறியது, புதிய சாதனைகளைச் செய்தது: சுற்றுச் சூழலை ஒரு கவனப் பகுதியாக அங்கீகரித்ததன் மூலம் அறக்கட்டளை தன் வீச்சை விரிவாக்கியது; ஜாம்பியாவில் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகங்களில் மலேரியாவைப் பெருமளவு குறைக்கும் இலக்கைக் கொண்ட, ரோட்டரியன்கள் வழிநடத்தும் ஒரு திட்டத்துக்கு நம்முடைய முதல் அளவுத் திட்டத்தை வழங்கினோம். நோய்ப்பரவல் காரணமாக 2020ல் சில மாதங்களுக்கு நம்முடைய இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கல் செயல்பாடுகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தாலும், ஆண்டின் நடுவில் அவை மீண்டும் செயல்படத் தொடங்கின. இளம்பிள்ளைவாதம் இல்லாத ஓர் உலகத்தை நோக்கிய நம்முடைய ஒருங்கிணைந்த பயணத்தில் ஒரு மிகப்பெரிய முன்னேற்றத்தையும் நாம் ஒருவழியாகக் கொண்டாட இயன்றது: ஆப்பிரிக்கப் பகுதியில் இப்போது "வைல்ட் போலியோவைரஸ்" இல்லை என்று உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவித்தது.

மேலும், மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கப் பகுதியில் ஒரு ரோட்டரி அமைதி ஐயத்தை அமைப்பதற்கு முழுமையாக நிதியளிப்பதற்காக ஒட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் அறக்கட்டளை நம்முடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. வரவேற்கவேண்டிய இந்த முன்னேற்றத் தால், நீடித்த அமைதி கைக்கு எட்டாமலே இருக்கிற ஒரு பகுதியில் உறுதியான ஒரு பங்களிப்பை வழங்கும் வாய்ப்பு ரோட்டரிக்குக் கிடைத்துள்ளது.

ரோட்டரி என்பது, எங்கும் நன்மையைப் பரப்புவதற் கான ஒரு மிகச் சிறந்த ஆற்றல் என்பதையும், நாம் நிற்காமல் முன்னேறுவதற்கு நீங்கள்தான் காரணம் என்பதையும் நம் சாதனைகள் நமக்கு நினைவுபடுத்துகின்றன. இதை எழுதும்போது, 410 மில்லியன் நிதி திரட்டுகிற நம் இலக்கில் நாம் 282 மில்லியனுக்குமேல் திரட்டியுள்ளோம், முழு நிதியையும் திரட்டுகிற பாதையில் முன்னேறி வருகிறோம். இந்த ஆண்டு நாம் செய்துள்ள மிகச் சிறந்த பணியும், அடுத்த ஆண்டும், எதிர்வரும் ஆண்டுகளிலும் நாம் செய்யப்போகிற பணியும் உங்கள் ஆதரவால்தான் சாத்திய மாகிறது, இதற்கு உங்களுக்கு நன்றி.

உலகுக்கு நம்முடைய மிகச் சிறந்த பரிசுகளில் ஒன்றான இந்த அறக்கட்டளையைத் தொடர்ந்து இயங்கச் செய்யும் உங்களுக்கு, ரோட்டரி அறக்கட்டளை அறங் காவலர்களுடைய சார்பாக என் இதயப்பூர்வமான நன்றி.

Ravi

KR ரவீந்திரன்
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

மனித குலத்திற்கு சிறப்பான சேவை செய்ய நன்கொடை

நேற்றுதான் நாம் இளம்பிள்ளை வாதத்தை நீக்கும் நிலையை நெருங்கி விட்டதாகத் தோன்றியது. இன்று, விரைவாகத் தன்னை மாற்றிக்கொள்கிற, எந்தப் புவியியல் வேறுபாட்டையும் மதிக்காத, யாரையும் விட்டு வைக்காத ஒரு வைரஸ் நம்மைத் திகைக்கவைக்கிறது. நாம் அனைவரும் அன்புக்குரியவர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்களுடைய இழப்பைத் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்துள்ளது. இதை நான் எழுதும் போது கூட, சில பகுதிகளில் மக்கள் ஆக்ஸிஜன், தீவிரப் பராமரிப்பை நாடுகிறார்கள், மருத்துவமனைப் படுக்கைகளைப் பரபரப்புடன் தேடுகிறார்கள்.

இந்தப் பூமியில் நீங்கள் செய்யக்கூடிய மிக முக்கியமான விஷயங்களில் ஒன்று, மக்களிடம் நீங்கள் தனியாக இல்லை என்று சொல்வது என்றார் நாவலாசிரியர் ஷன்னான் அல்டெர். மிகப் பெரிய மனிதத்தன்மை நெருக்கடி கொண்ட இந்த நேரங்களில், மிகுந்த தேவை உள்ளவர்களை நாம் அணுகவேண்டும், நம்மால் வழங்க இயன்ற எந்த உதவியையும் ஆதரவையும் அவர்களுக்கு வழங்கவேண்டும்.

பல நேரங்களில், இந்த உதவி, மருத்துவமனைப் படுக்கைகள், ஆக்சிஜன் செறிவூட்டிகள், தீவிரப் பராமரிப்பு, மருந்துகள் போன்றவை கிடைப்பதுபற்றிய தகவல்களாக இருக்கலாம். தேவை நிறைந்த நேரத்தில், நம் ரோட்டரி அறக்கட்டளையும் இந்தியா முழுவதுமுள்ள ரோட்டரியன்களும் வளங்களைத் திரட்டிச் சமூகத்தின் எல்லாப் பிரிவினருக்கும் உதவி வழங்குகிறார்கள்.

முன்பு எப்போதையும் விடக் கூடுதலாக, இப்போது நாம் பிறருக்காக இருக்க வேண்டும்; நமக்கு நெருங்கியவர்கள், நம் அன்புக்குரியவர்களுக்காக மட்டுமில்லை, முழு மனிதகுலத்துக் காகவும் இருக்கவேண்டும். RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சேகர் மேத்தா பொருத்தமாகச் சொல்வது போல், வாழ்க்கைகளை மாற்றுவதற்காகச் சேவை செய்ய வேண்டும். ரோட்டரி மற்றும் TRF வழியாகதான் நாம் தொடர்ந்து சேவை செய்கிறோம், வாழ்க்கைகளை மாற்றுகிறோம், நன்மை செய்கிறோம், இந்தியாவில் மட்டுமில்லை, உலகிலும்.

ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கப்படும் ஒவ்வொரு நன்கொடையும், தேவை உள்ளவர்களுக்கு ஒரு மாற்றத்தை உண்டாக்கப் பயன்படுத்தப்படும், அதன்மூலம், உலகில் நன்மை செய்யும். ஆகவே, தயவுசெய்து உங்கள் இதயங்களை, பணப்பைகளைத் திறங்கள், தாராளமாக வழங்குங்கள்.■

குலாம் வாஹன்வதி
TRF அறங்காவலர்

மத்திய கிழக்கு அல்லது வடக்கு ஆப்பிரிக்காவில் அமைதி மையத்துக்கு 15 மில்லியன் டாலர் நன்கொடை

ஓட்டோ மற்றும் பிரான் வால்டர்

ஓட்டோ மற்றும் பிரான் வால்டர் அறக்கட்டளை. மத்திய கிழக்கு அல்லது வடக்கு ஆப்பிரிக்காவில் ரோட்டரி அமைதி மையம் ஏற்படுத்த ரோட்டரி அறக்கட்டளைக்கு 15.5 மில்லியன் டாலர் நிதியுதவி செய்வதாக உறுதி அளித்துள்ளது. இந்த புதிய மையம் அந்த பிராந்தியத்தில் அமைதியை கட்டமைப் பதில் கவனம் செலுத்தும் தொழில்முறை மேம்பாட்டு பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும். அமெரிக்காவின் மைன், பூத்பே துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் வால்டர் அறக்கட்டளையின் இந்த நன்கொடை, மையத்தின் தொடக்க மற்றும் இயக்கச் செலவுகளுக்கு நிதியுதவி அளிக்கும். அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவர்கள் படிப்பதற்கு உதவித்தொகையும் வழங்க பயன்படுத்தப்படும்.

2024ம் ஆண்டில் ஓட்டோ மற்றும் பிரான் வால்டர் ரோட்டரி மையம் ஏற்படும்போது அதற்கான ஒரு கூட்டாளரை TRF தேர்வு செய்யும். மேலும் ரோட்டரி அமைதி மையத்தில் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் தொழில்முறை படிப்புகள் தொடங்கும். ஓட்டோ மற்றும் பிரான் வால்டர் ஆகியோர் அமைதி மற்றும் இதர நல்ல பணிகளுக்காக இந்த குடும்ப அறக்கட்டளையை ஏற்படுத் தியுள்ளனர். அவர்களின் இறப்புக்குப் பிறகும் அந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது. ஓட்டோ, நியூயார்க் நகர ரோட்டரி சங்க உறுப்பினராக இருந்தவர்.

ஓட்டோ மற்றும் பிரான் இருவரும் 2003 ஆம் ஆண்டு இறந்த பிறகு, அவர்களுடன் சட்டம் படித்தவரும் நண்பருமான ரோட்டேரியன் பிராங்க் ஹெல்மேன் அறக்கட்டளையின் தலைவராகவும் இயக்குநராகவும் ஆனார். அவரும் அவரது மனைவி மார்த்தாவும் அறக்கட்டளையின் தற்போதைய தலைவர் என்ற முறையில், TRFக்கு 15.5 மில்லியன் டாலர் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளனர். இவர்கள் இருவரும் பூத்பே போர்ட் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்களாவார்கள்.

TRFன் அமைதி முயற்சிக்கான மிகப்பெரிய நன்கொடையாளர் குழுவின் தலைவராகவும் மார்த்தா சேவையாற்றி வருகிறார்.

©rotary.org

கனவுகள் மெய்ப்படும்
சேகர் மேத்தா

ரஷ்தா பகத்

ரோட்டரி மாவட்டம், 3291-க்கு உட்பட்ட கொல்கத்தா மாநகர ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த, உள்வரும் RI தலைவர் சேகர் மேத்தாவை உற்று கவனித்து வருபவர்களுக்கும் அவருடன் பணியாற்றி வருபவர்களுக்கும் அவரது கனவு மிகப்பெரியது என்பது தெரியும். இந்திய ரோட்டரி உலகில் அவரது எல்லையற்ற ஆற்றல் பரந்து பட்டது. அவருடன் பணியாற்றுபவர்கள் கிசுகிசுப்பது, "அவர் எப்போது தூங்குவார்" என்பதுதான். 2020ம் ஆண்டு ஜனவரியில் ரோட்டரி இந்தியா நூற்றாண்டு இறுதிக் கொண்டாட்டங்களை ரோட்டரி இயக்குநர் கமல் சங்வி, கொல்கத்தாவில் ஒருங்கிணைத்த போது, இறுதிக்கட்ட பணிகளைப் பார்வையிட அவர் நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு அதிகாலை 2.30 மணிக்கு வந்ததாக பகிர்ந்து கொண்டார்.

மூத்த ரோட்டேரியன்களுக்கு அவரிடமிருந்து அதிகாலை 2 மணிக்கு அழைப்பு வரும். "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?", அடுத்த பெரிய யோசனை/திட்டத்திற்குள் மூழ்குவதற்கு அவர் தயாராகியுள்ளார் என்பது புரியும். அவரது திட்டமிடல் விரிவாகவும், நுணுக்கமாகவும் இருக்கும். எந்தவொரு திட்டத்திலும் அவர் கொடுக்கும் கால அவகாசம் நீண்டிருந்தாலும், வேலை கடினமாகவே இருக்கும். அவரது குழுவும் களமிறங்க தயாராக இருக்கும். அவர், எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து தாம் மேற்கொள்ளும் மெகா திட்டங்களை சரியான நேரத்தில் மற்றும் சரியான முறையில் நிறைவேற்றுவதில் வல்லவர்.

2013ல் ஹைதராபாதில் அவர் ஏற்பாடு செய்த தெற்காசிய மாநாட்டிற்கு (SouthAsia Summit) 6,000 ரொடேரியன்கள் வருகை தந்து சிறப்பித்தனர். அதே போல, அவருடைய எண்ணற்ற படிப்பறிவு கூட்டங்கள் மற்றும் ஜனவரி 2020ல் கொல்கத்தாவில் நடைபெற்ற ரோட்டரி நூற்றாண்டு விழாவும் சிறப்பாக இருந்தன.

நாங்கள் அடிக்கடி உரையாடும் போது, அவர் இப்படிக் கூறுவார்: தலைவர் என்பவர் மிகப் பெரிய கனவு காணவேண்டும். மேலும் தலைவர்களை உருவாக்க அவர் சரியான நபர்களை தேர்வு செய்யவேண்டும். ரோட்டரி பயணத்தில் அவருக்கு நேர்ந்தது போலவே.

இந்தியாவில் கோவிட் தொற்று இரண்டாவது அலை வீசும் நேரத்தில் நேருக்கு நேர் சந்திப்பு என்பது இயலாது என்பதால் நாங்கள் மெய்நிகர் வழியில் சந்தித்து உரையாடினோம். நீங்கள் மிகப்பெரிய கனவு காணவும், மெகா திட்டங்களை நிறைவேற்றவும் தூண்டியது எது? எழுத்தறிவு இயக்கமா, இதய அறுவைச்சிகிச்சைகளா அல்லது பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்ததா என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் புன்னகையுடன், என்னை தட்டியெழுப்பியது இந்தியாவின் மூத்த ரோட்டரி தலைவர் ஒருவர். பின்னர் அதுவே எனது

வாழ்க்கை முறையானது. உதாரண மாக முன்னாள் இயக்குநர் சுஷில் குப்தா ஒரு கேள்வி மூலம் என்னை செயல்படத் தூண்டினார். 2004ம் ஆண்டு இந்திய கடலோரப் பகுதிகளில் சுனாமி அலை ஏற்பட்டபோது, அவர் என்னை அழைத்து, சேகர், நீ என்ன செய்யப் போகிறாய்? நான் பதில் பேசவில்லை. அவர், என்னிடம், அந்தமான் நிகோபார் பகுதி உங்களுடையது என்றார். அவ்வளவுதான்!

ஆனால், அந்த அழைப்பு எதைத் தூண்டியது என்ற விவரங்களை பார்ப்பதற்கு முன் நாம் மேத்தாவின் ஆரம்பகால ரோட்டரி பயணத்தை பார்ப்போம். தொழில் முறையில் ஒரு பட்டயக்கணக்காளர் (CA) என்றாலும் ரோட்டரியில் சேர்ந்த போது அவருக்கு வயது 25. சேவை என்பது அவர் மனதில் கடைசியாகவே இருந்தது. அவர் ஒரு பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. வீடு, அலுவலகம், காரில் பயணம் என்றாலும் சொகுசு வாழ்க்கையாகவே இருந்தது. உலக மக்களின் பிரச்னை குறித்து அவருக்கு எதுவும் தெரியாது. பெற்றோர் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார்கள். நட்பு வட்டத்தை விரிவுபடுத்தவே அவர் ரோட்டரியில் சேர்ந்தார். சேவை செய்யும் எண்ணம் அவரிடம் அப்போது இல்லை.

அடுத்த ஒரு மாதத்தில் ரோட்டரிக்கு மலர் கொண்டுவரும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது அவரின் மனத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தியது. பலரும் பங்களிக்க மலர் வெற்றிகரமாக வெளிவந்தது. ஆனால், அதன் வெற்றிக்காக சேகர் பாராட்டப்பட்டார். மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள இதுதான் சிறந்த வழி என்பதை அவர் புரிந்து கொண்டார். அடுத்து சங்கத்தின் செய்திமடல் தயாரிக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுவும் அவருக்கு நல்ல பெயரை ஏற்படுத்திக் கொடுத்தது. தொடர்ந்து ஈடுபாட்டுடன் செயல்பட்ட அவருக்கு சங்கத்தின் இயக்குநர், செயலாளர், தலைவர் பதவி தேடிவந்தது. இறுதியில் மாவட்ட ஆளுநராகவும் பதவி வகித்தார்.

அவருடைய வழிகாட்டியான முன்னாள் மாவட்ட ஆளுநர் சந்திரமோகன், அவரிடம், உங்கள் குறிக்கோள் என்ன என்பதை எழுதிவைத்துச் செயல்படுத்தவும் என்று அறிவுரை கூறினார். அதன்படி அவர் ஒரு பட்டியல் தயாரித்து. அந்த ஆண்டு மில்லேனியம் ஆண்டு என்பதால் அதற்கு "மில்லியேனியம் கனவுகள்" என பெயரிட்டார். பெரியதாக கனவுகாணும் வழக்கம் அவருக்கு 20 ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டது. முதலில் நான் எனது கனவுகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டபோது பலரும் வெறுப்பூட்டும் வகையில் சிரித்தார்கள். முதலில் அவர்கள் உங்களை புறக்கணிப்பார்கள், அடுத்து கேலி செய்வார்கள், அடுத்து எதிர்ப்பார்கள் ஆனால், கடைசியில் நீங்கள் வென்று வீடுவீர்கள் என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல் எனக்கு பலமுறை ஏற்பட்டது. நான்

சேகர் மேத்தா RID 3020 PDG G V *மோகன் ப்ரசாத்துடன் ஒரு உருது பள்ளியிற்கு மின்வழி கற்றல் வசதி கொடுக்கிறார்.*

அதைப் பற்றி கவலைப்படவில்லை. நான் தொடர்ந்து வேலை செய்தேன். பெரிதாக கனவுகண்டேன். நான் கட்டுமானத் தொழிலதிபர் என்பதால், ரோட்டரி மூலம் ஏழைகளுக்கு 500 வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று கற்பனை செய்து பார்த்தேன்.

உடனடியாக எனது கனவை PETSல் தெரிவித்தேன். அதன் பிறகு சிலர் ஏழைகளுக்கு வீடுகட்டுவதற்கு நிலம் தர முன் வந்தனர். 3-H மானிய உதவிக்கான விண்ணப்பம் போடப்பட்டது. ஆனால், என்ன ஆச்சரியம். உடனடியாக அதற்கு ஒப்புதல் கிடைத்தது. என் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது. அதே ரோட்டரி ஆண்டில் எனது கனவுத் திட்டமான 500 வீடுகளில் 300 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

இது ஒரு அதிசயம். நீங்கள், உங்கள் மனதையும், இதயத்தையும் ஒருங்கிணைத்துச் செயல்பட்டால், எதுவும் சாத்தியமே என்பதை புரிந்துகொண்டேன். அதிக அளவில் தலைமைப் பாத்திரம் கிடைத்ததால், சேவை நடவடிக்கைகள் மிகப்பெரிய அளவில் வளர்ந்தது.

மீண்டும் சுனாமிக்கு வருவோம். குப்தாவின் அழைப்பை ஏற்று நான் செயல்படத் தொடங்கினேன். என்னுடன் 6 ரோட்டேரியன்கள் குழுவாக சேர்ந்துகொண்டனர். நான் குழுவினருடன் அந்தமான் சென்றேன். அங்குள்ள தொலைத்தூர தீவான ஹட்பேயில் 500 வீடுகள் கட்ட வேண்டும். அரசு ஹெலிகாப்டர் சேவை மூலம்தான் அந்த இடத்தை அணுக முடியும். அந்த சேவை எப்போது கிடைக்கும் என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது. அந்தத் தீவில் இரவு தங்குவதற்கு வசதி இல்லாததால் ஹெலிகாப்டர் எங்களை இறக்கிவிட்டு விட்டு வேறு தீவுகளுக்குச் செல்லும் பின்னர் எங்களை மீண்டும் அந்தமானுக்கு அழைத்துச் செல்லும்.

அந்த தீவுக்கு பலமுறை சென்றோம். கிரிக்கெட் வீரர் ஸ்டீவ் வாஹ் மற்றும் இந்திய அணி உதவியுடன் ரூ.55 லட்சம் நிதி திரட்டினோம். மேலும் பலரும் தாராளமனதுடன் எங்கள் திட்டத்துக்கு நிதியுதவி அளித்தனர். இறுதியில் அந்தத் தீவில் 500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

வீடுகள் கட்டப்பட்டு அவை ஒப்படைக்கப்பட்ட நாளை அவர் நினைவுகூறியபோது அவரது கண்களில் ஒளியும், அவரது முகத்தில் மகிழ்ச்சியும் ஏற்பட்டதை காணமுடிந்தது. நான் ஹெலிகாப்டரில் துணைநிலை ஆளுநருடன் பயணம் செய்தேன். தீவில் இறங்குவதற்காக ஹெலிகாப்டர் வட்டமடித்த போது பளபளக்கும் வீட்டின் மேற்கூரைகளைக் காணமுடிந்தது. நான் பல நல்ல கட்டடங்களை கட்டியிருக்கிறேன். அதற்காக பணமும் சம்பாதித்திருக்கிறேன். இங்கு நான் கட்டியவை சாதாரணமானவைதான். நான் சந்திக்காத மக்களுக்காக இந்த வீடுகளைக் கட்டியுள்ளேன். ஆனாலும், எனக்குள் ஒரு திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. தொழில் முறையில் நான்

மேத்தா மற்றும் ராஷ்ட்ரபதி குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்துடன் ராஷ்ட்ரபதி பவனில்.

சேகர் பேசுகிறார்

தலைமை: நான் ஒரு நல்ல முன்மாதிரி. எதையும் விரைந்து கற்றுக்கொள்பவன். நான் சக்கரத்தை மீண்டும் கண்டு பிடிக்க விரும்பவில்லை. மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறேன். PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் சிலரின் செயல்பாடுகளைப் பார்த்து நான் நிறைய கற்றுக்கொண்டிருக்கிறேன். இந்த தலைவர்கள் எப்படி திட்டமிடுகிறார்கள். நிகழ்ச்சி களை ஒருங்கிணைக் கிறார்கள். எப்படி பேசு கிறார்கள் என்பதைத் தெரிந்து வைத்துள்ளேன். எந்த வேலையை எடுத்துக்கொண்டாலும் அதை எப்படி சிறப்பாகச் செய்வது என்பதை கற்றுக்கொண்டுள்ளேன். எனது ரோட்டரி பயணத்தில் தந்தையும் எனக்கு ஆதரவாக இருந்துள்ளார். நான் ரோட்டரிக்காக எது செய்தாலும் அவர் ஒருபோதும் தடுத்து நிறுத்தி யதில்லை. எங்களது குடும்பத் தொழில். நான் திடீரென பிற்பகல் 2 மணிக்கு அலுவலகத்தை விட்டு சென்று விடுவேன். நான் ரோட்டரிக்காக அதிக நேரம் செலவிடுவதாக என் தந்தை ஒருபோதும் என்னிடம் சொன்னதில்லை.

எழுத்தறிவு: இந்தியாவில் உள்ள அனைவரும் எழுத்தறிவு பெறவேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்காக இந்திய ரோட்டேரியன்களை பலவகையில் ஊக்குவித்து வருவதை அவர் பெருமையாக நினைக்கிறார். இது ஒரு பெரிய சவாலாக இருந்தது. ஆனால், பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு பிறகு உருவான TEACH திட்டம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. எங்களின் மின்னணு கற்றல் முறைக்கு நல்ல வரவேற்பு உள்ளது. தினமும் லட்சக்கணக்கான குழந்தைகள் அதை தொலைக்காட்சிகளிலும், மத்திய அரசு நடத்தும் தீக்ஷா மின்-தளம் மூலமும் பார்வையிடுகின்றனர்.

TEACH திட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு பாடத் திட்டங்களை செயல் படுத்து மாறு பல்வேறு மாநிலங்களும்

(இடதிலிருந்து): மத்திய சுகாதார துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன், மேத்தா, RID பரத் பாண்ட்யா, PDG நான்சி பார்பீ, RID கமல் சங்வி இதய அறுவை சிகிச்சை பயனாளிகளுடன் கொல்கத்தா நூற்றாண்டு விழாவில்.

இப்போது ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கத்தை (RILM) அணுகி வருகின்றனர். மத்திய அரசின் புதிய வயது வந்தோர் கல்வித் திட்டம், ரோட்டரி வடிவமைத்து கல்வி அமைச் சகத்திடம் தாக்கல் செய்த வெள்ளை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதுதான். இந்தியாவில் உள்ளவர் களில் 90 சதவீதம் பேரையாவது எழுத்தறிவு பெற்றவர்களாக உருவாக்க வேண்டும் என்பதுதான் எங்கள் இலக்கு. இது ஒரு கடினமான பணியாகும். அதாவது அடுத்த 5 ஆண்டு களில் ஏறக்குறைய 20 கோடி பேரை எழுத்தறிவு பெற்றவர்களாக உருவாக்க வேண்டும். ஆனால் ரோட்டரி 50 சதவீத சுமையை ஏற்க தயாராக இருக்கிறது. அது மட்டுமல்ல, அரசுக்கு இது விஷயத் தில் தோள்கொடுத்து பணியாற்றவும் தயாராக இருக்கிறது.

ராஷியின் பங்கு:

நான் ஏற்கெனவே ஒரு முறை சொல்லியிருக்கிறேன். நான் முகம் என்றால் அவர் என் பின்னால் இருந்து செயல்படுபவர் என்று. கடந்த 18 மாதங்களாக இது மிகவும் பொருத்தமாக உள்ளது. இந்த 35 ஆண்டு களில் திட்டமிடுதல் மற்றும் ரோட்டரி திட்டங்களை செயல்படுத்துதல் தவிர வேறு வேலைகளை கவனிக்க எனக்கு நேரமில்லை. நான் எடுத்துக்கொள்ளும் மருந்து, மாத்திரைகளின் நிறம் தான் எனக்குத் தெரியுமே தவிர அவற்றின் பெயர்கூட தெரியாது. நான் பயணத்துக்கு தயாராகும் போது எனக்குத் தேவையானதை எடுத்து வைக்கிறார். நான் திட்டமிட்டு மேற்கொள்ளும் அனைத்திலும் எந்த சிக்கலும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்கிறார். எல்லாவற்றையும்விட அவரும் அனைத்துக் கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி களில் பங்கேற்கிறார். எனது பேச்சை ஒன்றுவிடாமல் கேட்கிறார். அவர் தான் எனது முதல் விமர்சகர். சேகர், இன்று நீங்கள் அதிகம் பேசி விட்டீர்கள், உங்கள் பேச்சு ரசிக்கும்படியாக இல்லை, உங்கள் பேச்சு சிறப்பாக இருந்தது என்று கூறுவார்.

மக்கள் தலைவர்:

எது உங்களை எளிதில் அணுக வைக்கிறது என்று நான் அவரிடம் கேட்டேன். ரோட்டரியில் சீனியாரிட்டியை மறந்த எந்த ஒருவரும் அவருடன் போனில் தொடர்புகொள்ள முடியமா என்பதுதான் எனது கேள்வியாக இருந்தது. அதற்கு அவர், புன்னகையுடன், என்னை பொறுத்தவரை ஒரு நல்ல தலைவருக்கு மனிதநேயம் இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பவர்களை நான் விரும்புகிறேன். அவர்களைப் பின்பற்றுகிறேன். அதனால் என்னை யாராலும் எளிதில் அணுக முடியும். நான் ஒருபோதும் என்னை RI தலைவராக எண்ணியதில்லை. எந்த ஒரு உயர்பதவியாக இருந்தாலும் கூடுதல் பொறுப்பாகவே நான் காண்கிறேன். எனது வேலைகளை நான் விருப்பத்துடன் செய்கிறேன்.

2004 சுனாமியிற்கு பிறகு அன்தமான் தீவில் ரோட்டரி அமைத்து கொடுத்த 500 வீடுகளில் ஒன்றில்.

பல வீடுகளை கட்டியிருந்தாலும், இந்த வீடுகள் மிக சிறப்பானவை என்று நான் கருதுகிறேன் என்றார் மேத்தா.

எனது மற்றொரு கனவுத் திட்டமான தங்குமிடத்தில் தேவையான பொருள்கள் வழங்கும் திட்டம் (Shelter Kits Project) நிறைவேறியது. இது இப்போது ஒரு தேசிய திட்டமாக மாறிவிட்டது. நமது பிராந்தியத்தில் தேசிய பேரிடர் ஏற்படும் போதெல்லாம் அது கேரளம், உத்தரகண்ட், ஒடிஸா, நேபாளம், மேற்கு வங்கம் அல்லது பிகாராக இருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 52 வகையான பொருள்கள் கொண்ட ஒரு தொகுப்பு ரோட்டரி சார்பில் வழங்கப்படும். பல சமயங்களில் நானே நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு என் கையாலேயே உதவிப் பொருள்களை வழங்கியுள்ளேன் என்றார் மேத்தா.

குழந்தைகளுக்கான இதய அறுவைச்சிகிச்சை திட்டத்திலும் இது நடந்தது. அகில இந்திய அளவில் சேவைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று நான் நினைத்தேன். மீண்டும் குப்தா, தூண்டுதலான ஒரு அழைப்பை விடுத்தார். சேகர், இதய அறுவைச்சிகிச்சை திட்டத்தை கையில் எடுக்க முடியுமா? வடகிழக்கில் பல குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது என்றார். எனக்கு இதயத்தின் இடது பக்கம், வலது பக்கம் எப்படி வேலைசெய்கிறது, இதயத்தில் ஓட்டை என்றால் என்ன அர்த்தம் என்றுகூடத் தெரியாது.

ஆனால், நல்லது நடக்க வேண்டும் என்றால் சில அற்புதங்கள் நிகழத்தானே செய்யும். அப்போது சங்கத்தின் உள்வரும் தலைவர் டாக்டர் ராம் பால் விதாவன், குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும் என்றார். அந்த ஆண்டு 6 பேருக்காவது இதய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவர் இருந்தார். ஆனால் நடந்தது 66 அறுவைச் சிகிச்சைகள்.

ஒரு புதிய சேவை திட்டம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் தலைவரின் மனதை உறுத்திக்கொண்டிருக்கிறது. பைடு பைப்பர் (pied piper) போல நான் ஒவ்வொரு கூட்டத்திலும் குழந்தைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று சொல்லுவேன். அதற்கு பலரும் ஆதரவு தெரிவிப்பார்கள். அதற்காக நிதி திரட்டும் நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

66 அறுவைச்சிகிச்சைகள் நடந்து முடிந்தவுடன், அடுத்த ஆண்டு 100 குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. விரைவில் இது மாவட்ட திட்டமாக மாறியது. நாடு முழுவதும் இதய அறுவைச்சி கிச்சை திட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டு இதுவரை 25,000 குழந்தைகளுக்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 2,500 அறுவைச் சிகிச்சைகள் எனது அலுவலகம் மூலம் நடந்தது. குழந்தைகள் தினமும் எனது அலுவலகத்துக்கு வருவார்கள். அவர்களின் பெற்றோர்களை நான் சந்திக்க தவறியதே இல்லை.

நான் இப்போது RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். அடுத்த 5 ஆண்டுகளில் 20,000 இதய அறுவைச் சிகிச்சை செய்வதே எனது இலக்காகும். இதை அறிந்து கொண்டதும் ரோட்டேரியன் விவேக் கௌர் தில்லியில் என்னை சந்தித்து, ஒவ்வொரு ஆண்டும் மேலும் 3,000 சிகிச்சைக்கான செலவை ஏற்பதாக எனக்கு உறுதி யளித்துள்ளார். இதையடுத்து இலக்கு 20,000த்திலிருந்து 35,000மாக உயர்ந்துவிட்டது. இதைத்தான் உச்சம்

ஆந்திர மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு "ஷெல்ட்டர் கிட்கள்" அளிக்க PDG ரவி வட்லாமணியுடன்

ராஷி பேசுகிறார்

உங்கள் கணவரிடம் உங்களுக்குப் பிடித்த குணம் என்ன? என்று நான் ராஷியிடம் கேட்டேன். அவள் புன்னகையுடன், அவர் எல்லோரிடமும் எப்போதும் ஒரே மாதிரியாகப் பேசுகிறார். அவர் சற்று உணர்ச்சிவசப்படுபவர். ஆனாலும் யதார்த்தத்துடன் இருப்பவர். அவர் திறந்த மனதுடன் பேசுவதால் அவர் மக்களிடம் எளிதில் தொடர்பு கொண்டு விடுவார். அவர் ஒரு அணியின் வீரர். அதனால் மக்கள் அவருடன் சேர்ந்து பணி செய்வதில் ஆர்வமாக இருப்பார்கள். ஒருவேளை அந்த வேலை காலை, மாலை, இரவு என தொடர்ந்தாலும் அவர்களும் கூட இருப்பார்கள். இதற்கெல்லாம் காரணம் அவர் மற்றவர்களிடம் அன்பு செலுத்துவது தான். மேலும் அவர் சுயநலமில்லாமல் சேவை செய்பவர்.

அவர், தனது ரோட்டரி பயணத்தில் பதவியைத் தேடி அலைந்ததில்லை ஆனால், உயர்நிலைக்கு வரவேண்டும் என்பதற்காக உழைத்தார். அதன் பிறகு பதவி அவரைத் தேடிவந்தது. அவர் RI இயக்குநர், RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாங்கள் இந்தியா முழுவதும் பயணம் செய்தபோது பலரும் எங்களிடம் அன்பு செலுத்தியதைக் காணமுடிந்தது. இது தன்னிச்சையானது, பதவியினால் வந்தது அல்ல.

இவை அனைத்தும் எடுத்த எடுப்பிலேயே வந்துவிடவில்லை. அவரது உள்ளார்ந்த அன்புதான் மக்கள் மனதை தொட்டது. பிறரிடம் அன்பு காட்டுவதுபோல சில காலம் நடிக்கலாம். ஆனால், நீங்கள் உண்மையானவராக

(இடதிலிருந்து): மருமகள் கீதா, ராஷி, பேரன் வீர், மேத்தா, மகன் ஷிராக், தாயார் வல்லப் குமாரி மற்றும் மகள் சாந்தினி.

இல்லாவிட்டால் அன்பு, பாசம் வராது. மேலும் அவர் நேர்மையானவர், வெளிப்படையாக பேசுபவர். ஏதாவது தவறான வழியில் செயல்படுகிறது என்றால் உடனடியாக அதை சரி செய்து விடுவார். தாம் செய்வதை மற்றவர்கள் புரிந்துகொள்ளச் செய்வார்.

அவர் ஒரு முழுமையான குடும்ப மனிதர். எங்கள் குடும்ப நிகழ்ச்சியில் எல்லோரும் அவரை சுற்றியிருப்பதையே விரும்புவார்கள். ஏனென்றால் அவர் வேடிக்கையாகவும் அன்பாகவும் பேசுபவர். நகைச்சுவையாக பேசும் குணமும் அவருக்கு உண்டு.

கடினமான தருணங்கள்

இயற்கைப் பேரழிவு ஏற்பட்ட இடங்களில் உள்ள மக்களுக்கு நிவாரண உதவி அளிக்க மேத்தாவுடன் செல்லும் போது உங்களுக்கு ஏற்பட்ட ஆபத்தான தருணங்கள் பற்றி குறிப்பிடுங்கள் என்று கேட்டதற்கு, ஆமாம், சில சமயங்களில் பயமாக இருக்கும். ஆனாலும், நாம் அளிக்கும் உதவி பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்கிறபோது அதில் நமக்கு திருப்தி ஏற்படுகிறது. காஷ்மீரில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது நடந்த சம்பவங்கள் மறக்க முடியாதவை. நாங்கள் உரியிலிருந்து லால் பால், அதாவது இந்தியா-பாகிஸ்தான் எல்லைப்பகுதிக்கு சென்றபோது (நாங்கள் நிவாரணப் பொருள்களையும் எடுத்துச் சென்றோம்.) 18 வயதான ரோட்ராக்டர் ஜீப்பை ஓட்டிச் சென்றார். மலைப்பாங்கான பகுதியில் குறுகிய சாலையில் அவர் சென்றபோது ஒருபுறம் 3,000 அடி பள்ளம். திடீரென அவர் வண்டியை பிரேக் போட்டு நிறுத்தினார். பார்த்தால் எதிரே நிலச்சரி ஏற்பட்டது தெரியவந்தது. நாங்கள் ஒரு சில நிமிடங்கள் நிலைகுலைந்து போனோம். ஒருவர் கையை மற்றவர் பிடித்துக் கொண்டோம். எங்களுடன் வந்த இரு ரோட்டேரியன்கள், நாம் திரும்பிப் போய்விடலாம் என்றார். ஆனால், சேகரின் குணம்தான் நமக்குத் தெரியுமே! நாம் இவ்வளவு தூரம் பயணித்துவிட்டோம். மேலும் நிவாரணப் பொருள்களுக்காக மக்கள் பலரும் அங்கு காத்திருப்பார்கள். எனவே நாம் சிறிது நேரம் காத்திருந்துவிட்டு பயணத்தை தொடர்வோம் என்றார். நாங்கள் புறப்பட்டுச் சென்ற பிறகும் ஒரு நிலச்சரிவு ஏற்பட்டது. அப்போது சேகர் என்னிடம், ராஷி வாழ்க்கை என்பது ரோலர்கோஸ்டர் சவாரி போன்றது. நம்முன்னர் ஏற்பட்ட நிலச்சரிவு சரி செய்யப்பட்டதும் நாம் முன்னோக்கி பயணத்தைத் தொடர்ந்தோம். நாம் எப்படி திரும்பிவரப்போகிறோம் என்பது தெரியாது. ஆனால், அது நம்மை தடுத்து நிறுத்தவில்லை. இது பூமியில் எங்களுக்கு கடைசிநாளாக இருக்குமா என்பது தெரியாமல் நாங்கள் சென்றோம்.

தொடல் என்கிறோம். நீங்கள் ஒரு இலக்கை நிர்ணயித்து செயல்பட்டால் அதற்கான வழிமுறைகள் தானே தெரியவரும் என்றார்.

கண் அறுவைச் சிகிச்சை களிலும் மேத்தா கவனம் செலுத்தி வருகிறார். இந்தியா முழுவதும் 15 கண் மருத்துவமனைகள் அமைக்கவும் உதவியுள்ளார்.

துணிச்சலான 1.3 மில்லியன் கனவு

மேத்தாவின் துணிச்சலான கனவு என்னவெனில் ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கையை தனது பதவிக்காலத்துக்குள் 13 லட்சமாக உயர்த்துவது தான். இந்த இலக்கை அடைய அவர் ஓர் எளிமையான உத்தியை வகுத்துள்ளார். அதாவது, ஒவ்வொரு உறுப்பினரும், புதிதாக ஒருவரை ரோட்டரிக்கு கொண்டு வர வேண்டும். உலகம் முழுவதிலிருந்து எனக்கு கிடைத்துள்ள பதில், இந்த குறிக்கோளை எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கையை எனக்கு அளிக்கிறது என்கிறார்.

உலகம் முழுவதிலும் ரோட்டேரியன் செய்து வரும் கோவிட் நிவாரணப்பணிகள் பெருமையளிக்கும் விதத்தில் உள்ளன. இந்தியாவில் முதல் மற்றும் இரண்டாவது கோவிட் அலையின் போது நமது சேவைகள் சிறப்பாக உள்ளன. முதல் அலையின் போது ரூ.100 கோடி பங்களிப்பு செய்ய திட்ட மிடப்பட்டு ரூ.150 கோடி வரை செலவிடப்பட்டது. இரண்டாவது இதைவிட அதிக தொகை செலவிடப் படும். ஆயிரக்கணக்கான ஆக்சிஜன் செறிவூட்டி கள், நூற்றுக்கணக்கான செயற்கை சுவாசக் கருவிகள் (வென்டிலேட்டர்ஸ்) மற்றும் 1,000த்துக்கும் மேலான

PRIP *கல்யாண் பேனர்ஜி மற்றும் பினோதாவுடன்*

RI *தலைவர் பதவி ஆண்டுக்கான ஐந்து முன்னுரிமைகள்*

உறுப்பினர் சேர்க்கை: *கடந்த 20 ஆண்டுகளில் வளர்ச்சி பெறாத ஒரு அமைப்பை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா? நமது உறுப்பினர்களில் இந்த நிலையை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒவ்வொருவரும் ஒருஉறுப்பினரை ரோட்டரிக்கு கொண்டுவருமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன். இது சாத்தியமானதே. இதற்காக உலகம் முழுவதும் இருந்து எனக்கு உறுதி மொழிகள் கிடைத்துள்ளன.*

நெகிழ்வான, உயர்ரக சங்கங்கள்: *ஒவ்வொருவரும் ஒரு உறுப்பினரை புதிதாக அறிமுகப்படுத்த வேண்டும் என்பதில் நாம் கவனம் செலுத்தும் அதே நேரத்தில் இருக்கும் உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதிலும் நமது கவனம் இருக்க வேண்டும். சங்கங்களை நெகிழ்வாக வைத்துக்கொள்வதன் மூலம் அவர்களை நாம் தக்கவைத்துக் கொள்ள முடியும். மெய்நிகர் சந்திப்புகள்தான் நாம் முன்னே செல்வதற்கான வழி. இதன் மூலம் இளைஞர்களை உறுப்பினர்களாக இழுக்க முடியும். அவர்கள் போக்குவரத்து நெரிசல்களைக் கடந்து கூட்டத்துக்கு வராமல் வீட்டில் இருந்தபடியே கணினி மூலம் கூட்டங்களில் பங்கேற்க முடியும். குழந்தைகளை கவனிக்க வேண்டும் எனில் அவ்வப்போது விடியோவை சுவிட்ச் ஆப் செய்ய முடியும். அவர்களை ரோட்டரியில் சேருவதை நாம் ஈர்க்க முடியும். வயதான உறுப்பினர்கள், இளைஞர்கள் எங்கள் சங்கங்களில் சேர விரும்புவதில்லை என்று கூறுகிறார்கள். அது சரி என ஒத்துக் கொள்ளலாம். ஆனால். 15 இளம் உறுப்பினர் கொண்ட சிறிய சங்கத்தை ஏற்படுத்தினால், அது 25 உறுப்பினர்கள் கொண்டதாக வளர்ந்தால் தனி சங்கமாக உருவாக முடியும். அல்லது அந்த சமயத்தில் உங்கள் சங்கத்துடன் சேர்ந்து கொள்ள முடியும். ஏதாவது ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு சங்கங்களை உருவாக்கலாம். உலகில் குடிநீர், சுகாதாரத்தை பேண விரும்பும் மக்கள் ஒருங்கிணைந்து இந்த ஆண்டு எத்தியோப்பியாவில் குடிநீர் திட்டங்களைச் செயல் படுத்தலாம். அடுத்த ஆண்டு இந்தியா, அதைத் தொடர்ந்து பொலிவியா என திட்டங்களை நிறைவேற்றலாம். ஜூம் அதை சாத்தியம் என காட்டியுள்ளது. இந்த தொற்று காலத்தில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய நன்மை என்னவெனில், நாம் வேகமாக தொடர்பு கொள்ள முடியும் என்பதுதான்.*

- *மகளிர்க்கு அதிகாரம் அளித்தல் (பெட்டிச் செய்தியில் காண்க)*
- **RI தலைவரின் மாநாடுகள்:** *இந்தியாவில் ஹைதராபாத் (May 3-5, 2022) உள்ளிட்ட உலகம் முழுவதும் 7 மாநாடு கள். ரோட்டரியின் வெவ்வேறு கோணங்களில்.*
- **ரோட்டரி சேவை நாட்கள்:** *ரோட்டரியில் உள்ளூர் அளவில் செய்த பணிகளை வெளிப்படுத்துவது. இதய அறுவைச்சிகிச்சை, எழுத்தறிவு மற்றும் பள்ளிகளில் குடிநீர் மற்றும் தூய்மை பராமரிப்பு திட்டங்கள் தொடர்பானது. ரோட்டரியின் சேவைகள் இரண்டு மாதத்துக்கு ஒரு முறை சமூக வலைத்தளங்களில் பதிவு செய்வது.*

கோவிட் படுக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கோவிட் நிவாரணப் பணிகள் தொடருகின்றன. இந்த நெருக்கடியான நேரத்தில் உலகம் முழுவதிலும் உள்ள ரோட்டேரியன்கள் இந்தியாவுக்கு செய்துள்ள உதவிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏதாவது தேவை ஏற்பட்டால், இந்திய ரோட்டரியினர் கைவிடமாட்டார்கள், தங்கள் நன்றிக்கடனை திருப்பிச் செலுத்துவார்கள் என்றார் மேத்தா.

கோவிட் காலத்தில் ரோட்டேரியன்கள் செய்துள்ள பணிகளை பார்க்கும் போது நிச்சயம் இது ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கையில் பாதகத்தை ஏற்படுத்தாது. மாறாக ரோட்டரியின் பணிகளால் ஈர்க்கப்பட்டு மேலும் பலர் ரோட்டரியில் சேரலாம். தேவைப்படுபவர்களுக்கு உதவ வாய்ப்புள்ள ஓர் அமைப்பாகவே மக்கள் ரோட்டரியை பார்க்கிறார்கள்.

ஆனால், உறுப்பினர்களை எப்போதும் ஏதாவது ஒருவேலையில் ஈடுபடுத்துவது மிக முக்கியமானது. மெய்நிகர் சந்திப்பை நடத்தாத சங்கங்கள் உறுப்பினர்களை இழக்கக்கூடிய அபாயம் உள்ளது என்று அவர் எச்சரித்தார்.

மற்றவர்களுக்கு உதவ வேண்டுமானால் தாராளமாக இருக்க வேண்டும் என்பதை மக்கள் உணரும் நேரத்தில், TRFக்கு ஒரே மாதிரியான சிந்தனை, தைரியமான புதிய யோசனைகள் மற்றும் பெரிய குறிக்கோள்கள் தேவைப்படுகின்றன. அறங்காவலர்களும் இதே வழியில் சிந்திப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்றார் மேத்தா.

மற்றொரு பெரிய கனவு எதுவென்றால் நோபல் அமைதிப் பரிசுக்கு RI தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இது நிறைவேற வேண்டும். தற்போது இது கேள்விக்குறிபோல

தோன்றலாம். ஆனால், இது புகழுக்காகவோ அல்லது பெருமைக்காகவோ அல்ல. அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்தால் அது உலகில் முன்னணி சேவை அமைப்பான ரோட்டரி மேலும் ஒருபடி முன்னேறிச் செல்வதற்கு வழிவகுக்கும். இன்று அது எங்கும் இல்லை.

நேரடி சந்திப்பில் இருக்கும் வேடிக்கையையும் திகைப்பையும் நாம் இழக்கிறோம் அல்லவா? என்று நான் கேள்வி எழுப்பினேன். அதற்கு அவர், மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்ப நான் என்னை மாற்றிக்கொள்வேன். வாழ்க்கையில் எதற்கும் என் மனதை மாற்றிக்கொள்ள ஒரு சில நொடிகள்

ரூ.12 கோடி முதல் ரூ.300 கோடிவரையிலான கோவிட் நிவாரணப் பணிகள்

கோவிட் தொற்றை எதிர்த்துப் போராட அரசுக்கும் சமூகத்துக்கும் உதவி செய்ய தனிப்பட்ட முறையில் ரோட்டரி சங்கங்கள் கோடிக்கணக்கில் நிதிதிரட்டுவது உங்களுக்கு பெருமை தரும் விஷயம் அல்லவா? என்று கேட்டதற்கு, RIPE சேகர் பின்வருமாறு கூறினார். இதுபோன்ற பல்வேறு முயற்சிகளில் நான் முன்நின்று செயல்பட்டிருக்கிறேன். பத்து நாட்களுக்கு முன்பு சிங்கப்பூரை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் ஒரு கார்ப்பொரேட் நிறுவனம், CSR திட்டத்தின் கீழ், தில்லியில் 1,00,000 பேருக்கு கோவிட் பரிசோதனை செய்வதற்கான கருவிகளை வழங்க முன்வந்தது. ஆனால், அவற்றை மருத்துவமனைக்கு நேரடியாக அவர்களால் வழங்க முடியாது. அதற்காகத்தான் ரோட்டரி என்றார்.

ரூ.300 கோடியில் ஒரு திட்டத்தை நான் இறுதிசெய்துள்ளேன். அமெரிக்காவில் உள்ள இந்தியர்கள் குழு ஒன்று 50,000 ஆக்சிஜன் செறிவூட்டிகளை இந்தியாவுக்கு வழங்க முன்வந்துள்ளது. அவற்றை வரவழைத்து தேவையான இடங்களுக்கு கொண்டு சென்று அதை பயன்படுத்தும் வகையில் துரிதமாக செயல்பட அவர்களுக்கு இந்தியாவில் ஒரு நம்பிக்கையான கூட்டாளி தேவை. இதுபோன்ற திட்டத்தை கையாளும் திறன் ரோட்டரிக்கு உள்ளது என்று அவர்கள் நம்புகிறார்கள். நமக்கு இதில் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் அல்ல, 35 ஆண்டுகள் அனுபவம் உள்ளது. போலியோ ஒழிப்பு நடவடிக்கையில் நாம் கடினமாக உழைத்தது அனைவருக்கும் தெரியும். இதற்கான பைலட் திட்டம் ஏற்கெனவே தமிழகம் மற்றும் மேற்குவங்கத்தில் தொடங்கிவிட்டது. இந்த திட்டத்தை சென்னை நார்த் ரோட்டரி சங்கத் தலைவர் வெங்கட்ராமன் மற்றும் முன்னாள் மாவட்ட ஆளுநர் ஒளிவண்ணன் இருவரும்தான் கொண்டுவந்துள்ளனர் என்றார் மேத்தா.

மகளிர்க்கு அதிகாரம் அளித்தல்

2021–22ம் ஆண்டில் சேகர் மேத்தாவின் தலைமையின் கீழ் நாங்கள் முக்கியமாக செயல்படுத்த விரும்புவது மகளிர்க்கு அதிகாரம் அளித்தல். உலகெங்கிலும் பெண் குழந்தைகளுக்கு எதிரான பாகுபாடு உள்ளது. அது பல இடங்களில் பல விதங்களில் உள்ளது. நமது பிராந்தியத்தில் கணிசமான பெண் குழந்தைகள் 7 அல்லது 8 வது வகுப்பிற்கு பிறகு படிப்பை கைவிட்டு விடுகிறார்கள். அவர்கள் மீண்டும் பள்ளிக்குச் சென்று கல்வி கற்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கச் செய்ய வேண்டும். பல மாநிலங்களில் பெண் குழந்தைகள் பள்ளிக்குச் சென்றுவர இலவசமாக சைக்கிள் வழங்குகின்றனர். அவர்களுக்கு நாம் சூரிய சக்தி விளக்கு கொடுக்கலாமே. மின்சாரம் இல்லாத நேரங்களில் அவர்கள் வீடுகளில் படிப்பதற்கு உதவிகரமாக இருக்கும். வீட்டில் ஒரு பெண் படிப்பது என்றால் அந்த குடும்பமே கல்வி கற்பது போன்றது. அவர்கள் படித்து முடித்த பின் அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தால் அதன் மூலம் பொருளாதார ரீதியில் அவர்கள் வலுப்பெற முடியும்.

அவர்களுக்கு ஊட்டச்சத்தை வழங்கலாம். குறிப்பாக கர்ப்பிணிகளுக்கு தற்காப்பு நடவடிக்கைகள் நாம் சொல்லித் தரலாம். நிச்சயமாக உலகெங்கிலும் உள்ள பாலியல் வன்முறையா ளர்களுக்கு நாம் பாடம் கற்பிக்க வேண்டும். அதன் பிறகு குடிநீர், சுகாதாரம் மற்றும் மாதவிடாய் ஆரோக்கியம் (MHM) பற்றியும் எடுத்துரைக்கலாம். பேட்மேன் திரைப்படம் இந்த விஷயங்களைக் குறிப்பிடுகிறது. மீண்டும் பயன்படுத்தக்கூடிய பேடுகள் மற்றும் மாதவிடாய் கோப்பைகள் பற்றி விரிவாகவும் சுதந்திரமாகவும் விவாதிக்கலாம். ஒரு பெண்ணுக்கு ரூ.300 விலையில் ஐந்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய பேடுகளை வழங்க முடியும். அது இரண்டு ஆண்டுகளுக்கு வரும். இதனால் சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏதும் இல்லை. பெண்கள் நடத்தும் சமூக நிறுவனங்கள் இதை தொடங்கலாம்.

இன்றைய சூழலில் இளம் பெண்கள் குடும்ப வன்முறையை சந்திக்கவேண்டியுள்ளது. அவர்களுக்கு ஆலோசனை வழங்கவும், உள்ளூர் மொழியில் அவர்களை ஆறுதல் படுத்தவும் அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது. குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களையும் நாம் இங்கு கையாள முடியும்.

போதுமானது. எதுவாக இருந்தாலும் நல்லதுக்குத் தான் என்று நினைத்துக் கொள்வதால் அதில் எனக்கு வருத்தம் ஏதும் இல்லை. எனது இரண்டு ஆண்டுகளில் 50 சதவீதம் போய் விட்டது என்றாலும் மீதம் 50 சதவீதம் உள்ளது. உள்வரும் தலைவரின் முதல் ஆண்டு திட்டமிடல் அதிகமாகவும், மக்களைச் சந்திப்பது, ஈர்ப்பது குறைவாகவும் உள்ளது. ஏனெனில் அதுதானே தலைவரின் வேலை.

ஆமாம், அவர் நேரடியான சர்வதேச அசெம்பிளி கூட்டத்தை தவறவிட்டுவிட்டார். எந்த ஒரு RI தலைவருக்கும் இது ஏராளமான கனவுகளுடன்கூடிய நிகழ்வாகும். ஆனால், அதைவிட நான் அமெரிக்காவில் மட்டும்

ராஷி மற்றும் மேத்தா கொல்கத்தா நூற்றாண்டு விழாவில் அப்போதைய RI தலைவர் மார்க் மலோனி, அவர் மனைவி கேய், RID கமல் சங்வி மற்றும் அவர் மனைவி சோனலுடன்.

மேத்தா மற்றும் PRID சங்-கூ-யுன் இருதய அறுவை சிகிச்சை மேற்கொண்ட ஒரு குழந்தையை பார்வையிடுகின்றனர்.

30 நாள்களில் 24 MDPETS கூட்டங்களில் 8,000 தலைவர்களை சந்தித்திருக்க வேண்டும். நான் இந்த மெய்நிகர் கூட்டங்களுக்காக பதிவு செய்யப்பட்ட செய்தியை அனுப்பியிருக்கலாம். ஆனால், நான் அதற்கு பதிலாக தினமும் காலை 4 அல்லது 5 மணிக்கு எழுந்து அவர்களிடம் உரை நிகழ்த்தினேன். அதாவது உலகம் முழுவதும் உள்ள 35,000 சங்கத் தலைவர்களில் 15,000 பேரிடம் இது போல் பேசியிருக்கிறேன். ரோட்டரியின் பணி சங்கம் அளவில் தொடங்குகிறது என்பது எனது நம்பிக்கை. ஆளுநர்கள் மற்றும் சங்கத் தலைவர்களுக்கு இதில் முக்கிய பங்கு உண்டு.

ஜப்பான், கொரியா, தைவான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள MDPETSகளுடனும் அவர் உரையாற்றி யிருக்கிறேன். நேரடியாக உரையாற்றுவதில் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், நேரடி சந்திப்பில் 15,000 பேரிடம் என்னால் பேசியிருக்க முடியாது. நாளை என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியாது. எனவே எல்லைகள் திறக்கப்படும் வரை காத்திருப்போம் என்றார் அவர் மன உறுதியுடன்.

புகைப்படங்கள்:
ரஷீதா பகத் மற்றும்
சேகர் மேத்தாவின்
சேகரிப்புகள்.

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

கோவிட் நிவாரணம், பாதுகாப்புப் பணிகளில் தில்லி ரோட்டேரியன்கள்

ஜெய்ஸ்ரீ

கோவிட் இரண்டாவது அலை தாக்குதல் காரணமாக பாதிப்பு அதிகரித்துள்ள நிலையில், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஆக்சிஜன் தேவைக்காக மருத்துவ மனைகள் அவசர அழைப்புகள் விடுக்கும் சூழலில், சுகாதாரத் துறையின் வேண்டுகோளை அடுத்து தில்லி ரோட்டேரியன்கள் மீட்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இது தொடர்பாக RID 3011, DG சஞ்சீவ் ராய் மெஹ்ரா மாவட்ட ரோட்டரி சங்கங்கள் தங்களால் முடிந்த அளவு உதவ கேட்டுக் கொண்டுள்ளார். முதல் கட்டமாக 10 மினி ஆக்சிஜன் ஆலைகள் அமைத்துத் தரவும் அரசிடம் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவட்ட ஆளுநரின் வேண்டு கோளை ஏற்று, தலைவர் அனீஷா டால்மியா மற்றும் செயலாளர் சுதான்ஷு பச்சீஸியா ஆகியோர் தலைமையில் இரண்டே ஆண்டுகளான, 72 உறுப்பினர்கள் கொண்ட தில்லி ப்ரீமியர் ரோட்டரி சங்கம், இரண்டே வாரங்களில் தில்லியில் உள்ள 7 மருத்துவமனைகளில் 7 ஆக்சிஜன் ஆலைகளை நிறுவியுள்ளது. முதல் ஆலை 48 மணி நேரத்திற்குள் ஆக்சிஜன் உற்பத்தியைத் தொடங்கியது. முதல் நாள் இரவு மாவட்ட ஆளுநர் வேண்டுகோள் விடுத்தார். அன்று நள்ளிரவுக்குள் நான், அவரின் வேண்டுகோள் செய்தியை வாட்ஸ் ஆப் மூலம் பலருக்கும் அனுப்பிவைத்தேன். அடுத்த நாள் காலை 8 மணிக்கு இரண்டு ஆக்சிஜன் ஆலை நிறுவுவதற்கான நிதி குவிந்தது. பிற்பகல் 2 மணி அளவில் நான் மாவட்ட ஆளுநரைத் தொடர்புகொண்டு எங்களால் 7 மினி ஆக்சிஜன் ஆலைகள் அமைத்துத் தரமுடியும் என்று தெரிவித்தேன். அவை திட்டமிட்டபடி செய்து முடிக்கப்பட்டன. ஆனாலும் எங்களிடம் இன்னும் நிதி இருக்கிறது. மேலும் 6 உபகரணங்களை வழங்க தீர்மானித்துள்ளோம் என்றார் அனீஷா.

RC *தில்லி ப்ரீமியர் தலைவர் அனீஷா டால்மியா செயலாளர் சுதான்ஷு பச்சீஸியா காவல்துறையினருக்கு* N95 *முகக்கவசங்களை அளிக்கின்றனர்.*

நிமிடத்துக்கு 45 லிட்டர் ஆக்சிஜன் தயாரிக்கும் திறன் கொண்ட 6 மினி ஆக்சிஜன் ஆலைகள், 50 படுக்கைகள் கொண்ட சிறிய மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ளன. நிமிடத்துக்கு 500 லிட்டர் ஆக்சிஜன் தயாரிக்கும் ஆலை, 100 படுக்கை வசதிகள் கொண்ட தீன தயாள் மருத்துவமனையில் நிறுவப் பட்டுள்ளது. இந்த திட்டத்துக்கு ரூ.2 கோடி செலவானது. இவை அனைத்தும் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் மனமுவந்து கொடுத்த நன்கொடைகள் மூலம் திரட்டப்பட்டவை என்கிறார் சங்கத்தின் தலைவர். இந்த ஆலைகள் நிறுவப்பட்டதன் மூலம் ஏராளமான உயிர்கள் காப்பாற்றப்படும். இதற்கு பிரதியுபகாரமாக மருத்துவமனைகள், ரோட்டரி சங்கம் பரிந்துரைக்கும் ஏழை நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஒப்புக்கொண்டுள்ளன.

தங்கள் சங்கம், சிறிய மருத்துவ மனைகள் மற்றும் கோவிட் சிகிச்சை மையங்களுக்கு 1,100 ஆக்சிஜன் செறிவூட்டிகளையும் வழங்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கோவிட் சிகிச்சை மையங்கள் மற்றும் தடுப்பூசி மையங்கள் அமைப்பதிலும், வென்டிலேட்டர்கள், ஆக்சிஜன் செறிவூட்டிகள் உள்ளிட்ட மருத்துவ வசதிகளைச் செய்து

கொடுப்பதிலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து ரோட்டரி சங்கங்களும் கூட்டாகச் செயல்பட்டு வருகின்றன.

இத்தகைய கூட்டு முயற்சிகளால், ஜூன் மாத இறுதிக்குள் மாவட்டம் முழுவதும் உள்ள மருத்துவ மனைகளுக்கு மேலும் 10 மினி ஆக்சிஜன் ஆலைகளை ஏற்படுத்த உறுதிமேற்கொண்டுள்ளோம் என்றார் மெஹ்ரா. இங்கிலாந்து, ஹூஸ்டன் மற்றும் கல்காரி ஆகிய மூன்று சங்கங்களுடன் இணைந்து சர்வ தேச மானிய உதவியுடன் 675 படுக்கை வசதிகள் கொண்ட சர் கங்காராம் மருத்துவமனையில் ஆக்சிஜன் ஆலை நிறுவப்பட உள்ளது. இதை தில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் திறந்துவைக்க ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தில்லி மருத்துவமனை ஒன்றில் ஆக்ஸிஜன் ஆலை நிறுவப்படுகிறது.

300 படுக்கைகளுடன் கோவிட் சிகிச்சை மையம்

தில்லி, R K புரத்தில் உள்ள சர்வோதயா பள்ளியில் 300 படுக்கை வசதிகள் கொண்ட கோவிட் சிகிச்சை மையத்தையும் மாவட்ட ரோட்டரி சங்கங்கள் கூட்டாக அமைத்துள்ளன. இவற்றில் 100 படுக்கைகள் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகளாகும். மேலும் 100 படுக்கை வசதிகள் கொண்ட சிகிச்சை மையத்தை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். செயல்பட்டு வருகிறோம். கார்ப்பொரேட் நிறுவனங்கள் எங்களின் இந்த முயற்சிக்கு ஆதரவுக்கரம் நீட்டி வருகின்றனர் என்றார் மெஹ்ரா.

தில்லியில் ஆக்சிஜன் செறிவூட்டி வங்கியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இங்கு 100 ஆக்சிஜன் செறிவூட்டிகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படுவோர் இதைப் பெற்று பயன்படுத்தி விட்டு திருப்பித்தர வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாவட்டம் முழுவதும் 7 இடங்களில் இந்த ஆக்சிஜன் வங்கிக் கிளைகள் நிறுவப்பட்டுள்ளது.

RIPE சேகர் மேத்தா, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்று 10 ஆக்சிஜன் மினி ஆலைகளை ஏற்படுத்துமாறு என்னிடம் கேட்டுக்கொண்டுள்ளார். இது தொடர்பாக நான், RID Dr பரத் பாண்ட்யா, RIDE Dr மகேஷ் கோட்பாகி மற்றும் PDG ரவி வாட்லாமணி ஆகியோருடன் கலந்து ஆலோசித்து இதை செயல்படுத்த திட்டமிட்டுள்ளேன் என்றார் மெஹ்ரா.

கோவிட் பாதுகாப்பு திட்டம்

எங்களது ரோட்டரி சங்க உறுப்பினர்களுக்கு கோவிட் பாதுகாப்பு அளிக்க ஒரு திட்டத்தை தயாரித்துள்ளோம். அதற்காக தில்லியில் உள்ள கோவிட் பரிசோதனைக்கூடங்கள், C T ஸ்கேன் மையங்கள், தொலைபேசி மூலமான மருத்துவ ஆலோசனை, ஆம்புலன்ஸ் சேவை உள்ளிட்ட தகவல்களை சேகரித்து உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். ரோட்டேரியன்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் வசதிக்காக ஆக்சிஜன் செறிவூட்டிகள், ஆக்சிஜன் சிலிண்டர்களையும் தயார் நிலையில் வைத்திருக்கிறோம் என்றார் அனீஷா.■

RC *தில்லி ப்ரீமியர் மருத்துவமனைகளுக்கு* 10,000 PPE *க்கள் வழங்கியது.*

Rotary PEOPLE OF ACTION

பெல்தங்கடி ரோட்டரி சங்கத்தின் தண்ணீர் சேமிப்புத் திட்டங்கள்

ரஷீதா பகத்

நிலையான நீர் பாதுகாப்பின் அவசியத்தை கருத்தில் கொண்டு ரோட்டரி மாவட்டம் 3181க்கு உட்பட்ட பெல்தங்கடி ரோட்டரி சங்கம், புதுமையான, பணத்தை சேமிக்கும் முறையிலான தண்ணீர் சேமிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் RI பார்வை சுற்றுச்சூழல் பாதுகாப்பின் பக்கம் திரும்பியுள்ளது.

தாலுகாவில், விவசாயிகள் நெல் சாகுபடியை அதிகரிப்பதற்கான திட்டம் பற்றி முதலில் பார்க்கலாம். கர்நாடக மாநிலம், மங்களூரிலிருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ள நகரம் பெல்தங்கடி. பிரபலமான புண்ணியத்தலமான தர்மஸ்தலா அருகில் இது உள்ளது. அண்மைக்காலமாக இந்த தாலுகாவில் நெல் வயல்கள் மறைந்து விவசாயிகள் வாழைப் பயிர்களைப் பயிரிடத் தொடங்கினர். அந்தக் காலத்தில் நெல்வயல்கள் இயற்கையாகவே தண்ணீர் சேமிக்கும் இடமாக இப்பிராந்தியத்தில் இருந்துவந்தது. ஆனால், நெல் வயல்கள் மறைந்து போனதால், சில ஆண்டுகளுக்கு முன்பு பெல்கதங்கடி, தரிசு நிலப் பகுதியாக அறிவிக்கப்பட்டதுடன் தண்ணீர் இருப்பும் குறைந்துவந்தது என்கிறார் சங்கத்தின் தலைவர் தனஞ்சய ராவ். இந்த சங்கத்தில் 80 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அந்த நகரத்தில் இருக்கும் ஒரே ரோட்டரி சங்கமும் இதுதான்.

இதைத் தொடர்ந்து சங்கத்தின் உறுப்பினர்கள், அந்தப் பிராந்தியத்தில் விவசாயிகள் மீண்டும் நெல் சாகுபடி செய்வதற்கான ஒரு திட்டத்தை தயாரித்தனர். தரிசு நிலத்தை

ரோட்டராக்டர்கள், இன்டராக்டர்கள் மற்றும் RCC உறுப்பினர்கள் பெல்தங்கடியில் தடுப்பு அணைகள் கட்ட உதவுகின்றனர்.

செம்மைபடுத்தி, அங்கு நெல் சாகுபடி செய்வது குறித்து விவசாயிகளிடம் எடுத்துக்கூறி அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டினர். தெற்கு கனரா தாலுக்கா பகுதியில் விவசாய முறைகளை ராவ் விளக்கினார். முன்பு விவசாயிகள் அங்கு நெல் சாகுபடி செய்வார்கள். நெல்வயல்களில் தண்ணீர் தேங்கி இயற்கையான நீர் பாதுகாப்பாக இருக்கும். ஆனால், கடந்த காலங்களில் நெற்கதிர்களை அறுவடை செய்வதற்கான கூலி, பின்னர் அவற்றை நெல் மற்றும் அரிசியாக மாற்றுவதற்கான நடைமுறைச் செலவுகள் அதிகரித்து வந்ததை அடுத்து அவர்கள் நெல் சாகுபடியை கைவிட்டு, அதிகம் தண்ணீர் தேவைப்படாத பாக்கு மரங்களை வளர்க்கத் தொடங்கினர்.

பாக்கு மரங்கள் வளர்ப்பதற்கு அதிக தண்ணீர் தேவைப்படாது. மழைக்காலங்களில் வயலில் தண்ணீர் தேங்கி நிற்கும். அவற்றை வெளியேற்ற வேண்டும். நெல் சாகுபடி இதற்கு நேர் எதிரானது. அதாவது வெள்ளப் பாசனம் செய்ய வேண்டும். அதாவது நெல் வயல்களில் 5 முதல் 6 மாதங்கள் வரை தண்ணீர் தேங்க அனுமதிக்கப்படுகிறது. இதன் மூலம் இயற்கையாக தண்ணீர் பாதுகாக்கப்படுகிறது என்றார் ராவ்.

இங்குள்ள பெரும்பாலான விவசாயிகளுக்கு சிறிய அளவில் அதாவது 2 முதல் நான்கு ஏக்கர் வரைதான் நிலம் உள்ளது. இதில் பாராட்டத்தக்க அம்சம் என்னவெனில் பெல்தங்கடி ரோட்டரி சங்கத்தினர் நிலையான தண்ணீர் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருவதுதான். கடந்த ஐந்து ஆண்டுகளாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயிகளுக்கு பவர் டில்லர் இயந்திரம் வழங்கப்பட்டு வருகிறது. நெல் சாகுபடிக்குத் தேவையான பவர் டில்லர் இயந்திரத்தின் விலை ரூ.3 லட்சம். ஆனால், அரசு மானிய உதவியாக ரூ.1.54 லட்சம் வழங்குகிறது. மீதமுள்ள தொகையை சங்கம் ஏற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் இயந்திரத்தை இலவசமாக வழங்கி வருகிறது.

இந்த ஆண்டு விவசாயிகளை நெல் சாகுபடிக்கு ஊக்குவித்து வருகிறோம். இதற்காக விவசாயிகள் நிலத்தை உழுவதற்கான உழவுக்கூலியை நாங்கள் கொடுத்து உதவி வருகிறோம். இந்த வகையில் ஒரு ஏக்கருக்கு ரூ.3,000 முதல் ரூ.4,000 வரை செலவாகும். இந்த செலவை ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றார் ராவ் புன்னகையுடன்.

இந்த ரோட்டேரியன்களின் உழைப்பின் விளைவாக பெல்தங்கடி தாலுகாவில் 15 ஏக்கர் நிலத்தில் இயற்கையான நீர் பாதுகாப்புக்கு வழிசெய்யப்பட்டுள்ளது. லைலா, முண்டஜே, அந்தின்ஜே, மிதாபாகிலு, கொய்யூர் மற்றும் குவெட்டு கிராமங்கள் இதில் அடக்கமாகும்.

ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு அங்குல நீர் சேமிக்கப்பட்டால், இது மண்ணில் ஒரு நாளைக்கு 1 லட்சம் லிட்டருக்கும் அதிகமான தண்ணீரை சேமிக்க உதவுகிறது. இந்த கணக்கின்படி 15,41,580 ஏக்கரில் 120 நாட்கள் பெல்தங்கடியில் உள்ள நெல் வயல்களில் தண்ணீர் சேமிக்கப்படுகிறது என்பது ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது. இதன் விளைவாக, இப்பிராந்தியத்தில் உள்ள பண்ணைகளிலும், வீடுகளிலும் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது.

தடுப்பு அணைகள் கட்டுதல்

நீர் பாதுகாப்பு போன்ற சுற்றுச்சூழல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருவதால் சங்கம் இப்போது தடுப்பணை கட்டும் முயற்சியும்

RC *பெல்தங்கடியின் உதவியுடன் கட்டப்பட்ட ஒரு தடுப்பு அணை.*

நெல் பயிர்கள் பயிரிடப்படுகிறது.

மனதை உருக்கிய செயல்

சில சமயங்களில் ரோட்டேரியன்கள் நன்கு திட்டமிட்டு, பெரு முயற்சிகளுடன் நிதி திரட்டி சமூக சேவைத் திட்டங்களை மேற்கொள்ளும்போது அவை வளர்ச்சி பெற்ற சில மாதங்களிலேயே இடிக்கப்படும் போது மனம் வேதனை அடைகிறது. கடந்த பிப்ரவரி மாதம் RC பெல்தங்கடி, மங்களூர் டௌன்டவுன் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து, தட்சிண கன்னட மாவட்டம், லைலா கிராமத்தில் பஜக்கிரேசல் என்ற இடத்தில் சிறு துவாரங்களுடன் உள்ள தடுப்பணை கட்டப்பட்டது. அந்த தடுப்பணையில் 11 சிறு துவாரங்கள் ஏற்படுத்தப்பட்டு நான்கு நாள்களில் பணி முடிக்கப்பட்டது. பெல்தங்கடி அரசு கல்லூரி NSS மாணவர்கள் 120 பேர் 700 பைகளில் மணல் நிரப்பவும், 110 அடி நீளம், 14 அடி அகலமான பிளாஸ்டிக் ஷீட்டுகளை பொருத்தவும் உதவினார்கள். இவற்றை மங்களூர் டௌன்டவுன் ரோட்டரி சங்க உறுப்பினர் சுரேஷ் ஹெப்பர் எங்களுக்கு வழங்கினார். ஒவ்வொரு சிறு துவாரங்களுக்கும் 60 பைகள் மணல் பயன்படுத்தப்பட்டது. கூலித்தொழிலாளிகள் 8 பேர் மட்டுமே பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் வீட்டிலிருந்து சமைக்கப்பட்ட சுவையான உணவுகள் வழங்கப்பட்டன என்று விவரித்தார். சேவை திட்ட இயக்குநர் யோகிஷ் பிடே.

இந்த பணிகளின் விளைவாக நான்கு கி.மீ. நீளம் கொண்ட ஆற்றின் நீர்மட்டம் 4 அடி உயர்ந்தது. இதன் மூலம் 40 ஏக்கர் நிலத்துக்கு நேரடியாக பசான நீர் கிடைத்தது. உள்ளூர் மக்கள் 200 பேர் வீட்டில் இருந்த கிணறுகளிலும் நீர்மட்டம் கணிசமாக உயரத் தொடங்கியது. நானும் அந்த இடத்தில் வசித்து வந்ததுடன் அதன் மூலம் பலனடைந்தேன் என்றார்.

துவாரங்களுடன்கூடிய இந்த சிறிய அணையை மாவட்ட ஆளுநர் ரங்கநாத் பட் திறந்துவைத்தார். ஆனால், இரண்டு கிராமங்களை இணைக்கும் சாலை அமைப்பதற்காக நிர்வாகத்தினரால் அணை இடிக்கப்பட்டது மிகுந்த வேதனை அளித்தது. மே மாதம் முதல் தேதி வரை இத்திட்டத்தின் மூலம் அணையில் நிலையாக தண்ணீர் இருந்தது என்கிறார் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரான பிடே.

இது ரோட்டேரியன்களுக்கு மனவேதனை தருமே என்று நான் கேட்டதற்கு அவர் அளித்த பதில் இதுதான். நிச்சயமாக அதை நான் மறுக்கவில்லை. உண்மையில் இந்த அணை கட்டும் திட்டம் அரசு பதிவேடுகளில் இல்லை. உண்மையில் எனது தாத்தா 50 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு தடுப்பணை கட்டுவதற்கு முயற்சி மேற்கொண்டார். ஆனால், அந்த இடம் பயன்படுத்தப்படாமல் இருந்து வந்தது. இப்போது பாலத்தை ஒட்டி புதிய தடுப்பு அணை கட்டப்படும். ஏனெனில் இந்த ஒரு சாலை மூலம்தான் ஒரு சில கிராமங்களுக்குச் செல்லமுடியும். இதுவும் மக்களுக்குத் தேவையான ஒன்றுதான் என்று கூறினார் யோகிஷ் பிடே.■

இறங்கியுள்ளது என்றார் ராவ். முன்பு தடுப்பணைகள் கட்டுவது என்பது வழக்கமான பண்ணை நீர்ப்பாசனம் மற்றும் தண்ணீர் சேமிப்பு அடிப்படையில் இருந்தது. ஆனால், தனிப்பட்ட விவசாயம் என்ற பரிணாம வளர்ச்சியால் வழக்கமான நெறிமுறைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே கூட்டுறவு வேளாண்மையை புதுப்பிக்க பெல்தங்கடி ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மாவட்டத்தில் உள்ள வேறு சில சங்கங்கள் மற்றும் அமைப்பின் உதவியை நாடினர். RC மங்களூர் டௌன்டவுன், ரோட்ராக்ட் சங்கம், பெல்தங்கடி முதல் தர கல்லூரி மற்றும் உஜிரேயில் உள்ள எஸ்டிஎம் பாலிடெக்னிக் கல்லூரிகளின் NSS மாணவர் பிரிவினர், மற்றும் உள்ளூர் சமூகத்தினர் ஆகியோரையும் இதில் இணைத்துக் கொண்டோம். இந்த வலுவான கூட்டுறவின் காரணமாக பெல்தங்கடியைச் சுற்றி இயற்கை நீர்ப் பிடிப்பு பகுதிகளில் 6 தடுப்பணைகள் கட்டப்பட்டன. உள்ளூர் சமூகத்தினர் தவிர, 3 ரோட்ராக்ட் சங்கங்கள், 5 இன்டராக்ட சங்கங்கள் மற்றும் 5 RCCக்கள் ஆகியோரது சேவைகளையும் நாங்கள் பயன்படுத்திக் கொண்டோம். அதாவது ரோட்டரி குடும்பத்தினர் சிறு ராணுவக் குழுபோல எங்களது நீர் பாதுகாப்புத் திட்டங்களுக்கு உதவினர்.

உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய, சுற்றுச்சூழல் பாதுகாப்பான மணல், செம்மண், தென்னைமரக் கிளைகள், கற்கள், மரப்பட்டைகள் இரண்டு பக்கமும் வைத்து கட்டப்பட்டன. தண்ணீர் தேங்கியிருப்பதை உறுதிசெய்ய பாலிதீன் பைகள் மற்றும் தார்பாலின்கள் பயன்படுத்தப்பட்டன.

தடுப்பணைகளுக்கு பக்கவாட்டு சுவர் கட்டுவதற்கு சிமெண்ட் பைகளில் மணல் நிரப்பி மற்றும் இதர பொருள்கள் கொண்டு சுவர் எழுப்பப்பட்டது. முதலில் நான் பாலிதீன் பைகள் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தேன். ஆனால், சிமெண்ட பைகளால் கசிவை தடுக்க முடியாது என்பதால் பாலிதின் பைகள் பயன்படுத்த வேண்டியதாயிற்று என்று விளக்கினார் ராவ்.

ஒவ்வொரு தடுப்பணை கட்டவும்

தடுப்பணைகள் கட்ட உதவும் ரோட்டராக்டர்களுக்கு சூடானா வீட்டு சாப்பாடு பரிமாறப்படுகிறது.

எங்களுக்கு மூன்று நாட்கள் வரை ஆயிற்று. ரோட்டேரியன்கள் 100 பேர் இதற்காக உழைக்கவேண்டியிருந்தது. நாங்கள், அவர்கள் அனைவருக்கும் வீட்டிலிருந்து சமைக்கப்பட்ட உணவு கிடைப்பதை உறுதிசெய்தோம்.

நீர்ப்பிடிப்பு பகுதி, பயனாளிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை கணக்கில் கொண்டு தடுப்பணைகளை கட்டினோம். முண்டஜே, தோட்டாதடி, நீரியா, சார்மடி மற்றும் லைலா பகுதி கிராம மக்கள் இதனால் பயனடைந்தனர். இத்திட்டத்தின் மூலம் 150க்கும் மேலான குடும்பத்தினர் பயன்பெற்றனர். 5லிருந்து 10 கி.மீ. சுற்றளவுக்கு 50 முதல் 100 ஏக்கர் பரப்பளவுள்ள நிலப்பகுதிகளில் கசிவுநீர் குட்டைகள் ஏற்படுத்தப் பட்டன. கிணறுகளிலும் நீர்மட்டம் உயர்ந்தது. உள்ளூரிலேயே கிடைத்த பொருள்களைக் கொண்டு குறைந்த செலவில் நிறைவேற்றப்பட்டதுதான் இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும் என்றார் சங்கத்தின் சேவை திட்ட இயக்குநர் யோகிஷ் பிடே.

RC பெல்தங்கடியின் இந்த நிலையான தண்ணீர் பாது காப்புத் திட்டம் ஊடகங்கள், ஆராய்ச்சியாளர்கள், சமூக சேவகர்கள் உள்ளி'ட்ட பலதரப்பட்ட மக்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. உள்ளூர் சமூகத்தை ஈடுபடுத்துவதன் மூலம் நீர் பாதுகாப்பு நுட்பங்களை பின்பற்றுவதற்கான ஆலோச னைகளை நாங்கள் இப்போது வழங்கி வருகிறோம் என்று ராவ் பெருமிதத் துடன் குறிப்பிட்டார்.

நீர் வீணாகாமல் தடுத்தல்

கடுமையான கோடை காலத்தில், வீடுகள், பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தொட்டிகள், நிரம்பி வழிந்து தண்ணீர் வீணாவது நாம் பார்க்கும் பொதுவான காட்சிகள்தான். எஸ்டிஎம் பாலிடெக்னிக் கல்லூரியின் தலைவரும், ரோட்டேரியனுமான கே.வி.பிரசாத், தர்மஸ்தலா கோயிலின் பரம்பரை தர்மகர்த்தாவும், பெரு நன்கொடையாளருமான ரோட்டேரியன் டி.வீரேந்திர ஹெக்கடே வழிகாட்டுதலில் தண்ணீர் வீணாவதைத் தடுக்க ஒரு கருவியை கண்டுபிடித் துள்ளார். அதற்கு "எஸ்டிஎம் ரோட்டரி ஜல ரக்ஷக்" என்று பெயரிட்டுள்ளனர்.

இந்த கருவி மேல்நிலை நீர்த் தேக்க தொட்டியில் நீர்மட்டத்தை கண்காணிக்கிறது. தொட்டியில் தண்ணீர் நிரம்பியவுடன் அவை எச்சரிக்கை ஒலி எழுப்பும். பெல்தங்கடி ரோட்டரி சங்கம் இதுபோன்று 50 கருவிகளை வாங்கி கிராமப் பஞ்சாயத்துகள், போலீஸ் நிலையங்கள் மற்றும் அரசு அலுவலங்கள் மற்றும் பள்ளிகளுக்கு விநியோகித்துள்ளது.

மழைநீர் வடிகால்

"ரோட்டரி ஜீவதாரா" என்ற மற்றொரு திட்டம் மழைநீரை சேகரிப்பதற்கு முன் அதை வடிகட்டுவது தொடர்புடையது. இதன் மூலம் வண்டல் மற்றும் இதர சக்கைகள் அகற்றப்பட்டு தண்ணீரின் தரம் மேம்படுத்தப்படும். இதற்காக பெல்தங்கடி ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மழைநீர் சேகரிப்பு வடிப்பான் கருவியை வடிவமைத்து தயாரித்து ரூ.3,500 விலையில் சுமார் 10 வடிப்பான்களை தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்கு வழங்கியுள்ளனர். மழைநீரை தரமான முறையில் சேகரிப்பதே இதன் நோக்கமாகும். இந்த வடிப்பான்கள் மூலம் மழை நீரை வடிகட்டி நேரடியாக குழாய் மூலம் கிணற்றில், தண்ணீர் தொட்டிகளில் சேமிக்கலாம்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

ஹோல்கர் நாக்
RI தலைவர்

இந்தியா மற்றும் பிரேஸிலுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்

KR ரவீந்திரன்
அறக்கட்டளை
அறங்காவலர் தலைவர்

அன்புள்ள மாவட்ட ஆளுநர்களே!

உலகையே உலுக்கி வரும் கோவிட் நோய்த் தொற்றின் தாக்கம் தணிந்துவிடும், 2021ம் ஆண்டு வைரஸ் தாக்குதலிலிருந்து விடுதலை கிடைக்கும் என்றும் நம்பியிருந்தோம். ஆனால், துரதிருஷ்டவசமாக இந்தியாவில் திகிலூட்டும் இரண்டாவது அலை, பிரேஸிலில் மோசமான நிலைமை வேதனை அளிக்கிறது. பாதிக்கப்படாத பகுதியே இல்லை என்னும் அளவுக்கு நிலைமை சென்றுவிட்டது.

தொற்று பாதிப்பு ஒரு நாளைக்கு 4,00,000மாக உயர்ந்துள்ளது, மருத்துவ ஆக்சிஜன் பற்றாக்குறை, மருத்துவமனைகளில் நோயாளிகளுக்குத் தேவையான படுக்கை வசதிகள் இல்லாதது, அதிகரித்து வரும் உயிரிழப்புகள் இந்தியாவில் இந்த நோயின் தாக்கம் இப்போதைக்கு குறையாது என்பதையே காட்டு கின்றன. எனவே அவசர உதவி தேவைப்படுகிறது. இந்தியாவைப் போலவே பிரேசில் மற்றும் சில நாடு களில் இதே பிரச்னை நீடிக்கிறது. அவர்களுக்கும் ஆதரவு தேவைப்படுகிறது.

கோவிட் நோயாளிகள் சிகிச்சைக்குத் தேவையான ஆக்சிஜன் செறிவூட்டிகள், வென்டிலேட்டர்கள் (செயற்கை சுவாசக் கருவிகள்) உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை அனுப்பிவைத்து உதவுமாறு மாவட்ட ஆளுநர்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் சங்கம், மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் மாற்றும் நாட்டின் இதர பகுதிகளிலுள்ள ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து செயல்பட்டு நோயாளிகளிக்குத் தேவையான உபகரணங்களை நன்கொடையாகப் பெற்று அவற்றை தனியார் நிறவனங்கள் மூலம் விமானம் அல்லது கப்பல் அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம். இதர சங்கங்கள், மாவட்டங்கள் மற்றும் உள்ளூர் அமைப்புகளுடன் கூட்டு முயற்சியாகக்கூட இவற்றை அனுப்பிவைக்கலாம்.

ஏற்கெனவே நோயாளிகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை மாவட்டங்கள், சங்கங்கள் மற்றும் உறுப்பினர்கள் வழங்கி வருகின்றனர். இந்தியா, பிரேஸில் நாடுகளுக்கு உதவுவது போல பிறநாடுகளுக்கும் உதவுவது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். அவற்றுக்கு சில உதாரணங்கள்.

- ரோட்டரி மாவட்டம் 6400 மற்றும் எஸ்ஸெக்ஸ் ரோட்டரி சங்கம் இரண்டும் ரோட்டரி இந்தியா கோவிட் பணிக்குழுவுடன் இணைந்து ஆக்சிஜன் செறிவூட்டிகளை நன்கொடையாக வழங்கி வருகின்றன.
- ரோட்டரி மாவட்டம் 6900 யு.பி.எஸ். உள்ளிட்ட இதர அமைப்புகளுடன் இணைந்து வென்டிலேட் டர்கள், மயக்க மருந்து கருவிகள், ஆக்சிஜன், மூச்சு விடுதலுக்குத் தேவையான கருவிகளை கப்பல் மூலம் அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.
- மெட்ராஸ் ரோட்டரி சங்கம் 20 லட்சம் கோவிட் தடுப்பூசிக் குப்பிகளை எடுத்துச் செல்ல வசதியாக 8 அடி நீளமுள்ள முழுவதும் குளிரூட்டப்பட்ட இரண்டு டிரக்குகளை வழங்கியுள்ளன. கேரள மாநிலத்தில் உள்ள ரோட்டரி சங்கங்கள் கடந்த மூன்று வாரங்களில் ரோட்டரி மையங்கள், முகாம்கள் மூலம் 51,000 பேருக்கு இலவசமாக தடுப்பூசி போட்டுள்ளன.
- அமெரிக்காவிலுள்ள ரோட்டேரியன்கள் கோவிட் நோயாளிகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வாங்கி அனுப்பியுள்ளனர். இல்லினாய்ஸில் உள்ள ராக்ஃபோர்டு சங்கம் தனியார் விமான நிறுவனத்துடன் இணைந்து மருத்துவ உபகரணங்களை விமானம் மூலம் அனுப்பி உதவியுள்ளன.
- ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் தொடர்புடை முன்னாள் சங்கத்தினர் நிதிதிரட்டி 50 ஆக்சிஜன் செறிவூட்டிகளை கொள்முதல் செய்து அனுப்பியுள்ளனர்.
- பிரேஸில், ரோட்டரி உறுப்பினர்கள் கோவிட் தடுப்பூசிகளை கொண்டு சென்று விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ளனர். குளிரூட்டப்பட்ட குளிர்பதனப் பெட்டிகளை விநியோகிப்பதில் அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது.

இந்த தொற்று காலத்தில் ரோட்டேரியன் என்ற வகையில் நாம் சமூகத்துக்கு சேவை செய்வதில் ஒன்றிணைகிறோம். இந்தியாவுக்கும் பிறநாடுகளுக்கும் உதவி செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் ஒருமனதோடு ஒன்றிணைந்து செயல்பட்டால்தான் தொற்றை வெல்ல முடியும்.

நன்றி.

ஹோல்கர் நாக்
RI தலைவர்

KR ரவீந்திரன்
அறக்கட்டளை
அறங்காவலர் தலைவர்

போராளி, சீர்திருத்தவாதி மகேஷ் கோட்பாகி!

ரஷீதா பகத்

அவரது நடத்தையின் மூலம் அவர் எதிர்கொள்ளும் அழுத்தத்தின் காரணத்தை உங்களால் அறிந்துகொள்ள முடியாது. கடந்த ஏப்ரல் இறுதியில் நான் அவரை நேர்காணல் செய்தபோது அவரது 75 படுக்கைகள் கொண்ட கோட்பாகி மருத்துவமனை 100 கோவிட்-19 தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துக்கொண்டிருந்தது.

புணேயில் கோவிட் தொற்று உச்சத்தில் இருந்தது. சுமார் 45 நாட்கள் நாங்கள் படு பிஸியாக இருந்தோம். எங்களிடம் 100 கோவிட்-19 தொற்று நோயாளிகள் இருந்தனர். தினமும் 5 முதல் 6 பேர் வரை கொரோனாவுக்கு பலியானார்கள். எங்கள் மருத்துவ மனை ஊழியர்களில் 30 சதவீதம் பேருக்கு ஒரு முறை அல்ல, இரண்டு முறை தொற்று பாதிப்பு ஏற்பட்டது. தினசரி 400 பேருக்கு நாங்கள் தடுப்பூசி போட்டு வருகிறோம் என்றார் RI இயக்குநராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள மகேஷ் கோட்பாகி. கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்ட தொலை தூரத்தில் இருக்கும் ரோட்டரி தலைவர்களையும் அவர், தனிப்பட்ட முறையில் கண்காணித்து வருகிறார்.

அவரை சுற்றியிருப்பவர்களும் மருத்துவர்கள்தான். அவரது தந்தை, தாத்தா மற்றும் அவருடைய மனைவி அமிதா மற்றும் மூத்த மகள் சின்மயியும் மருத்துவர்தான். இளைய மகள் சனாவும் மருத்துவம் பயின்று வருகிறார்.

கோட்பாகி, 1991 ஆம் ஆண்டு, புணே பல்கலைக்கழகத்தில் மகப்பேறு மருத்துவத்தில் பட்டமேற்படிப்பை முடித்தார். தந்தை அரசு மருத்துவராக இருந்தபோதிலும், படித்து முடித்த உடனேயே தனிபாதையில் பயணிக்க முற்பட்டு கோட்பாகிமருத்துவ மனையைத் தொடங்கினார். கல்லூரி நாட்களின் இறுதியாண்டில் சிறிய மருத்துவமனையைத் தொடங்கிய நான், அதை ஒரு பெரிய மருத்துவ மனையாக உருவாக்க முடிவு செய்து அதற்காக கடனுதவி பெற்றேன். நான் படித்து முடித்தபோது மருத்துவமனையில் ஒரு பகுதிதான் தயார் நிலையில் இருந்தது. 10 படுக்கைகளுடன் மருத்துவமனை செயல்பட்டது. பின்னர்தான் விரிவாக்கம் செய்யப்பட்டது என்றார்.

மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் மருத்துவ வசதிகள் கிடைக்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டிய அவர், பல குறைந்த கட்டண மருத்துவ ஆலோசனை மையங்கள் உருவாகக் காரணமாக இருந்தார். குறைந்த செலவில் மருத்துவ ஆலோசனை வழங்கவும், குழந்தைகள் கல்வியை

ஒரு பார்வை

மதம்: *கடவுள் எங்கும் இருக்கிறார் என்று நம்புகிறேன். அதனால் நான், எல்லா மதவழிபாட்டு இடங்களுக்கும் அது மசூதியாக இருந்தாலும், தேவாலயமாக இருந்தாலும் சரி, சென்று வழிபடுவேன்.*

உணவு: *நான் சாப்பாட்டுப் பிரியன். இந்திய வகை அசைவ உணவுகள் எனக்கு பிடிக்கும்.*

பிடித்தமான விடுமுறை ஸ்தலம்: *நான் உலகம் சுற்றும் வாலிபன். கார், பைக் சுற்றுப்பயணம் பிடிக்கும். 50க்கும் மேலான நாடுகளுக்கு விமானத்தில் பயணம் செய்திருக்கிறேன். இமயமலை, நார்வே, அயர்லாந்து மற்றும் நியூஸிலாந்து எனக்குப் பிடித்தமான இடங்கள். அமிதாவுக்கு அலாஸ்கா என்றால் விருப்பம். நியூஸிலாந்தில் குடும்பத்துடன் வடக்கிலிருந்து தெற்கு பகுதிக்கு பொழுதுபோக்கு வேனில் (Recreation Van-RV) சுற்றியிருக்கிறேன். ஒவ்வொரு நாட்டிலும் நான்தான் காரை ஓட்டிச்செல்வேன். ஹோட்டல் முன்பதிவு இல்லை.*

படித்தல்: *படிப்பதில் ஆர்வம் இல்லை. நான் சிறுவனாக இருக்கும்போது எனது தாயார், நான் ஒரு பக்கத்தை படிக்க 25 காசுகள் கொடுப்பார். இப்படித்தான் நான் டாக்டர் ஆனேன்!*

இசை: *உலகில் உள்ள இசை எல்லாம் பிடிக்கும். ஜுகல்பந்தி, பியானோ, ஸாக்ஸபோன், தபேலா உள்ளிட்டவை பிடிக்கும்.*

திரைப்படங்கள்: *நான் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக திரையரங்குகளுக்குச் சென்று திரைப்படம் பார்த்ததில்லை.*

பிடித்த நடிகர்: *எப்போதுமே நடிகர் அமிதாப்பச்சன்.*

ஓய்வு: *நான் ஓய்வெடுப்பதேயில்லை.*

சாகசங்கள்: *நான் சாகசச் செயல்களில் அதிகம் ஈடுபடுவேன். ஹார்லி டேவிட்ஸன் பைக்கில் ஒரே நாளில் 1,200 கி.மீ. தொலைவு பயணம் செய்திருக்கிறேன். பிஎம்டபிள்யூ, மெர்சிடெஸ் கார்களை ஓட்டுவது பிடிக்கும். கல்லூரி நாட்கள் முதலே கார் பந்தயங்களில் பங்கேற்றிருக்கிறேன்.*

சமையல்: *பார்பிக்யூஸ், கிரில்கள் சமைக்கத் தெரியும். நண்பர்கள் அதை விரும்பி சாப்பிடுவார்கள். ஆடு, கோழி, மீன் உள்ளிட்ட அனைத்து இறைச்சி வகைகளையும் நான் தயாரிப்பேன்.*

உடல்தகுதி: *நான் வழக்கமாக உடற்பயிற்சி நிலையத்துக்குச் சென்று பயிற்சியில் ஈடுபடுவேன். கடந்த 18 மாதங்களாக அவற்றை செய்வதற்கு எனக்கு நேரம் கிடைக்கவில்லை.*

ஊக்குவிக்கவும் சின்மயி மருத்துவ அறக்கட்டளையை நிறுவினார்.

ஆரம்ப கட்ட ரோட்டரி பயணம்

பார்வையற்றோருக்கு சேவை செய்ததற்காக பத்மஸ்ரீ விருது பெற்ற கண் பார்வையற்ற ரோட்டேரியன் நிரஞ்சன் பாண்ட்யா, கோட்பகியின் தந்தையை அணுகி, புணே ஸ்போர்ட்ஸ் சிட்டி ரோட்டரி சங்கத்தில் சேர அழைப்பு விடுத்தார். அவருக்கு பார்வைதான் இல்லையே தவிர மனதளவில் அவரது கண்ணோட்டம் விரிவடைந்திருந்தது. என் தந்தை அவரிடம், எனக்கு பதிலாக என் மகனை சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதுதான் ஆரம்பம்.

அதற்கு காரணம் புணே பல்கலைக்கழகத்தில் மகனின் 10 ஆண்டு சாதனைப் பதிவு. நான் ஒருவன்தான் தொடர்ந்து 10 ஆண்டுகள் மாணவர்கள் சங்க பிரதிநிதியாகச் செயல்பட்டேன். அவற்றில் இரண்டு ஆண்டுகள் மாணவர் தலைவராகவும் இருந்துள்ளேன் என்று புன்னகையுடன் தெரிவித்தார் கோட்பகி. இளம் வயதிலேயே மாணவர்கள் பிரதி நிதியாக செனட் அவையிலும் உறுப்பினராக இடம்பெற்றார். கிராமப்புற மாணவர்கள் மற்றும் பெண்களுக்கு நீதி கிடைக்க மாணவர்கள் போராட்டத்தையும் முன்னின்று நடத்தியவர். புணே நகரம் அப்போது கல்வி கற்பதற்கு சிறந்த இடமாக இருந்தது. 25-க்கும் மேற்பட்ட மாநிலங்களிலிருந்து மாணவர்கள் அங்கு படித்துவந்தனர். இடம்பெயர்வு, மாணவர் சேர்க்கை, தேர்வுகள் நடத்துவதில் தாமதம் என பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்ள நேரிட்டபோது நாங்கள் ஒரு போராட்டம் (ATKT) நடத்தினோம். அதாவது மாணவர்கள் ஒரு பாடத்தில் தோல்வி அடைந்துவிட்டார்கள் என்பதற்காக அவர்கள் ஓராண்டை

இழந்துவிடக்கூடாது என்று வலியுறுத்தி இந்த போராட்டம் நடைபெற்றது என்று குறிப்பிட்டார்.

உங்களுக்கும் அந்த நிலை ஏற்பட்டதா என்று நான் அவரிடம் நகைச்சுவையாகக் கேட்டேன்.

அதிர்ஷ்டவசமாக அப்படியில்லை. நான் புத்திசாலி மாணவன். எனக்கு அது தேவைப்படவில்லை. ஆனால், மற்ற மாணவர்களுக்காக நான் போராடினேன். நான் பிரபலமான மாணவர் தலைவர் என்பதால் என்னால் மாணவர்களை பெருமளவில் திரட்டி பேரணி, ஆர்ப்பாட்டம் நடத்த முடிந்தது. நான் அரசியலில் ஈடுபடுவேன் என்றே பலரும் நினைத்தார்கள். என்றார் கோட்பாகி.உங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்ததா? என்று அவரிடம் கேள்வி எழுப்பினேன். அதற்கு அவர், நிச்சயமாக உள்ளாட்சித் தேர்தல், எம்.எல்.ஏ., மற்றும் மேயர் பதவிகளுக்கு போட்டியிடவும் எனக்கு வாய்ப்பு தேடிவந்தது. ஏன் மாநிலங்களை உறுப்பினர் பதவியும் என்னைத் தேடிவந்தது. ஆனால். நான்தான் அவற்றை மறுத்துவிட்டேன். அந்தக்காலத்தில் படித்தவர்கள் அரசியலில் ஈடுபட்டாலும் எனது பெற்றோர் நான் அரசியலில் ஈடுபடுவதை விரும்பவில்லை. இதுவும் ஒரு காரணம்.

என் தந்தை, நான் அரசியலில் ஈடுபடுவதை தடுக்கும் வழியாக, என்னிடம் ரோட்டேரியன் பாண்ட்யாவை சந்திக்குமாறு கூறினார். நான் பாண்ட்யாவை சந்தித்து, "என்னிடம் என்ன எதிர் பார்க்கிறீர்கள்" என்று கேட்டேன். அதற்கு பாண்ட்யா, மகாராஷ்டிரத்தில் மிகப்பெறிய கண் மருத்துவமனை நிறுவ வேண்டும் என்பது எனது கனவு. அதற்கு உங்கள் அனுபவம் உதவும் என்று நினைக்கிறேன். காசோலைகளில் கையெழுத்திடவும், பணிகளை மேற்கொள்ளவும் எனக்கு நம்பிக்கையான ஒருவர் தேவை என்றார்.

இதை சவாலாக எடுத்துக் கொண்ட நான் 1995யில் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தேன். பார்வை இழப்பு குறித்த ஆராய்ச்சியில் இறங்கினேன். எனக்கு ஜெர்மனியில் உள்ள கிறிஸ்டோபர் பார்வையற்றோர் இயக்கம், பார்வை இழப்பை தடுப்போர் சங்கம், தேசிய பார்வையற்றோர் இயக்கம் ஆகிய அமைப்புகளுடன் தொடர்பு ஏற்பட்டது. மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கும் சென்று பார்வையிட்டேன். ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற உலக பார்வையற்றோர் மன்ற மாநாட்டிலும் கலந்துகொண்டேன். பார்வையற்றோர் மற்றும் அவர்களின் உளவியல் தன்மைகளைத் தெரிந்துகொண்டேன். அவர்கள் எப்படி சிந்திக்கிறார்கள், திட்டமிடுகிறார்கள், பார்வையற்றோர் பயணத்தின்போது அவர்களுக்கு உதவ நாய்களுக்கு எப்படி பயிற்சி அளிப்பது போன்ற பல விஷங்களைத் தெரிந்து கொண்டேன் என்றார்.

மூன்று ஆண்டுகளிலேயே

சங்கத்தின் தலைவர் ஆனேன். பல்வேறு சேவை நடவடிக் கைகளிலும் ஈடுபட்டேன். அதன் மூலம் நிறைய அனுபவம் கிடைத்தது. நன்கொடை தருவதாக பலரும் உங்களிடம் உறுதியளிப்பார்கள். ஆனால், நிஜத்தில் அப்படி ஏதும் நடக்காது. ஆறு மாதங்களுக்குப் பிறகு என்னால் நன்கொடை ரசீது அச்சடித்து தந்த அச்சகத்திற்கு கூட பணம் கொடுக்க முடியவில்லை என்று நினைவுகூர்ந்தார் கோட்பாகி.ஆனால், நிதி திரட்டுவது என்றால் என்ன? அதில் உள்ள சிரமங்கள் என்பதை அப்போது நான் புரிந்துகொண்டேன். பின்னர் மக்கள் பங்களிப்பின் மூலம் நாங்கள் பல்வேறு சாதனைகள் புரிந்தோம் என்றாலும் ஆரம்பம் புரியமாலே இருந்தது. புணே பார்வையற்றோர் ஆடவர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளராக பாண்ட்யா இருந்தார். புணேயில் பார்வையற்றோருக்கான மிகப்பெரிய சங்கம் அது. மருத்துவ மனை அவர்களுக்காகவே கட்டப் பட்டது. ரோட்டேரியன்களும் கார்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு அமைப்பும் அதன் கூட்டாளிகள். இந்த மருத்துவ மனையைக் கட்டி முடிக்க 10 ஆண்டுகள் ஆனது. அரசு சலுகை விலையில் நிலம் கொடுத்தது. இன்று அந்த மருத்துவமனை மகாராஷ்டிரத்திலேயே மிகப்பெரிய கண் மருத்துவமனையாக உள்ளது. தினமும் 100 பேருக்கு அங்கு இலவசமாக கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன என்று பெருமையுடன் குறிப்பிட்டார் கோட்பாகி.கோட்பகிதான் அவரது சங்கம், மாவட்டத்தின் (அப்போது 3130) இளம் உறுப்பினர். மாவட்டத்தில் மொத்தம் 155 சங்கங்கள் இடம் பெற்றிருந்தன. 1997ம் ஆண்டு அப்போது தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்ட நபர் திடீரென ஐரோப்பாவுக்கு மாற்றப்பட்டதை அடுத்து, அந்த கடைசி நேரத்தில் அந்தப் பதவிக்கு பொருத்தமான ஒரே நபர் மகேஷ்தான் என்று வாரியம் கூறியது.

அவர் எப்படி மாவட்ட ஆளுநரானார் என்பது சுவாரஸ்யமான கதை. தலைவர் பதவிக்காலம் முடிந்தபின் அவர் தொழிற்கல்விக்குழுவின் GSE தலைவர் பதவிக்கு விண்ணப்பித்த துடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், மாவட்ட ஆளுநர் மற்றும் முன்னாள் ஆளுநர்கள் பங்கேற்ற குழு விவாதத்தின்போது, நீங்கள் சிறந்த வேட்பாளர்தான், மற்றவர்களை விட நீங்கள் இளையவர் என்பதால்

உங்களைத் தேர்வு செய்ய முடியாது. உங்களுக்கு இன்னும் வயது இருக்கிறது, பின்னர் பார்க்கலாம் என்று கூறிவிட்டனர்.

பாகுபாடு காட்டப் பட்டதாக உணர்ந்த அவர் மாவட்டச் செயலர் பதவியை ராஜிநாமாச் செய்தார். DGE அவரிடம், "நீங்கள் கோபமாக இருக்கிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர், இல்லை, இந்த பதவியில் நீடித்தால் நான் மாவட்ட ஆளுநர் பதவிக்கு போட்டியிட தகுதியற்றவன் என்று மாவட்ட துணை விதிகள் கூறுகின்றன. அதனால் ராஜிநாமா செய்தேன். இனி எதிர்காலத்தில் என்னிடம் நேர்காணல் செய்ய முடியாது. ஆனால், நான் மாவட்ட ஆளுநராகி விட்டால் என்னிடம் நேர்காணல் செய்யலாம் என்றார்.

மூத்தவர்கள் யாவரும் எதிர்பாராத வகையில், அதிர்ச்சி தரும் வகையில் கோட்பாகிபோட்டியில் பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற்றார். தாம் மாவட்ட ஆளுநராக இருந்த காலத்தின் சி றப்பு அம்சங்களை கோட்பாகிவிவரித்தார். ஜப்பானிய ரோட்டேரியன்களுடன்

பழங்காலத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாடுகள்

அந்தக் காலத்தில் எங்க ளுடையது உள்பட பல மாவட்ட மாநாடு களில் முன்னாள் மாவட்ட ஆளுநர்கள், மாநாடு தொடங்கும் நாட்களிலிருந்து இறுதி நாட்கள் வரை மேடையில் அமர்ந்திருப்பார்கள் என்று நினைவுகூர்ந்தார் மகேஷ் கோட்பகி. குறும்புக்கார இளைஞரான நான், என்னை சுற்றியுள்ளவர்களிடம் முன்னாள் PDGக்கள் கழி வறையைப் பயன்படுத்த மாட்டார்களா என்று கேட்பேன். அவர்களால் எப்படி கடைசிவரை அசையாமல் மேடையில் அமர்ந்திருக்க முடியும்? என்னைச் சுற்றி அமர்ந்திருப்பவர்கள் ஒன்று தலை நரைத்துப் போய் இருப்பார்கள் அல்லது வழுக்கைத் தலையாக இருப்பார்கள். அந்த நாளில் இளம் ரோட்டேரியன் என்ற கருத்துக்கே இடமில்லை. மாவட்ட ஆளுநரின் சராசரி வயது 65 முதல் 70 வரை இருக்கும்.

தாம் மாவட்ட ஆளுநராக இருந்த போது நடந்த விவாதங்களின் போது, அனைத்து மாவட்ட ஆளுநர்களும் மேடையில் அமர்ந்திருக்கும் நடைமுறைக்கு அவர் எதிர்ப்பு தெரிவித்தார். நட்சத்திர பேச் சாளர் பிரதிநிதிகளிடையே உரையாற்றும் போது முக்கியப் பிரமுகர்களான மாவட்ட ஆளுநர்கள் மேடையில் பேச்சாளரின் பின்புறம் அமர்ந்திருப்பார்கள். அவர்களது முகத்தில் எந்த உணர்ச்சியும் இருக்காது. மேடையில் பேசுபவரின் உரை எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. உரையாற்றுபவர்தான் மேடையில் இருக்க வேண்டும். மாவட்ட ஆளுநர்கள் உள்ளிட்ட மற்றவர்களெல்லாம் பார்வையாளர்களாக முன்வரிசையில் தான் அமர்ந்திருக்க வேண்டும் என்று நான் உறுதிபட தெரிவித்தேன். இன்றும் மாவட்ட மாநாடுகளில் பேச்சாளர் ஒருவர் மட்டும் மேடையி'ல் இருக்கிறார்கள் என்றால், அது நான் ஆளுநராக இருந்தபோது எனது பதவிக்காலத்தில் தொடங்கியதுதான்.

பத்து ரோட்டரி கழகங்களை அமைக்க திட்டமிட்டுள்ளதாக கோட்பாகி தெரிவித்தார். முன்பு இவை வறண்டு இருந்தன. முன்னாள் இயக்குநர்கள், மூத்த தலைவர்களை பற்றி குறிப்பிடுவதிலேயே பாதி நேரம் செலவழிந்துவிடும். பார்வையாளர்களுக்கு சலிப்பு ஏற்பட்டுவிடும். ஒருவரை பற்றிய அறிமுகத்துக்கே அதிக நேரம் எடுத்துக்கொள்வார்கள். 8 நிமிடம் பேசும் ஒருவருக்கு 10 நிமிடங்கள் அறிமுகம் நடைபெறும். இதுபோன்ற முட்டாள்தனமான செயல்களை நிறுத்த வேண்டும் என்று நான் கண்டிப்புடன் கூறிவிட்டேன். சேகர் மேத்தா, கழகத்தின் இயக்குநரானபோது நடைபெற்ற கூட்டத்தில் புதுவிதமான உத்தியை கடைப்பிடித்தேன். இரண்டு நிமிடங்களுக்கு மேல் அறிமுக உரை இல்லை. பின்னர் நடைபெற்ற எழுத்தறிவு மாநாட்டிலும் இதே நடை முறை பின்பற்றப் பட்டது. அவர் திட்ட மிடுதலிலும் செயல்படுத்து வதிலும் முழுமனதுடன் ஈடுபட்டார்.

1. நியூசிலாந்தில் RV வண்டியுடன்; 2. நார்வேயில் படகு சவாரி; 3. பெற்றோர் Dr ஸ்ரீபத் மற்றும் உஷாவுடன்; 4. மனைவி அமிதாவுடன்; 5. அம்ரித்ஸர் தங்க கோவிலில்.

அமிதாவின் பங்கு

அமிதாவும் எனது பெற்றோரும் எனக்கு பெருமளவு ஆதரவாக இருந்துள்ளனர். எங்கள் மண்டலத்திலேயே நான் ஒருவன் தான் இளம் வயதிலேயே இயக்குநர் ஆனேன். நாங்கள் அதிகம் பயணம் செய்யவேண்டியிருந்தது. நீ சமூக சேவை செய்து வருகிறாய். எனவே எங்கு வேண்டுமானாலும் செல் என்று என்னை பெற்றோர் உற்சாகப்படுத்தினார்கள். அமிதாவை தங்கள் மகள் போல் நடத்தினார்கள். நான் மாவட்ட ஆளுநர் தேர்தலில் வெற்றி பெற்ற போது இரண்டாவது குழந்தைக்கு தாயாகி இருந்தார் அமிதா. நாங்கள் சர்வேதச அசெம்பிளி கூட்டத்தில் பங்கேற்கச் சென்றபோது எனது பெற்றோர், சகோதரி, அவளின் பெற்றோர், சகோதரிகள் குழந்தையை பார்த்துக்கொண்டனர். (நான் குழந்தைகளை இங்கேயே விட்டுச் சென்ற போது அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அவர்களுடன் தொலைபேசியில் பேசும் போது நான் தான் அவர்களைப் பிரிந்திருக்கிறோமே என்று அழுவேன். சில பயிற்சி அமர்வுகளின் போது ரோட்டேரியன்கள் எங்கள் குழந்தைகளை மடியில் வைத்துக் கொள்வார்கள். நாங்கள் அப்போது மேடையில் இருப்போம் என்றார் அமிதா.).

மருத்துவமனை வேலை, ரோட்டரி வேலையில் நான் ஈடுபட்டிருக்கும்போது அமிதா எனக்கு ஆதரவாக இருப்பார். அவரும் ரோட்டரி நடவடிக்கைகள் முழுமனதுடன் ஈடுபடுவார். 2000ம் ஆண்டில் அவர் ரோட்டரியில் இணைந்தார். மாவட்ட ஆளுநர் பதவியைத் தவிர, சங்கத் தலைவர், உதவி ஆளுநர், பயிற்சியாளர் என அனைத்து பதவிகளையும் அவர் வகித்துள்ளார், என்றார் கோட்பாகி.

மகேஷ் பேசுகிறார்

தலைமைத்துவ குணங்கள்: விரைந்து முடிவெடுப்பது, புதுமையான செயல்களில் ஈடுபடுவது மற்றும் வெளிப்படைத்தன்மை.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் முன்னுரிமை: நான் ஒரு கடுமையான பயிற்சியாளர். ஒரு லட்சம் பேருக்கு இலவச அறுவைச்சிகிச்சை மற்றும் மருத்துவ உதவி அளிக்கும் ஒரு திட்டத்தை 15 மருத்துவக் குழுக்கள் மூலம் 15 மாநிலங்களில் செயல்படுத்தத் திட்டம். இதற்காக மாநில முதல்வர்கள், சுகாதார அமைச்சர்களிடம் பேசி வருகிறேன். இரண்டாவது, RILM திட்டத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 1947ல் தொடங்கி இன்று வரை இந்தியாவை முழு எழுத்தறிவு பெற்ற நாடாக மாற்ற முடியாதது வெட்கக் கேடானது.

ரோட்டரி இந்தியாவின் பலமும் பலவீனமும்: ரோட்டரி சேவைத் திட்டங்கள் மற்றும் அதற்கு செலவிடும் மனித நேரங்களில் நாம் ஒரு பக்கமும், உலகில் உள்ள இதர நாடுகள் வேறு பக்கமும் இருக்கின்றன. நாம் ஒரு மாவட்டத்தில் 40 சர்வதேச மானியத் திட்டம், 20 முதல் 25 CSR மற்றும் இதர திட்டங்களை நமது மண்டலங்களில் செயல்படுத்தி வருகிறோம். ஏனெனில் அதற்கான தேவையும், வாய்ப்பும் இருக்கிறது. நாம் வளரவேண்டியது முக்கியம், ஆனால், நமக்கு அரசியல் தேவையில்லை. இந்த சவாலை எப்படிச் சமாளிப்பது? அதற்கு ஒரு மந்திரவாதி தேவை. தேர்தல் நடத்தாமல் இருப்பது சரியல்ல; அது உறுப்பினர்களின் ஜனநாயக உரிமை. ஆனால், ரோட்டேரியன்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். மாவட்ட ஆளுநர் அல்லது இயக்குநர் பதவி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத்தான். அதன் பிறகு நீங்கள் முன்னாள் ஆளுநர் அல்லது முன்னாள் இயக்குநராகி விடுவீர்கள். ஆனாலும் ஒருவரும் நம்மை முன்னாள் ரோட்டேரியன் என்று சொல்லமுடியாது. இதை புரிந்துகொண்டால் அனைத்து பிரச்னைகளும் காணாமல் போய்விடும்.

தொற்று நேரத்து சவால்கள்: சந்திப்பு என்பது நெகிழ்வானதாக காலை உணவு, மதிய உணவு, ஆன்லைன் என்று இருக்க வேண்டும். நாம் இப்போது ரோட்ராக்டர்களும் ரோட்டரியின் அங்கம்தான் என்று சொல்லுகிறோம். நல்லது, ஆனால் ஒரு ரோட்ராக்டர் எங்களுக்கு வழுக்கை தலை பால் ஹாரிஸ் தேவையில்லை, இளம் ஹாரிஸ் தான் தேவை என்கிறார். கோவிட் தொற்றுக்காலத்துக்கு பிறகு ரோட்டரி சந்திப்பு நிகழ்ச்சிகளில் 40 சதவீதம் மெய்நிகர் மூலம் இருக்க வேண்டும். இது பெரிய நகரங்களில் போக்குவரத்து நெரிசல்களைத் தாண்டி கூட்டத்திற்கு வருவதிலிருந்து நிம்மதி அளிக்கும்.

நேசிக்கும் மதிப்புகள், கற்றல்: நான் சிறுவனாக இருக்கும்போது என் தந்தை மாட்டு வண்டியில் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு மருத்துவ உதவி அளித்து மாத்திரைகளை கொடுத்து விட்டு வருவார். அதற்கு பிரதி உபகாரமாக விவசாயிகள் அரிசி, வெல்லம், காய்கறி போன்றவற்றை என் தாயாரிடம் கொடுத்துவிட்டு, "எங்கள் உயிரை நீங்கள் காப்பாற்றி விட்டீர்கள். அதற்கு எங்கள் சிறு காணிக்கை இது" என்று கூறிவிட்டுச் செல்வார்கள். பாராட்டுக்கு வெகுமதி தேவையில்லை என்பதை நான் அப்போது கற்றுக்கொண்டேன்.

கனவு: நான் ரோட்டரியிடம் எதையும் கேட்டதில்லை. ஆனால், ரோட்டரி எனக்கு பல தளங்களை அமைத்துக் கொடுத்தது. பேச, கலந்துரையாட, கற்றுக்கொள்ள, செயல்பட என உலகின் ஒவ்வொரு மூலையிலும் நண்பர்கள் இருக்கிறார். நான் யாரிடமும் எதுவும் கேட்டதில்லை. நான் இதுவரை வளர்ந்துவிட்டேன். இன்னும் வளருவேன் என்ற நம்பிக்கை உள்ளது.

மகேஷ் கோட்பாகி, அமிதா, சின்மயி, மற்றும் ஸனா.

மகேஷ் கோட்பாகியை எப்படி சந்தித்தீர்கள்? என்று அமிதாவிடம் நான் கேட்டேன். நான் 11ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது அவர் 12ம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது தான் அவரை சந்தித்தேன். பின்னர் நாங்கள் நெருங்கிய நண்பர்களானோம். என்னுடைய தந்தை ஒரு பொறியாளர் என்பதால், நானும் ஆரம்பத்தில் என்ஜினீயரிங் படிக்கவே ஆசைப்பட்டேன். அப்போது மகேஷ், தாம் டாக்டருக்கு படிக்கப்போவதாகக் கூறினார். நீயும் டாக்டருக்குப் படித்தால் நன்றாக இருக்கும் என்றார். அவர் சொன்னதால் நான் 11 ஆம் வகுப்பில் கணக்குப் பாடத்தை கைவிட்டு அடுத்த ஆண்டு உயிரியல் பாடத்தை எடுத்துப் படித்தேன்.

நாங்கள் இருவரும் மருத்துவம் படித்ததால் இருவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அடிக்கடி சந்திக்க நேரிட்டது. நட்பு காதலாக மாறியது. 1991ம் ஆண்டு எங்கள் திருமணம் நடைபெற்றது.

உங்கள் கணவர் பெரும்பாலான நேரத்தை ரோட்டரிக்கே செலவழிக்கிறாரே, அவரை எப்படிச் சமாளிக்கிறீர்கள்? என்று கேட்டதற்கு, நான் எனது தொழிலில் பிஸியாக இருக்கிறேன். குழந்தைகளும் வளர்ந்துவிட்டார்கள். அவரது தந்தை பெரு நன்கொடையாளர். எனவே சேவை என்பது எங்கள் குடும்பத்தின் ஒரு பகுதியாகிவிட்டது என்றார் அமிதா.

அவரது ரோட்டரி நடவடிக்கைகளில் நானும் ஆர்வத்துடன் ஈடுபடுவேன். அதனால் தானோ என்னவோ 2000ம் ஆண்டில் நானும் ரோட்டரியில் சேர்ந்துவிட்டேன். 2009ம் ஆண்டு உள்வரும் தலைவர் கடைசி நேரத்தில் ராஜிநாமா செய்ததை அடுத்து தலைவர் பதவிப் பொறுப்பை ஏற்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

நான் சங்கத்தின் தலைவராக இருந்த போது அனைவரும் எனக்கு முழு ஒத்துழைப்பு அளித்தார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கு நான் செவிசாய்த்ததால், அவர்கள் மகிழ்ச்சியுடன் எனக்கு எல்லாவிதத்திலும் உதவினார்கள். நான் தலைவர் பதவியை முழுமையாக அனுபவித்தேன். அதுமட்டுமல்ல, மகேஷும் எனக்கு உதவிகரமாக இருந்தார். ரோட்டரி பற்றி அவர் முழுமையாக அறிந்திருந்ததால், நான் எதற்கும் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது.

இறுதியாக ஒரு கேள்வி. கோட்பாகி யிடம் இருக்கும் நல்ல குணம் என்ன? அவர் எதைச் செய்தாலும் விருப்பதுடன் முழு ஈடுபாட்டுடன் செய்வார். அவர் நல்ல பேச்சாளர். எந்த ஒரு சிறிய விஷயமாக இருந்தாலும் பிறரிடம் நம்பிக்கை ஏற்படும் வகையில் பேசி செயல்படுத்தும் சக்தி படைத்தவர். எல்லாவற்றையும்விட அவர் மக்கள் நாயகனாக இருந்தார். அவரால் மக்களுடன் தரையில் அமர்ந்து சாப்பிடவும் முடியும். அதனால், அவர்கள் கோட்பாகியை தங்களின் ஒருவனாக கருதுகிறார்கள். நட்புறவு பாராட்டுகிறார்கள். இது தான் அவரிடம் உள்ள சிறந்த குணம் என்றார் அமிதா.

இணைந்து மகளிர் எழுத்தறிவு மையங்களை ஏற்படுத்தினோம். அமிதாவும் நானும் நட்புறவு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஜப்பான் சென்றோம். அவர்களும் புணேவுக்கு வருகை தந்தனர். நாங்கள் 13 கிராமங்களைத் தத்தெடுத்து அங்கு தொழிற் பயிற்சி மையங்களை ஏற்படுத்தினோம். பள்ளிகள், பயிற்சிபெற்ற பெண்களுக்கு உதவியாக பேருந்துகளை நன்கொடையாக வழங்கினோம்.

ஆனால், எனது மனதிற்கு பிடித்த திட்டம் எதுவென்றால், புணேயில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி பால கல்யாண் சன்ஸ்தானில் பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்திக் கொடுத்ததுதான். நாங்கள் அவர்களுடன் இணைந்து ஒலி-ஒளி காட்சி அறையை ஏற்படுத்திக் கொடுத்தோம். கார்ட்டூன் மற்றும் இதர படங்களை பார்வையிட மிகப்பெரிய திரையை ஏற்படுத்திக் கொடுத்தோம். அவர்களுக்கு பாட்டு சொல்லிக் கொடுத்தோம், நீந்தவும் கற்றுத்தந்தோம். குதிரை சவாரி, ஒட்டக சவாரிக்கும் ஏற்பாடு செய்தோம். கார்ப்பொரேட் நிறுவனங்கள் உதவியுடன் பேருந்துகளைப் பெற்று, அதை மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயன்படுத்தும் விதத்தில் மாற்றியமைத்து ஊரகப் பகுதிகளில் உள்ள குழந்தைகளை ஒவ்வொரு வாரமும் இந்த மையத்துக்கு அழைத்து வந்து பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைத்தோம் என்றார்.

கோட்பாகி எடுத்த முயற்சியால் சங்க உறுப்பினர்கள் நட்சத்திர ஹோட்டல்களில் சந்திப்பதை கைவிட்டு இந்த மையத்திலேயே கூடிப்

தொற்றுக்காலத்தில் மருத்துவமனையை நடத்துவதில் உள்ள சவால்கள்!

ரோட்டரி செய்திக்குழுவுடன் உரையாடியபோது, கோவிட் தொற்று நோயாளிகளுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கும்போது உள்ள சிக்கல்களையும், சவால்களையும் அவர் விவரித்தார். கோவிட் தொற்றுள்ள 100 நோயாளிகளை நிர்வகிப்பதில், மருத்துவ வசதி அளிப்பதில் எங்கள் வரம்புகளுக்கு உட்பட்டு செயல்படுகிறோம். ஆக்சிஜன் விநியோகம் இல்லை, ரெம்டெசிவிர் மருந்துக்கும் தட்டுப்பாடு, அதிக பணம் கொடுத்தாலும் ஊழியர்கள் வேலைக்கு வர மறுக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்கு குடும்பத்தை பற்றிய கவலை. அதை புரிந்துகொள்ள முடிகிறது என்றார்.

சாதாரண நேரங்களில் இந்திய மருத்துவத்துறையின் தனித்துவமான அம்சம் என்னவெனில், நோயாளிகளுக்கு உணவு கொண்டு வருவது, அவர்களின் ஆடைகளை துவைத்து தருவது, மன ரீதியில் ஆறுதல் கூறுவது என உறவினர்கள் பல வேலைகளைச் செய்கிறார்கள். ஆனால், கோவிட் தொற்று காலத்தில் உறவினர்கள் மருத்துவமனைக்கு வந்து நோயாளியை பார்வையிடவோ அல்லது தங்கியிருந்து உதவி செய்யவோ முடியாது. நோயாளிகளைப் பராமரிப்பது, அவர்களுக்கு ஊட்டச்சத்தான உணவுகளை வழங்குவது, ஆடைகளை துவைத்துத் தருவது என எல்லாமே மருத்துவமனையின் பொறுப்பாகிவிடுகிறது. கோவிட் நோயாளிகள் பிரிவை கவனிப்பதும், கோவிட் அல்லாத சாதாரண வார்டுகளை கவனிப்பதும் மாறுப்பட்ட அனுபவம் கொண்டது மட்டுமல்ல, சவால்கள் நிறைந்தது.

சில நேரங்களில் கணவன், மனைவி மற்றும் குழந்தைகள் நோய்த்தொற்று காரணமாக சிகிச்சை பெறுவார்கள். அப்போது மருந்து, மாத்திரைகள் வாங்குவதற்கோ, ATMல் பணம் எடுத்துத் தரவோ யாரும் இருக்க மாட்டார்கள். அந்த சமயத்தில் நோயாளிகளை கவனிப்பதில் சமூக-உளவியல் சிக்கல்கள் ஏற்படும். கோவிட் நோயாளியின் மரணம் உணர்வுபூர்வமானது. ஏனெனில் உடலை உறவினர்களிடம் ஒப்படைக்க முடியாது. அந்த சூழ்நிலையில் நாங்கள் 100க்கும் மேற்பட்ட இறுதிச் சடங்குகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டியிருந்தது என்கிறார் கோட்பாகி.

கோட்பாகியின் மருத்துவமனை அந்த பிராந்தியத்தில் மிகப்பெரிய மருத்துவமனையாகும். அங்கு தினமும் 400 பேருக்கு தடுப்பூசி போடப்படுகிறது.

பேசினர். இதனால், அதிக பணத்தை இந்த மையத்துக்கு செலவழிக்க முடிந்தது. உறுப்பினர்களும் முழு ஈடுபாட்டுடன் சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 25 ஆண்டுகள் ஆன பின்பும் எங்கள் சங்கக்கூட்டம் அங்குதான் நடைபெறுகிறது. எங்கள் சங்க உறுப்பினர்கள் ரோட்டரியினர் என்ற முறையிலும், தனிப்பட்ட முறையிலும் அங்கு சென்று சிறப்புக் குழந்தைகளுடன் நேரத்தை செலவிடுகிறார்கள். அதனால், அந்த மையமும், அங்குள்ள சிறப்பு குழந்தைகளும் எங்களை பாதுகாப்பாளர் போல கருதிவருகின்றனர். எங்கள் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் நூறு சதவீதமாக நீடிக்கிறது என்றார்.

RI இயக்குநர் பதவிக்கான பயணம் பற்றி கோட்பாகி குறிப்பிடுகையில், எனது வளர்ச்சியில் PRID சுஷில் குப்தா உள்ளிட்ட பலர் அக்கறை கொண்டிருந்தனர். சுஷில் குப்தா பெரும் வர்த்தகர் என்றாலும் ரோட்டரி என்று வரும்போது யதார்த்தை புரிந்துகொண்டு அவர் செயல்பட்டார். நாங்கள் இணைந்து திட்டங்களைச் செயல்படுத்தினோம். அடுத்து குறிப்பிட வேண்டுமானால் சேகர் மேத்தாவுடன் இணைந்து செயல்பட்டது. அப்போது அவர் ரோட்டரி இயக்குநராகக்கூட இல்லை. கமல் சங்வி, மனோஜ் தேசாய், குலாம் வாஹன்வதி, ரவி வாட்லாமணி ஆகியோரையும் குறிப்பிடலாம். சேகரின் ஆற்றல் தனித்துவமானது. நாங்கள் ஆறு பேரும் ரோட்டரி இந்தியா மனிதநேய அறக்கட்டளையை உருவாக்கியவர்கள். இதுதான் RILM உருவாக வழிவகுத்தது.

மேத்தா, தேசாய் மற்றும் சங்வி இயக்குநர்களான போது, நாம் ஒருவேலையில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு அதை வெற்றிகரமாக முடித்தால் மற்றவர்களால் அங்கீகரிக்கப்படுவோம் என்று உணர்ந்தேன்.

பெண் உறுப்பினர்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில், எங்கள் மாவட்டத்தில் (3131) 30 சதவீத பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இது சர்வேத சராசரியைவிட அதிகம். நகரங்களில் படித்த, தொழில்முறை பெண்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் ஊரகப்பகுதிகள்தான் சவால் நிறைந்தவை. பெண்கள் குழுவாக இருக்கவே விரும்புவார்கள். எனவே அவர்களை ஒரு சிறு குழுக்களாகத் தேர்ந்தெடுத்து அவர்களை திட்டச் சேவைகளில் ஈடுபடுத்த வேண்டும். 35 வயதான இரு பெண்களை நீங்கள் சேர்த்தால் அவர்கள் நீண்டகாலம் இருக்கமாட்டார்கள். 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்தான் நமது இலக்காக இருக்க வேண்டும்.

RI இயக்குநர் என்ற முறையில் கோட்பகி, RI வாரியத்தின் நிர்வாகக் குழுவில் இடம்பெறுகிறார். நிர்வாகக் குழு தலைவர், RI தலைவர், RIPE, RI துணைத் தலைவர், பொருளாளர் மற்றும் RI குழு உறுப்பினர் இதில் இடம்பெற்றிருப்பார்கள். இந்த நிர்வாகக் குழு வாரியத்தின் தனிப்பட்ட குழுவாகவும், வாரியத்தின் சார்பாகவும் ரோட்டரி விதிமுறைகளின்படி செயல்படும்.

படங்கள்: ஸனா கோட்பாகி

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

கோவிட்: அமைதியாக இருங்கள், வீட்டில் தனித்திருங்கள்

Dr V ராமசுப்பிரமணியன்

ரஷீதா பகத்

கோவிட் தொற்றின் இரண்டாவது அலை இந்தியாவில் கடும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் நிலையில் மக்களிடம் மன உளைச்சலும் பீதியும் அதிகரித்து வருகிறது. இந்த நேரத்தில் அமைதியாக இருந்து, மருத்துவ ஆலோசனைகளுடன் விவேகமாக செயல்பட்டாலே அதை வெற்றிகொள்ள முடியும் என்கிறார் Dr V ராமசுப்பிரமணியன். தொற்றுநோய் நிபுணரான இவர் 30 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் கொண்டவர். மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராகவும் இருக்கிறார். ஊடகங்கள் தேவையில்லாமல் இந்த விஷயத்தில் பரபரப்பை ஏற்படுத்துகின்றன என்கிறார் இவர். இந்த தொற்று காலத்தில் தினமும் 150 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வரும் அவர், ரோட்டரி செய்திக்கு சிறப்பு பேட்டியளித்தார். முதன்மையாக நாம் அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும் என்கிறார்.

கேள்வி: நீங்கள் ஏன் தொற்றுநோயில் நிபுணத்துவம் பெற முடிவு செய்தீர்கள்?

பதில்: எனது தந்தை பொது மருத்துவர். அவருக்கு இப்போது 90 வயதாகிறது. இன்னும் சென்னையில் உள்ள தனது கிளினிக்கில் தொழில் செய்து வருகிறார். 1992ம் ஆண்டில் சண்டீகரில் உள்ள மருத்துவ பட்டமேற்படிப்பு ஆராய்ச்சிக் கழகத்தில் பொது மருத்துவத்தில் எம்.டி. பட்டம் பெற்றேன். இதயநோய் அல்லது நரம்பியல் போன்ற ஒரே மருத்துவத்தில் கவனம் செலுத்த விரும்பாமல் பொது மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்றேன்.

கேள்வி: உங்களின் 30 ஆண்டுக்கால மருத்துவத் தொழிலில் இதுபோன்ற வைரஸ் பாதித்த தொற்றுநோயை நீங்கள் பார்த்ததுண்டா?

பதில்: இல்லை. தொற்று ஏற்படுவதை தவிர்க்க முடியாது. ஆனால், தொற்று சொல்லிக்கொண்டு வருவதில்லை. 1918ம் ஆண்டிலிருந்தே இதுபோன்றவற்றை பார்த்து வருகிறோம்.

கேள்வி: நாம் தவறான பாதையில் சிக்கிக்கொண்டோமா, இதை இன்னும் சிறப்பாக கையாண்டிருக்க வேண்டுமா?

பதில்: சுயபரிசோதனை செய்து பார்த்தால் நாம் இன்னும் சிறப்பாக செயல்பட்டிருக்கலாம். ஆனால், எந்த ஒரு நோயாக இருந்தாலும் முன்பே எடுக்கப்படும் நடவடிக்கைகள் அதிகமாகவும் பின்னர் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறைவாகவும் இருக்கிறது.

கேள்வி: கோவிட் முதல் அலையை இந்தியா நன்றாக கையாண்டது போல இருந்தது. ஆனாலும் இரண்டாவது அலை சுனாமிபோல தாக்கிவிட்டது. இரண்டாவது அலை வரும் என நீங்கள் எதிர்பார்த்தீர்களா?

பதில்: இரண்டாவது அலை வரும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன். இவ்வளவு கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்ககவில்லை. இந்த முறை பாதிப்பு வேகமாகவும் அதிக எண்ணிக்கையிலும் இருந்தது. ஆனால், முதல் முறை எண்ணிக்கை குறைந்ததற்கு பல காரணங்கள் உள்ளன. பரிசோதனை செய்வதில் உள்ள பிரச்னை, அதிகச் செலவு மற்றும் பரிசோதனை செய்தால் தொற்று இருக்கிறது என்று சொல்லி விடுவார்களோ என்ற பயம் மற்றும் தொற்று இருப்பது தெரியவந்தால் வீட்டின் முன் தட்டி கட்டி பெயர் எழுதிவிடுவார்களோ என்ற பயத்தினால் மக்கள் பரிசோனை செய்து கொள்ள முன்வரவில்லை.

அந்த சமயத்தில் உழைக்கும் வர்க்கத்தினர்தான் தொற்றால் பாதிக்கப்பட்டனர் என்றாலும் சில நாட்களில் குணமடைந்துவிட்டனர். அதனால் அவர்கள் அதைப்பற்றி கவலைப்படவில்லை. ஒருவர் பரிசோதனை செய்துகொண்டால், 10 பேர் பரிசோதனை செய்து கொள்ளவில்லை. ஆனால், அவர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதற்கு நான் உத்தரவாதம் தருகிறேன்.

கேள்வி: அதிக செலவு, கோவிட் பரிசோதனை குறைவுக்கு காரணமா?

பதில்: ஆமாம். கட்டணம் ரூ.4,000 இருந்தது. எனவே ஒரு சிலர்தான்

பரிசோதனை செய்துகொள்ள முன்வந்தார்கள். அந்த நேரத்தில் முதியவர்கள்தான் பாதிக்கப்பட்டார்கள். இளைஞர்கள் பாதிக்கப்படவில்லை. நான் பலரிடம், உங்கள் வயது 30 தான். நீங்கள் பரிசோதனை செய்து கொள்ளத் தேவையில்லை. நன்றாகத் தான் இருக்கிறீர்கள். உங்களை தனிமைப்படுத்திக் கொண்டாலே போதுமானது என்று ஆலோசனை வழங்கியிருக்கிறேன். அவர்களும் அதை பின்பற்றினார்கள்.

ஆனால், இரண்டாவது அலை, வசதியானவர்கள், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் வீட்டிலிருந்தபடி வேலை செய்பவர்களையும் தாக்கியது. அவர்களிடம் பணம் இருந்தது. அறிவும் இருந்தது. தங்களை பாது காத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார்கள். எனவே யாருக்கேனும் தொண்டை முழுங்க முடியாமல், மூக்கு அடைப்பு மற்றும் தலைவலியால் அவதிப்பட்டு வந்தால் உடனடியாக பரிசோதனை செய்துகொள்ளுங்கள். ஏனெனில் இப்போது பரிசோதனை செய்துகொள்வதும் எளிது, கட்டணமும் குறைவு.

கேள்வி: மக்கள் ஆக்சிஜனுக்காக மருத்துவமனையின் வெளியே வரிசைகட்டி நிற்கிறார்கள். எந்த மருத்துவமனையிலும் படுக்கை வசதிகள் இல்லை. நோயாளிகள் இறப்பு அதிகரிக்கிறது. இது ஏன், எப்படி எதனால்?

பதில்: ஸ்பெயின், இத்தாலி, இங்கிலாந்து நாடுகள் மற்றும் நியூயார்க் நகரில்கூட முதல் கட்டத்திலேயே மோசமான அளவில் பாதிக்கப்பட்டனர். ஆனால், இப்போது அவர்கள் இந்தியாவில் நிலைமை மோசமாக இருப்பதுபோல் பேசுகிறார்கள். இது அபத்தமானது. அவர்களது நிலை முதல் கட்டத்திலும் இரண்டாவது கட்டத்திலும் மோசமாகத் தான் இருந்தது. வளர்ந்த நாடுகளில் நோயாளிகளை ஸ்டிரெச்சரில் அழைத்து வரும்போது அவர்கள் இறந்து கிடக்கும் காட்சிப் படங்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு மருத்துவமனைகளில் போதுமான படுக்கை வசதியோ அல்லது எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவ வசதியோ இல்லை. இந்தியாவை பற்றிய மேற்கத்திய நாடுகளின் அணுகுமுறை என்னை திகைக்க வைக்கிறது. அவர்களும் இதை கடந்துவந்தவர்கள்தான். உங்களால் 10 நோயாளிகளைத்தான் கையாள முடியும் எனில், திடீரென 1,000 பேர் வந்துவிட்டால் என்ன செய்ய முடியும்? யாராலும் அவர்களை கையாள முடியாது. நாம் அனைவரும் தவறு செய்துள்ளதை ஏற்றுக்கொள்வோம். இந்தியாவை யாரும் சுட்டிக்காட்ட வேண்டாம். ஏதோ தாங்கள் உயர்ந்தவர்கள் என்று காட்டிக் கொள்ள வேண்டாம். அது சரியல்ல. அவர்களைவிட 10 அல்லது 50 அல்லது 100 மடங்கு மக்கள் தொகை கொண்ட நம்நாட்டில் நாம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறோம்.

கேள்வி: கோவிட் 4 லட்சம் என உச்சம் தொட்ட நிலையில் இப்போது பாதிப்பு 2 லட்சமாக குறைந்துள்ளது. இது இன்னும் குறையும் என்று நம்புகிறீர்களா?

பதில்: நிச்சயமாக. சென்னையில் புறநோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. உள்நோயாளிகள் எண்ணிக்கை எப்போதும் வெளிநோயாளிகளைவிட இரண்டு வாரம் பின்தங்கியே இருக்கும். இன்னும் இரண்டு வாரங்களில் உள்நோயாளிகளின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறையும்.

கேள்வி: அளவுக்கு அதிகமாக மக்களிடம் பீதி ஏற்பட்டுள்ளதாக நினைக்கிறீர்களா?

பதில்: ஆமாம். கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் வீட்டுத் தனிமையில் இருந்தால் குணமடையலாம். இதை புரிந்து கொண்டு மக்கள் அமைதி காக்க வேண்டும்.

என்னுடைய மருத்துவமனையிலும் குணமடைந்த நோயாளிகள் இருக்கிறார்கள். அவர்களை வீட்டிற்கு போகச் சொன்னால், இன்று செவ்வாய்க்கிழமை, நல்ல நாள் இல்லை, அல்லது இன்று 9 ஆம் நாள் நான் போகமாட்டேன். மேலும் வீட்டிற்குச் சென்றாலும் என்னை பார்த்துக்கொள்ள ஆளில்லை. நான் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாள் இங்கேயே இருக்க விரும்பு கிறேன் என ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். நீங்கள் குணமாகி விட்ட நிலையில் மற்றவர்களுக்கான படுக்கையை தடுப்பது வருத்தத்தை அளிக்கிறது. அதாவது மக்களிடம் பரிவு, பச்சதாபம் இல்லை.

கேள்வி: கோவிட் பற்றி ஏராளமான தகவல்களும், தவறான தகவல்களும் நம்மைச் சுற்றி வருகின்றன. எதை நம்புவது?

பதில்: நாம் அதிக தகவல் சுமை நிறைந்த சூழலில் இருக்கிறோம். சிறுவயதில் எனக்குத் தேவையான தகவல்களைப் பெற நான் நூலகத்துக்குச் செல்லவேண்டும். ஆனால், இன்று வீட்டில் இருந்தபடியே கணினியை தட்டினால் எந்த தகவலை வேண்டுமானாலும் தெரிந்துகொள்ள முடியும். மேலும் வாட்ஸ் ஆப்,

முகநூல், இன்ஸ்டாகிராம் போன்ற வசதிகளும் உள்ளன. 30 ஆண்டு அனுபவத்திற்கு பிறகு நான் சில விஷயங்களை அலசி ஆராயும் போது தகவல்கள் பெற சிரமப்படுகிறேன். அப்படி இருக்கும்போது சாதாரண மனிதரால் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள்?.

கேள்வி: மக்கள் உங்களிடம் வந்து நுரையீரல் ஸ்கேன் செய்யவேண்டுமா? டி-டைமர் பரிசோதனை செய்ய வேண்டுமா? என்பது போன்ற முட்டாள் தனமான கேள்விகளை கேட்கிறார்களா?
பதில்: அவர் சிரிக்கிறார். ஆமாம் என்பது போல் தலையாட்டுகிறார்.

கேள்வி: நீங்கள் இன்றும் ஒரு நாளைக்கு 100 நோயாளிகளைப் பார்க்கிறீர்களா?
பதில்: அப்பல்லோ மருத்துவ மனையில் உள் மற்றும் வெளி நோயாளிகள் எனது கிளினிக் என தினமும் 150 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கிறேன். ஆனால், சமீபத்தில் பொது முடக்கம் அறிவிக்கப் பட்டதை அடுத்து எண்ணிக்கை குறைந்து விட்டது.



கேள்வி: இரண்டாவது அலையில் அதிகமான மக்கள் உயிரிழக்கிறார்கள். இந்த உருமாறிய கொரோனா முதலில் வந்ததைவிட ஆபத்தானதா, நுரையீரலை பாதிக்குமா?
பதில்: இதற்கான முழுக் காரணம் தெரியவில்லை. ஆனால், சில கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இரண்டாவது அலையில் காணப் படும் உருமாறிய கொரோனா முதல் தொற்றை விட வேகமாக பரவக்கூடியது. ஒரு வீட்டில் முதல் முறை இருவர் தொற்றால் பாதிக்கப் பட்டிருந்தால் இப்போது 4 அல்லது 5 பேர் பாதிக்கப்படுவார்கள். தொற்று பாதிப்பு எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, உயிரிழப்பும் அதிகரிக்கிறது. முதல் முறை தொற்று தாக்கியபோது இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்படவில்லை. ஆனால், இந்த முறை இளைஞர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இளைஞர்களே அதிகம் உயிரிழந்துள்ளனர். ஆனால், அதற்கான காரணம் தெரியவில்லை. இந்த முறை தொற்று கொஞ்சம் வசதியானவர்களை குறிவைக்கிறதா என்பதும் எனக்குத் தெரியாது.

கேள்வி: மூன்றாவது அலை வரும் என்று எதிர்பார்க்கிறீர்களா?
பதில்: ஆமாம். இந்த ஆண்டு இறுதியில் வரலாம். ஆனால், அது எவ்வளவு கடுமையாக இருக்கும் என்பதை என்னால் சொல்ல முடியாது. ஆனால், இதை தவிர்க்கமுடியாது. நிச்சயம் வரும்.

கேள்வி: தடுப்பூசி போட்டுக்கொண்ட வர்கள் பாதுகாப்பாக இருப்பார்களா?
பதில்: ஆமாம். நிச்சயம் அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். ஆனால், தொற்று ஏற்படுவதைத் தடுக்க முடியாது. ஆனால், அதன் வீரியம் குறைவாகவே இருக்கும். பயப்படும்படி ஏதும் இருக்காது.

கேள்வி: ஒரு சாதாரண மனிதரான எனக்கு சளி, இருமல், மற்றும் லேசான காய்ச்சல் இருந்தால் நான் என்ன செய்ய வேண்டும்?
பதில்: கோவிட் தொற்று என்று நீங்கள் சந்தேகித்தால் முதலில் உங்களை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுக்கு பரிசோதனை தேவையா என்பதை இரண்டு மூன்று நாள் காத்திருந்து பாருங்கள். முதல் நாள் மூக்கு அடைப்பு இருந்து பிறகு சரியாகிவிட்டால் நான் கவலைப்பட மாட்டேன். ஆனால், தொடர்ந்து காய்ச்சல், தலைவலி, உடல்வலி, வயிற்றுப்போக்கு, சுவை அறியாமல் இருத்தல் ஆகியன இருந்தால் பரிசோதனை செய்துகொள்ளுங்கள். எனினும் உங்களை முதலில் தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு கோவிட் தொற்று இருப்பதாகத் தெரியவந்தால் பீதி அடையாதீர்கள். அமைதியாக இருங்கள். தொற்று இருக்கும் சிலர் இரவு 10 மணிக்கு மேல் தொலைபேசி மூலம் என்னிடம் தொடர்புகொண்டு டாக்டர் உங்களை உடனடியாக பார்க்க வேண்டும் என்பார்கள். அடுத்த நாள் பார்த்தாலே போதுமானது. C T ஸ்கேன், இரத்தப் பரிசோதனை என்பது எல்லோருக்கும் தேவையில்லை. உங்களுக்கு என்ன மாதிரியான பரிசோதனை தேவை என்பதை டாக்டரே உங்களுக்குச் சொல்வார்.

கேள்வி: C T ஸ்கேன் என்பது ஒருமுறை எக்ஸ்-ரே எடுப்பதைப்போல 300 மடங்கு கதீர்வீச்சு அபாயம் கொண்டது என்று நீங்கள், "எய்ம்ஸ்" மருத்துவமனை இயக்குநர் மற்றும் பல நிபுணர்கள் கூறுகிறார்களே. அது உண்மையா?
பதில்: நிச்சயமாக.

கேள்வி: அப்படியானால் அது எப்போது தெரியவரும்?
பதில்: மருத்துவ ரீதியாக பார்த்தால், 7 நாட்களுக்கு தொடர்ந்து அறிகுறி உள்ளவர்களுக்கு அதைச் செய்யச் சொல்வோம். தொடர்ந்து இருமல் இருந்தால், ஆக்சிஜன் அளவு குறைந்து கொண்டே வந்தால் ஸ்கேன் எடுப்போம். வழக்கமாக C T ஸ்கேன் தேவைப்படாது. 10 சதவீதம் பேருக்குத்தான் அது தேவைப்படும்.

கேள்வி: தொற்றிலிருந்து குணமடைந்த பிறகு சிக்கல்கள் ஏற்படுமா?

பதில்: குணமடைந்தவர்களில் 30 முதல் 40 சதவீதம் பேருக்கு, அதாவது கோவிட் தொற்று தோன்றிய இரண்டு வாரங்களுக்குப் பிறகு சில பிரச்னைகள் ஏற்படலாம். உதடு உலர்ந்து போவது, தலை கனத்து இருப்பது, முட்டி வலி, தூக்கமின்மை அல்லது அதிக தூக்கம் அல்லது சரியான தூக்கமின்மை போன்றவை இருக்கும். இன்னும் சிலருக்கு பசியின்மை, நெஞ்சு இறுக்கம், வறட்டு இருமல், முடி உதிர்தல், வேலையில் கவனம் செலுத்த இயலாமை, பீதி, பயம் போன்ற அறிகுறிகள் இருக்கலாம். அவற்றை தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்திதான் சிகிச்சை அளிக்க முடியும்.

கேள்வி: நீங்கள் உங்களிடம் வரும் நோயாளிகளை உளவியல் ஆலோசனை பெறுமாறு கேட்டுக் கொண்டீர்களா?

பதில்: நிச்சயமாக ஏனெனில் மக்கள் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களால் தூங்கமுடியாது. இறந்து விடுவோம் என்ற பயத்திலேயே இருப்பார்கள்.

கேள்வி: மருத்துவமனைக்கு நோயாளிகள் அதிக எண்ணிக்கையில் வந்தால் மூன்றாவது அலையை எப்படிச் சமாளிப்பீர்கள்?

பதில்: பத்திரிகைகள், ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் இதுபோன்ற செய்திகளை அடக்கிவாசிக்கா விட்டால், எதிர்மறையான செய்திகள் தருவதை அவை குறைத்துக் கொள்ளாவிட்டால் நிலைமை சீர்திருந்தாது. நான் திரும்பவும் சொல்கிறேன். நோய் பாதித்தவர்களை எளிதில் கையாண்டுவிடலாம். ஆனால், உளவியல் ரீதியாக பாதிக்கப் பட்டவர்களை கையாள்வது கடினம். மருத்துவமனைகளில் படுக்கைகள் இல்லாத நிலையில் நோயாளிகள் இடம் வேண்டும் என்று வற்புறுத்தினால், உங்களுக்கு மருத்துவ மனை சிகிச்சை தேவையில்லை என்று அவர்களுக்கு எப்படி விளக்க முடியும்? இது மிகவும் கடினமானது.

கேள்வி: கோவிட் தொற்று காலத்திலும், குணமடைந்த பின்னரும் ஒரு நோயாளி என்ன மாதிரியான உணவை சாப்பிட வேண்டும்?

பதில்: கோவிட் தொற்று விஷயத்தில் உணவுக்கு முக்கிய பங்கு ஒன்றும் இல்லை. சைவ அல்லது அசைவ உணவாக இருந்தாலும் சீரானதாகவும் ஊட்டச்சத்து நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

கேள்வி: எந்த தடுப்பூசியை போடலாம்?

பதில்: எது கிடைக்கிறதோ அதைப் போட்டுக்கொள்ளலாம். அனைத்து தடுப்பூசிகளும் பாதுகாப்பானவை மட்டுமல்ல, பலன்தரக்கூடியவை.

கேள்வி: இரத்தம் உறைந்துவிடுமோ என்கிற பயத்தை எப்படி நாம் கையாள்வது?

பதில்: எந்த தலையீடும், அது பாரா சிட்டமாலாகக் கூட இருக்கலாம், அதற்கும் பக்க விளைவுகள் உண்டு. வாய்ப்புகள் என்ன என்பதுதான் கேள்வி. நாம் சாலையில் காரை ஓட்டிச் செல்லும்போது விபத்தில் உயிரிழப்பதில்லையா அல்லது தலையில் காயமடைவதில்லையா? அதற்காக காரில் பயணம் செய்யாமல் வீட்டிலேயே இருக்க முடியுமா? முடியாது. அதுபோல்தான் இதுவும். இதனால் ஏற்படும் அபாயங்கள் அல்லது நன்மைகளை எடைபோட்டு செயல்பட வேண்டும். என்னைக் கேட்டால் அபாயத்தைவிட நன்மைகள்தான் அதிகம்.

கேள்வி: தடுப்பூசி போட்டுக் கொண்ட பிறகு பாதுகாப்பு நடவடிக்கை என்ன?

பதில்: முதல் தவணை தடுப்பூசி போட்டுக் கொள்வதால் நோய் எதிர்ப்பு சக்தி வந்துவிடாது. இரண்டாவது தவணை தடுப்பூசி போட்டுக் கொண்ட பின் இரண்டு வாரங்கள் கழித்துதான் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும், முழு பாதுகாப்பு தரும்.

கேள்வி: இரண்டு தவணை தடுப்பூசி களுக்கும் இடைவெளி என்ன?

பதில்: கோவேக்சின் தடுப்பூசி போட்டுக் கொண்டால் 4 வாரங்கள்

தொற்றுக் காலத்தில் ஆரோக்யமாக இருக்க ஐந்து வழிகள்

தொற்று நோய் நிபுணர் Dr V ராமசுப்பிரமணியத்திடம், இந்த தொற்றுக்காலத்தில் ஆரோக்கியமாகவும், நோய் எதிர்ப்பு சக்தியுடனும் இருக்க உடற்பயிற்சி அவசியமா என்று கேட்டேன். அதற்கு அவர் அளித்த பதில்.

உடற்பயிற்சி என்பது முக்கியமானது. உடலை ஆரோக்கியமாகவும் நன்றாகவும் வைத்துக்கொள்ள ஐந்து வழிகள் உள்ளன. அதை பின்பற்றினாலே போதுமானது என்றார்.

- *சைவ அல்லது அசைவ உணவாக இருந்தாலும் சீரானதாகவும் ஊட்டச்சத்து நிறைந்ததாகவும் இருக்க வேண்டும்.*
- *தூக்கம் மற்றும் உடற்பயிற்சி: ஒவ்வொரு நாளும் 6 முதல் 8 மணி நேர தூக்கம் அவசியமானது. வாரத்தில் ஐந்து நாட்கள் அரை மணி நேரம் உடற்பயிற்சி செய்யுங்கள். வாரத்தில் 1.5 மணி நேரம் நடைபயிற்சி, சைக்கிள் ஓட்டுதல், நீச்சல் அல்லது ஏதாவது ஒரு விளையாட்டில் ஈடுபடுங்கள்.*
- *மது மற்றும் புகைப்பிடித்தல்: புகைப்பிடித்தலை தவிர்த்து விடுங்கள். எப்போதாவது மது குடிக்கலாம். வாரத்தில் 7 யூனிட்டுக்கும் குறைவாக இருக்க வேண்டும்.*
- *மன அழுத்தத்தை குறைக்க வேண்டும். இது மிக முக்கியமான காரணியாகும்.*
- *கோவிட் அல்லாத நேரங்களில் காய்ச்சல், டெட்டனஸுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். கோவிட் காலங்களில் கோவிட் தடுப்பூசியை தவறாமல் போட்டுக் கொள்ளுங்கள். அது உங்களை பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத் திருக்கும்.*

சென்ற பின் இரண்டாவது தவணை தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். ஆனால், கோவிஷீல்டு போட்டுக் கொண்டால் 12 வாரங்கள் இடைவெளி வேண்டும்.

கேள்வி: ஓராண்டுக்குப் பிறகு பூஸ்டர் தடுப்பூசி தேவைப்படுமா?
பதில்: பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ப்ளூ போல காய்ச்சல் இருந்தால் ஓராண்டுக்குப் பின் தடுப்பூசி தேவைப்படும். ஆனால், இது பற்றிய தரவுகள் இன்னும் கிடைக்கவில்லை.

கேள்வி: IMA மற்றும் யோகா குருவுக்கு இடையிலான சர்ச்சையின் பின்னணியில் கோவிட் தொற்றுக்கு பல்வேறு இந்திய மருத்துவ முறைகள் குணமளிப்பதாக கூறப்படுவது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
பதில்: மாற்று மருத்துவ முறைகள் மீது எனக்கு எப்போதும் ஒரு மரியாதை உண்டு. சில சமயங்களில் ஹோமியோபதி மருத்துவ முறை சிறந்ததாக இருக்கும். வேறு ஒரு சமயத்தில் ஆயுர்வேத மருத்துவம் சிறந்ததாக இருக்கும். அதில் சந்தேகமே வேண்டாம். ஆனால், பகுப்பாய்வு செய்து ஒரு முடிவுக்கு வருவதற்கு அவர்களுக்கு விஞ்ஞான ரீதியான பகுத்தறிவு இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் 50 நோயாளிகளுக்கு இந்த மருந்தை கொடுத்தேன். அவர்கள் எல்லோரும் உயிர்பிழைத்துவிட்டார்கள். எனவே இது நன்றாக வேலை செய்கிறது என்று சும்மா யாரும் சொல்லிவிட முடியாது. இதுபற்றி விஞ்ஞான ரீதியில் அலசி ஆராய வேண்டும்.

கேள்வி: தொற்று நோய் சிகிச்சை இந்திய மருத்துவமுறைகள் பயனுள்ளதாக இருக்கிறதா?
பதில்: ஓ நிச்சயமாக. ஆனால், கடினமான சூழ்நிலையில் "அல்லோபதி"யே சிறந்தது என்பது என் கருத்தாகும்.

கேள்வி: நீங்கள் ஒரு ரோட்டேரியன். இந்த தொற்றுகாலத்தில் ரோட்டரியும், சமூகமும் செயல்பட்ட விதம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
பதில்: மக்களிடையே ஊடகங்கள் பீதியை ஏற்படுத்தியதாக நான் குறைகூறினாலும், எனக்கு மனித உயிர்கள்மீது நம்பிக்கை இருக்கிறது. தொற்றுக்காலத்தில் ரோட்டரியினரும், சமூகத்தினரும் துரிதகதியில் செயல் பட்டார்கள். ஆக்சிஜன் செறிவூட்டி கள் வழங்குவது, நோயாளிகளுக்கு மருத்துவமனைகளில் படுக்கைகள் கிடைக்க உதவுவது, தடுப்பூசி முகாம் களை நடத்துவது என பல சேவை களில் ஆர்வமாக ஈடுபட்டனர். அதேபோல மக்கள் மனதிலிருந்து பீதியை அகற்றவும் நாம் செயல்பட வேண்டும். இதை ஊடகங்கள்தான் செய்ய வேண்டும்.

இந்த தொற்றின்போதும் சரி முந்தைய தொற்றின்போதும் சரி ரோட்டரி பலரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒருவர் உயிர்பிழைப்பதானாலும் சரி, உடல்நலம் தேறிவருவதானாலும் சரி அவர்களிடம் பரிவுகாட்டுவது முக்கியம். ரோட்டரி அற்புதமான ஒரு சேவை அமைப்பு. அது முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. நான் ஒரு ரோட்டேரியன் என்பதில் பெருமைப்படுகிறேன்.

கேள்வி: நீங்கள் நீண்ட நேரம் பணி செய்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களது ஒரு நாள் எப்படி இருக்கும்?
பதில்: சிரித்துக் கொண்டே நான் தினமும் காலை 5.30 மணிக்கெல்லாம் எழுந்துவிடுவேன். காலை 7 மணிக்கு எனது "காப்ஸ்டோன் கிளினிக்" மருத்துவமனைக்குச் செல்வேன். பின் அங்கிருந்து 9 மணிக்கு புறப்பட்டு காலை 10.30 மணிக்குள் சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்றுவிடுவேன். அங்கு உள் நோயாளிகள், புறநோயாளிகளைப் பார்த்து சிகிச்சை அளித்துவிட்டு மீண்டும் பிற்பகல் 3.30 மணிக்கு எனது மருத்துவமனைக்கு வந்துவிடுவேன். அங்கு இரவு 7 மணி வரை பணியில் இருப்பேன். அதாவது கிட்டத்தட்ட 12 மணி நேர வேலை. மாலையில் நேரமிருந்தால் உங்களைப் போன்றவர்களுடன் பேசுவேன். ஜூம் சந்திப்பில் பங்கேற்பேன். கமிட்டி கூட்டங்கள், பத்திரிகைகள், ஊடகங்களுக்கு பேட்டியளிப்பேன். அதையும் மீறி நேரம் இருந்தால் முகநூல், இன்ஸ்டாகிராமில் நட்பு முறையில் அரட்டைகளில் பங்கேற்பேன். இப்படித்தான் ஒரு நாள் செல்கிறது.

கேள்வி: உடற்பயிற்சி செய்வதுண்டா?
பதில்: உடற்பயிற்சி என்பது ஒரு பிரச்னையல்ல. நான் ஒருநாளைக்கு குறைந்தபட்சம் 10,000 அடிகள் நடக்கிறேன். அடிக்கடி மருத்துவமனையை சுற்றி வருகிறேன். நான் அன்றைய நாளை முடிக்கும்போது சோர்ந்துவிடுகிறேன். படுக்கைக்குச் சென்றால் ஐந்து விநாடிகளில் தூங்கிவிடுவேன். காலையில் அலாரம்தான் என்னை எழுப்பும்.■

டாக்டர் V ராமசுப்பரமணியன் RC மெட்ராஸ் கூட்டத்தில் முன்னாள் சங்கத்தலைவர் டாக்டர் விஜயபாரதியுடன்...

கோவிடுக்கு எதிராகப் போர் செய்வதுதான் நம் முக்கியக் கடமை

அசோக் மகாஜன்

ஒருபக்கம், கோவிட்-19 வைரஸால் ஏற்படும் அழிவுகளைப் பற்றிய அன்றாடச் செய்திகளை நாம் படிக்கிறோம். அதே நேரம், இந்தியா முழுவதும் உள்ள ரோட்டரியன்கள் அச்சம் அளிக்கும் இந்த வைரஸுக்கு எதிரான போரில் முன்களத்துக்கு வந்து பணியாற்றுவதைக் கண்டு இதயம் நெகிழ்கிறது.

கடந்த சில மாதங்களில் ரோட்டரி செய்துள்ள மிகச் சிறந்த பணியைப் பாருங்கள்: பல மாநிலங்களில் இலவசத் தடுப்பு மருந்து வழங்கல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன; மருத்துவமனைகளில் ஆக்சிஜன் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன; ஆக்சிஜன் செறிவூட்டிகள் வழங்கப் பட்டுள்ளன; பிளாஸ்மா வழங்கல்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன; துல்லியமான தகவல்களை வழங்க வும், கோவிட் உதவிப் பணியின் ஒருங்கிணைப்பை உறுதிசெய்யவும் அழைப்பு மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

RC மெட்ராஸ் தமிழ் நாட்டு அரசுடன் இணைந்து கோவிட் உதவிப் பணி, தடுப்பு மருந்து வழங்கலில் ஈடுபடுவதற்காக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்தச் சங்கம் தடுப்பு மருந்துகளின் போக்குவரத்துக்காக நான்கு குளிர் சாதன வசதி கொண்ட டிரக்குகள் மற்றும் பிற குளிர்ச்சங்கிலித் தளவாட வசதிகளை மாநில அரசுக்கு வழங்கியது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.1 கோடிக்கு மேல். சென்னை மாநகராட்சியுடன் சேர்ந்து இரண்டு நாட்களில் நகரெங்கும் ஒன்பது முகாம்களை இது நடத்தியது, 3,000 மக்களுக்கு இலவசமாகத் தடுப்பு மருந்து வழங்கியது. இந்தச் சங்கத்தின் தலைவர், செயலாளர், பிற அலுவல் பொறுப்பாளர்களுடைய மிகச் சிறந்த சேவைக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

RC உஜ்ஜய்ன், Rtn. அவினாஷ் குப்தாவுக்குச் சொந்தமான பிரஷாந்தி கார்டனில் 100 படுக்கைகளைக் கொண்ட தனிமைப்படுத்தல் மையம் ஒன்றை அமைத்துள்ளது. இந்த மிகச் சிறந்த திட்டத்தில் பல ரோட்டரியன் கள் உதவியுள்ளார்கள். மத்தியப் பிரதேசக் கல்வி அமைச்சர் ஏப்ரல் மாத நிறைவில் இதைச் சமூகத்துக்கு அர்ப்பணித்தார்.

தில்லியில், DG சஞ்சீவ் ராய் மெஹ்ரா மருத்துவமனைகளில் 10 ஆக்சிஜன் ஆலைகளை நிறுவ உறுதியளித்துள்ளார். RC டெல்லி பிரீமியர் என்ற ஒரு சங்கம்மட்டும் இரண்டு வாரங்களுக்குள் ஏழு மருத்துவமனைகளில் ஏழு ஆலைகளை நிறுவியது. ரூ.2 கோடி மதிப்புள்ள இந்தத் திட்டம் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு உடனே பலனளிக்கும்.

இந்தத் தேசிய நெருக் கடியின் போது மிகச் சிறந்த தலைமைப்பண்பு களை வெளிப்படுத்திய மாவட்ட, சங்கத் தலைவர்களை நான் பாராட்டுகிறேன், வணங்குகிறேன்.

நோயாளிகளின் எண்ணிக்கை உயர்வு உள்ளிட்ட பல காரணங் களால், நாடெங்கும் மருத்துவ மனைகளில் ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. திரவ மருத்துவ ஆக்சிஜன் போக்குவரத்துக்கு 1,200க்கு மேற்பட்ட கிரயோஜெனிக் டாங்கர் வண்டிகள் மட்டுமே உள்ள சூழ்நிலையில், இன்றைக்கு ஒவ்வொரு மருத்துவமனை, சிகிச்சை இல்லத்துக்கும் ஆக்சிஜன் செறிவூட்டிகள் சென்று சேரவேண்டும்.

GoI ஆக்சிஜன் செறிவூட்டிகளுக் கான GSTஐ ஜூன் மாத நிறைவுவரை 12%ஆகக் குறைத்துள்ளது, சுங்க வரியைத் தள்ளுபடி செய்துள்ளது. இதுபோன்ற இறக்குமதிகள் உயிர் காக்கும் மருந்துகளுக்கு இணையாகக் கருதப்பட்டு, சுங்க அனுமதி வழங்கப்படும். ஒவ்வொரு ரோட்டரி தலைவரும் வெளிநாடு களைச் சேர்ந்த தங்கள் தொகுப்புத் தோழர்கள், சகோதரச் சங்கங்களுடன் பேசி, ஆக்சிஜன் செறிவூட்டிகளை இந்தியாவுக்கு அனுப்புவதை ஒருங்கிணைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உயிர் காக்கும் இந்தக் கருவிக்கான நிதியைப் பெறுவதற்காக ரோட்டரி சங்கங்கள் தங்கள் சமூகத்தில் உள்ள நன்கொடையாளர்கள், பிற அமைப்புகளை அணுகலாம்.

தடுப்பு மருந்து வழங்கல்கள் போதுமான நிலைகளுக்கு மீட்டமைக்கப்பட்டவுடன், நாம் வாழும் சமூகங்கள் மேலும் பாதுகாப்பாக ஆவதை உறுதிப்படுத்த நாம் தயாராகவேண்டும். வைரஸ் இளம் மக்களைத் தொற்றலாம் என்கிற ஓர் உண்மையான கவலை உள்ளது. தடுப்பு மருந்தின் பாதுகாப்பு வலை தொலைவாகவும் அகன்றும் பரவவேண்டும், எவ்வளவு மக்களை எட்ட இயலுமோ அவ்வளவு மக்களை எவ்வளவு விரைவாக எட்ட இயலுமோ அவ்வளவு விரைவாக எட்ட வேண்டும்.

கட்டுரையாளர் ரோட்டரி இன்டர்நேஷனலின் முன்னாள் இயக்குநர், மற்றும், ரோட்டரி இந்தியாவின் கோவிட் செயல் குழுத்தலைவர்.

கோவிட் தடுப்பூசி பணியில் அரசுக்கு உதவி வரும் RC மெட்ராஸ்

V முத்துகுமரன்

RIDE A S *வெங்கடேஷ், முன்னாள் செயலாளர் விவேக் ஹரிநாராயணன் மற்றும் பொது சுகாதாரத்துறை இயக்குனர் செல்வவிநாயகம் ஆகியோர் கோவிட் தடுப்பூசியிற்கான குளிர் வசதி கொண்ட வண்டியுடன்...*

கோவிட் தடுப்பூசி போடும் தமிழக அரசின் பணிகளில், அதற்கு ஆதரவு அளிக்கும் வகையில் இத்திட்டத்தின் முக்கியப் பங்காளியாக ரோட்டரி தேர்ந்தெடுக்கபட்டுள்ள நிலையில், RID 3232க்கு உட்பட்ட RC மெட்ராஸ், 1,50,000 டாலர் மதிப்புள்ள குளிரூட்டப்பட்ட தளவாட வசதி களை மாநில சுகாதாரத்துறைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

மத்திய அரசின் தடுப்பூசி மையங் களிலிருந்து பிராந்திய தடுப்பூசி மையங்களுக்கு 44 லட்சம் குப்பி தடுப் பூசிகளை எடுத்துச் செல்ல வசதியாக 14 அடி கொண்ட இரண்டு குளிரூட்டப் பட்ட டிரக்குகள், இதேபோல பிராந்திய மையங்களிலிருந்து 20 லட்சம் குப்பி தடுப்பூசிகளை மாவட்ட மையங்களுக்கு எடுத்துச் செல்ல இரண்டு 8 அடி நீள குளிரூட்டப் பட்ட டிரக்குகள், மேலும் மாவட்ட மையங்களில் 10 லட்சம் தடுப் பூசிகளை குளிர்ப்பதன நிலையில் சேமித்து வைத்திருக்க 15 உறைநிலை குளிர்பதன பெட்டிகள், தடுப்பூசிகளை எடுத்துச் செல்ல 1,000 பெட்டிகள் (இதன் மூலம் ஒவ்வொரு முறையும் 30 லட்சம் பேருக்கு தடுப்பூசி போட முடியும்.) என பல்வேறு வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

கோவிட் தடுப்பூசிகளை அந்தந்த தடுப்பூசி மையங்களுக்கு கொண்டு செல்வதற்காக குளிரூட்டப் பட்ட டிரக்குகளின் சாவிகளை, மாநில சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் T S செல்வவிநாயகம் முன்னிலையில், மாநில சுகாதாரத்துறைச் செயலர் J ராதாகிருஷ்ணனிடம் வழங்கினார் RIDE A S வெங்கடேஷ். அப்போது சங்கத்தின் தலைவர் கபில் சிட்டாலே, செயலர் P B பிரசாத், திட்டத் தலைவர் உடுப்பி டாக்டர் கௌதம்தாஸ், இணை தலைவர் A M விசுவநாதன், சிறப்பு திட்ட இயக்குநர் S பாலகிருஷ்ணா மற்றும் மருத்துவத்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய வெங்கடேஷ், தமிழகத்தில் உள்ள 35,000த்துக்கும் மேலான ரோட்டேரியன்கள், தமிழ்நாடு அரசின் தடுப்பூசி திட்டத்துக்கு உதவத் தயாராக இருக்கிறார்கள். தடுப்பூசிகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பாதுகாப்பாக கொண்டு செல்ல தொடர் போக்குவரத்துக்கு தேவையான வாகன வசதிகளை, குளிர்பதன வச திகளை ஏற்படுத்தித் தரவும், தடுப்பூசி போடும் பணியில் உதவவும் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

கடந்த 35 ஆண்டுகளில், 92 ஆண்டுகள் பழமைவாய்ந்த ரோட்டரி சங்கம், உலகில் போலியோ ஒழிப்பில் முக்கியப் பங்காற்றியுள்ளது. இப்போது கோவிட்டுக்கு எதிராக நாடு முழுவதும் உள்ள அனைத்து மக்களும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில், தடுப்பூசி களை கொண்டு செல்ல குளிரூட்டப் பட்ட டிரக்குகளையும், குளிர்பதன பெட்டிகளில் தடுப்பூசிகளைக் கொண்டு

செல்வதற்கான வசதிகளையும் ஏற்படுத்தித் தந்துள்ளது என்றார் வெங்கடேஷ்.

ரோட்டரிக்கு ஆதரவுக்கரம் நீட்டிய பெரு நன்கொடையாளர்களான குக்சன் இந்தியா, SRF விநாயகா மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கோத்ரேஜ் பாய்ஸ், மாதவரம் ரோட்டரி சங்கம் ஆகிய ஐந்து நிறுவனங்களுக்கும் மற்றும் சென்னை ஐ.டி. சிட்டி ரோட்டரி சங்கம் மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் 15 சிறு நன்கொடையாளர்களுக்கும் அவர் பாராட்டு தெரிவித்துக்கொண்டார்.

தங்கள் சங்கம், அப்பல்லோ மருத்துவமனையுடன் கூட்டாக இணைந்து ஆரம்ப சுகாதார நிலையங்களோ அல்லது இதர மருத்துவ வசதிகளோ இல்லாத தொலைத்தூர குக்கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு வசதியாக நடமாடும் தடுப்பூசி வாகனத்துக்கு ஏற்பாடு செய்துள்ளதாக சிட்டாலே தெரிவித்தார். தடுப்பூசி போட்டுக் கொள்ளும் அவசியம் குறித்தான விழிப்புணர்வை மக்களிடைய ஏற்படுத்த சுந்தரம் மருத்துவ அறக் கட்டளையுடன் (SMF) இணைந்து செயல்பட இருப்பதாகவும் அவர் கூறினார். கோவிட் தடுப்பூசிகளை ஏற்றிச்செல்லும் டிரக்குகள் தடுப்பூசி களை வெப்பநிலை மாறாமல் எடுத்துச் செல்லக்கூடிய வகையில் பிரத்யேகமாக குளிரூட்டி வசதி கொண்டது. இவை 2–8 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலையை தக்கவைக்கும்

இடதிலிருந்து: சங்கத்தலைவர் கபில் சிட்டலே, TN சுகாதாரத்துறை செயலாளர் J ராதாகிருஷ்ணன் மற்றும் RIDE வெங்கடேஷ்.

திறன் கொண்டவை என்று டாக்டர் கௌதம்தாஸ், ரோட்டரி செய்திக் குழுவிடம் தெரிவித்தார்.

ஜூலை 2021-க்குள் 20–25 கோடி மக்களுக்குத் தடுப்பூசி போடுவதற்குத் தேவையான 400 முதல் 500 மில்லியன் குப்பி (டோஸ்) தடுப்பூசிகள் கிடைத்துவிடும் என்று மத்திய அரசு எதிர்பார்ப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் தெரிவித் துள்ளதை குறிப்பிட்டு பேசிய திட்டத் தலைவர், அக்டோபர் 15ம் தேதிக்குள் தடுப்பூசிகளை சேமித்து வைக்கவும் விநியோகம் செய்வதற்குமான ஏற்பாடு களை திட்டமிடுமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவித்தார். தயாரிப்பாளர்களிடமிருந்து தடுப் பூசியை பெற்றுக்கொள்வது முதல் அதை சென்னையில் உள்ள மத்திய சேமிப்பு கிடங்குக்கு கொண்டு சென்று பாதுகாப்பாக சேமித்து வைக்கும் வரையிலும், மேலும் அங்கிருந்து நகரங்கள், கிராமங்களில் தடுப்பூசி போடும் மையங்களுக்கு எடுத்துச்செல்லும் வரையிலான பணிகள் முக்கியமானவை. பொது மக்களுக்கு தடுப்பூசி போடும் வரை எந்தவித தவறும் நேர்ந்துவிடக்கூடாது. இதை உறுதிசெய்தால்தான் தடுப்பூசி திட்டம் முழு வெற்றிபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர் சேவைக்கு மிக்க நன்றி!

மாநில சுகாதாரத்துறைச் செயலர் J ராதாகிருஷ்ணன் பேசுகையில், 1985ம் ஆண்டு போலியோ தடுப்பூசி திட்டத்தில், பிரசாரத்தில் அரசு, ரோட்டரியுடன் இணைந்து செயல்பட்டதை நினைவு கூர்ந்தார். போலியோ ஒழிப்பு திட்டத்துக்குப் பின் மீண்டும் 1995ம் ஆண்டில் ரோட்டரி ஹெபடிடிஸ்-பி தடுப்பூசி திட்டத்தை நிறைவேற்றுவதிலும் ரோட்டரி உதவியது. இப்போது கோவிட் தடுப்பூசி திட்டத்தில் சில அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து உதவி வருகிறது. இப்படி தமிழகத்தில் ரோட்டரி சங்கம் அளித்துவரும் சேவைக்காக ரொம்ப ரொம்ப நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.■

கோவிட் நிவாரணம்: சமய சஞ்சீவியாக செயல்பட்ட கோவை ரோட்டேரியன்கள்

ஜெய்ஸ்ரீ

கோவிட் இரண்டாவது அலைக்கு எதிரான போராட்டத்தில், கோயம்புத்தூர் மருத்துவமனைகள், ஆக்சிஜன் தேவைப்படும் நோயாளிகளின் வருகை அதிகரித்ததைத் தொடர்ந்து கடுமையான ஆக்சிஜன் நெருக்கடியை எதிர்கொண்டன.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் (CMCH) முதல்வர் (டீன்) Dr A நிர்மலா, கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையின் மூத்த ஆலோசகரும், மயக்கவியல் மருந்து துறை நிபுணருமான Dr பாலவெங்கட்டிடம் உதவி கோரினார்.

ரோட்டேரியனும், கோயம்புத்தூர் ரோட்டரி சங்க உறுப்பினருமான அவர், உடனடியாக ரோட்டரி, ரவுண்ட் டேபிள் மற்றும் இதர அமைப்புகளிடம் உதவி கேட்டு விடியோ ஒன்றை சுற்றுக்கு அனுப்பினார். அடுத்த 48 மணி நேரத்தில் எங்களுக்கு ரூ.2.4 கோடி நிதியுதவி வந்து சேர்ந்தது. கோயம்புத்தூர் ரோட்டரி சங்கம் ரூ.1 கோடி திரட்டியது, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் Dr ராஜேஷ், Dr நித்யா இதே தொகைக்கு அமெரிக்காவிலிருந்து நிதி திரட்டினர். தொடர்ந்து நிதி வந்து கொண்டிருக்கிறது. அவை கோவிட் தொடர்பான நிவாரணப் பணிகளுக்குச் செலவிடப்பட்டு வருகிறது என்று Dr பாலவெங்கட் தெரிவித்தார்.

இந்த தொகையிலிருந்து கோவை அரசு மருத்துவமனை மற்றும் மூன்று ESI மருத்துவமனைகளில் ஆக்சிஜன் தயாரிக்கும் மினி ஆலை நிறுவப்பட்டது. ஒவ்வொரு ஆலையை நிர்மாணிக்கவும் தலா ரூ.27 லட்சம் செலவானது. ஒவ்வொரு ஆலையும் நிமிடத்துக்கு 100 லிட்டர் ஆக்சிஜன் தயாரிக்கும் திறன் கொண்டவை.

இது ஒரு கூட்டுமுயற்சி. இந்த சிக்கலான நேரத்தில் எல்லைகளை மறந்து அனைத்து சங்கங்களும் ஒன்றுபட்டு சேவை செய்து வருகின்றன என்றார் ரோட்டரி மாவட்டம் RID 3201க்கு உட்பட்ட கோயம்புத்தூர் ஸ்பெக்ட்ரம் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் செல்லா ராகவேந்திரா.

CMCH-ல் இரண்டு ஆக்சிஜன் ஆலைகள் அமைக்க சங்கம் ஆர்டர் கொடுத்திருந்தது. RC கோயம்புத்தூர் ஈஸ்ட் ஒரு ஆலையை அமைப்பதாக தெரிவித்துள்ளது. இந்த ஆலைகள் மூலம் தயாரிக்கப்படும் ஆக்சிஜன் குழாய் மூலம் 20 படுக்கைகளுக்கு ஒரே நேரத்தில் விநியோகம் செய்யப்படும். RC கோயம்புத்தூர் சாட்டிலைட், அக்வாசப் பம்ப்ஸ் நிறுவனத்துடன் இணைந்து அதிக சக்தியுள்ள ஆலையை CMCH-ல் நிறுவியுள்ளது. இந்த ஆலையில் தயாரிக்கப்படும் ஆக்சிஜனிலிருந்து ஒரு நாளைக்கு 72 சிலிண்டர்களை நிரப்ப முடியும். இதன் மூலம் மேலும் 20 படுக்கைகளுக்கு ஆக்சிஜன் கிடைக்கும்.

கோயம்புத்தூர் நார்த் ரோட்டரி சங்க உறுப்பினரான விவேகானந்தன், தனது நிறுவனமான ஃபாரடே ஓஸோன் மூலம் ஒரு வாரத்திற்குள் ஆக்சிஜன் தயாரிப்பு இயந்திரங்களை வழங்க ஏற்பாடு செய்தார். எங்கள் அவசரத் தேவையை உணர்ந்து கொண்டு விலைகளை குறைத்துக் கொண்டதுடன், ஏற்றுமதிக்கான ஆர்டர்களையும் தாற்காலிகமாக நிறுத்திவைத்தார். கோயம்புத்தூர் ஸ்பெக்ட்ரம் ரோட்டரி சங்கம், தைவானிலுள்ள ஒரு தொண்டு நிறுவனம் மூலம் 200 ஆகிசிஜன் செறிவூட்டிகளை வழங்கியது. அவை

ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் தயாரிப்பதை மேற்பார்வையிடும் ரோட்டரியினர்.

கோவிட் சிகிச்சை மையங்களாக மாற்றப்பட்ட பொது சுகாதார நிலையங்களுக்கு மாவட்ட ஆட்சியர் மூலம் வழங்கப்படும் என்றார் ராகவேந்திரா.

சஞ்சீவனி திட்டம்

ரோட்டரி இந்தியா கோவிட் பணிக்குழு மண்டல ஒருங்கிணைப்பாளர் சுநீல் ஜக்காரியா, DG ஜோஸ் சாக்கோ, உதவி ஆளுநர்கள் மற்றும் மாவட்ட இயக்குநர்களுடன் போர்க்கால அடிப்படையில் நிவாரணங்கள் வழங்குவது குறித்து மெய்நிகர் சந்திப்பை நடத்தினார். இந்த நெருக்கடியான நேரத்தில் ரோட்டேரியன்களாகிய நாம் செயல்படாவிட்டால் அது மிகப்பெரிய குற்றமாகும் என்றார். அவரது பேச்சு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றார் மாவட்ட இயக்குநர் RS மாருதி. நகரில் உள்ள 41 ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் உடனடியாக கோவிட் நிவாரணக்குழுவை அமைத்து அதற்கு G41 என்று அழைத்தனர். சஞ்சீவனி என்ற திட்டத்தின் கீழ் பொது மருத்துவமனைகள், முன்களப் பணியாளர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டப்பட்டது. மாருதி மற்றும் சமூக சேவை திட்டங்களுக்கான மாவட்டத் தலைவர் லெட்சுமணன் ஆகியோர் தலைமையில் குழு ஏற்படுத்தப்பட்டு தொண்டர்கள் அதில் இடம்பெற்றனர். ஒவ்வொரு சங்கங்களிலிருந்தும் வளங்களைத் திரட்டினோம். அவற்றை டாக்டர்கள், மருத்துவமனைகள், நர்சிங் ஹோம்ஸ், மருத்துவ உபகரணங்கள், உணவு மற்றும் ஆம்புலன்ஸ் சேவை என வகைப்படுத்தினோம். இதன் மூலம் தேவைப்படும்போது அவர்களை அதிவிரைவில் தொடர்புகொள்ள முடிந்தது என்றார் மாருதி.

DGE ராஜசேகர், PDG A V பதி, ராகவேந்திரா மற்றும் உதவி ஆளுநர்களுடன் கலந்து ஆலோசித்து சாக்கோ 20 அம்ச திட்டத்தை உருவாக்கினார். ரோட்டேரியன்கள், அவர்களது குடும்பத்தினர், ரோட்டரி ஊழியர்கள் மற்றும் ரோட்ராக்டர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. DRR ஜனனி தலைமையிலான ரோட்ராக்டர்கள் பொதுமக்கள் தடுப்பூசி

போட்டுக்கொள்ள ஆன்லைன் மூலம் பதிவு செய்வதற்கு குழுவுக்கு உதவியாகச் செயல்பட்டனர்.

ESI மருத்துவமனைக்கு ஆக்சிஜன் தயாரிப்பதற்கு 7 இயந்திரங்களை விரைவில் நாங்கள் வழங்க இருக்கிறோம். அங்கு கோவிட் நோயாளிகளுக்கான படுக்கை வசதி 600 லிருந்து 1000மாக அதிகரிக்கப் பட்டுள்ளதால் ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்றார் மாருதி. RC கோயம்புத்தூர் சாய் சிட்டி, சென்னையில் உள்ள கோரமண்டல் பெர்டிலைஸர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஊட்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் ரூ.50 லட்சம் செலவில் ஆக்சிஜன் தயாரிக்கும் ஆலையை நிறுவியுள்ளனர்.

சமீபத்தில் CMCH மற்றும் ESI மருத்துவமனைகளிலிருந்து RT-PCR பரிசோதனை கருவிகள் மற்றும் இதர மருத்துவ உபகரணங்கள் வேண்டும் என்று G41 குழுவுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது முடக்கத்தின் போது ஆரம்ப சுகாதார நிலையங்களின் பயன்பாட்டுக்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட 33 ஆட்டோக்களுக்கு தலா ரூ.10,000 வீதம் வாடகையையும் சங்கங்கள் செலுத்தியுள்ளன. இவை தவிர முகக்கவசங்கள், சானிடைசர்கள், ஆக்சிமீட்டர்கள், கையுறைகள் மற்றும் தனிநபர் கவச உடைகளையும் ஆரம்பு சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவ மனைகளுக்கு வழங்கியுள்ளன.

ரோட்டேரியன்கள் பலர், சமூக பொறுப்புள்ள கார்ப்பொரேட் நிறவுனங்களுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். இது தவிர வெளிநாடுகளில் உள்ள நண்பர்களும் கோயம்புத்தூரில் உள்ள மருத்துவ மனைகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டியுள்ளனர். உள்ளூர் சமூகத்தினரும் இதில் ஈடுபட்டுள்ளனர். சமீபத்தில் ரங்கராஜ் என்பவர் என்னிடம் தொடர்புகொண்டு, எங்கள் சேவையை பற்றி கேள்விப்பட்டதாகவும், தாமும் ரூ.1 லட்சம் நன்கொடையாக வழங்க விரும்புவதாகவும் தெரிவித்தார். கோவிட் நிவாரணப் பணிகளுக்கு நிதிகள் குவிந்து வருகின்றன. FCRA பதிவுக் கணக்குள்ள சங்கங்களுடன் ஒருங்கிணைந்து வெளிநாடுகளிலிருந்து நிதி பெறவும் கூட்டாகச் செயல்பட்டு வருகிறோம் என்றார் அவர். CII, SITRA, CAI போன்ற வர்த்தக அமைப்புகளும் ரோட்டரி மூலம் தங்களது பங்களிப்பைச் செலுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

நோயின் கடுமையால் பாதிக்கப் பட்ட நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்க ரோட்டேரியன்கள் உதவி செய்து வருகின்றனர். இது போன்ற நோயாளிக்கு 9 மணி நேர ஒருங்கிணைப்புக்குப் பிறகு மருத்துவ மனையில் படுக்கை வசதி கிடைத்தது. குணமடைந்ததும் ரோட்டரியில் சேர விரும்புவதாக அவர் கூறிய தாக மாருதி தெரிவித்தார். கோவிட் தொற்று நெருக்கடி தீர்ந்த பின்னால் நமக்கெல்லாம் புதிய, கதைகள் தெரிய வரும் என்றார்.■

கோவிட் நிவாரண பணிகளில் ரோட்டரியின் அயராத சேவை!

V முத்துகுமரன்

கோவிட் தொற்று இரண்டாவது அலையால் மக்கள் சொல்லொண்ணா துயரத்துக்கு மீண்டும் ஆளாகியுள்ளனர். இந்தச் சூழலில் நாடு முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள் ஒன்றிணைந்து உள்ளூர் நிர்வாகத்தினரிடம் கைகோர்த்து மருத்துவச் சிகிச்சைக்கான வசதிகளை செய்துகொடுப்பதிலும், தடுப்பூசி முகாம்கள் நடத்துவதிலும் அயராது சேவையாற்றி வருகின்றனர்.

RC காந்திதாம் (RID 3054)

குஜராத் மாநிலம், கட்ச் மாவட்டம், அஞ்சர் நகராட்சிக்கு உட்ப்பட்ட நாகல்பூர் என்னுமிடத்தில் பயன்படுத்தப்படாமல் இருந்த ஒரு கட்டடத்தை 40 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாக 10 நாட்களில் உருவாக்கியுள்ளனர் RID 3054-க்கு உட்பட்ட காந்திதாம் ரோட்டரி சங்கத்தினர்.

அஞ்சர் துணை ஆட்சியர் Dr விமல் K ஜோஷி உத்தரவின் பேரில் தாசில்தார் A M மந்தோரி, சங்க உறுப்பினர்களை நேரில் சந்தித்து, கோவிட் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவசர நடவடிக்கையாக ஆக்சிஜன் படுக்கைகளுடன் கூடிய மருத்துவ மனையை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார். இதைத் தொடர்ந்து சங்கத்தின் 63வது நிறுவன தினத்தன்று 7 பேர் அடங்கிய திட்டக்குழுவினர் சங்கத்தின் தலைவர் கெலா அஹிர் தலைமையில் நாகல்பூரில் 80 ஆகிசிஜன் படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையை ரூ.50 லட்சம் செலவில் தயார்படுத்தினர். துணை ஆணையர் ஜோஷி தலைமையிலான நிர்வாகத்தினர் கண்ட்லாவில் உள்ள இந்தியன் ஆயில் நிறுவனம் மூலம் ரூ.25 லட்சம் நிதிப் பங்களிப்புக்கு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார்.

அனைத்து பணிகளும் முடிக்கப் பட்டு 10 நாட்களில் 36 ஆக்சிஜன் படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனை, அஞ்சர் துணை ஆட்சியர் ஜோஷி மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் திறக்கப்பட்டது என்றார் கெலா அஹிர். மிகவும் நெருக்கடியான காலத்தில், அவசரத் தேவையை கருத்தில் கொண்டு குறுகிய காலத்தில் கோவிட் மருத்துவமனை அமைக்கப்பட்டதை பலரும் பாராட்டினர்.

PDG தீபக் ஷிகார்பூர் புனே மேயர் முரளிதர் மொஹோலிடம் கோவிட் தடுப்பு பொதிகளை வழங்குகிறார.

காந்தி தம் ரோட்டரி சங்கத்தினர் அஞ்சாரில் நிறுவப்பட்ட கோவிட் மருத்துவமனை வளாகத்தில்.

RC ஹௌரா (RID 3291)

கோவிட் தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, கோவிட் தடுப்பூசி பற்றிய தவறான தகவல்களால் மக்களிடையே ஏற்பட்ட தயக்கத்தை போக்குவது, உள்ளூர் மக்கள் மற்றும் ரோட்டரி உறுப்பினர்களுக்கு இலவச கோவிஷீல்டு தடுப்பூசி போடுவதற்கு அரசுக்கு உதவிகரமாக இருப்பது என மூன்று இலக்குகளை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது RID 3291க்கு உள்பட்ட RC ஹௌரா.

சங்கத்தின் தலைவர் Dr பமீலா கோஷ், உள்ளூர் நிர்வாகத்துடன் இணைந்து சங்கத்தின் அரங்கில் கோவிட் தடுப்பூசி செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். சுமார் 100 பேர் தடுப்பூசி போட்டுக்கொண்டனர் என்றார் Dr பமீலா.

RC சுனம் (RID 3090)

RID 3090க்கு உட்பட்ட சுனம் ரோட்டரி சங்கம், தனது வளாகத்தில் 120 பேருக்கு இலவசமாக தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருந்தது. உள்ளூர் மருத்துவ மனையைச் சேர்ந்த Dr முனிஷ் குப்தா தலைமையிலான ஐவர் குழுவினர் தடுப்பூசி முகாமை வழிநடத்தினர்.

சீமாவில் உள்ள துணைக் கோட்ட வளாகம் மற்றும் ஷெரோன் மற்றும் சுனாமில் ரோட்டரி பொது பள்ளி உள்ளிட்ட 3 பள்ளிகளில் தானியங்கி சானிடைசர் இயந்திரங்கள் நிறுவப்பட்டன.

RC தெலிச்சேரி (RID 3202)

கேரளத்தின் தெற்கு பகுதியில் RID 3202க்கு உட்பட்ட தெலிச்சேரி ரோட்டரி சங்கம் இருட்டி நகராட்சி மற்றும் தாலுகா மருத்துவமனையுடன் இணைந்து இரண்டுநாள் தடுப்பூசி முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தது. சுமார் 2,700 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது என்றார் முன்னாள் தலைவர் ரவீந்திரநாதன். DG ஹரிகிருஷ்ணன் நம்பியார் காசர்கோடில் உள்ள மால்யா மருத்துவமனையில் இலவச தடுப்பூசி முகாமை தொடங்கிவைத்தார். உள்ளூர்

மக்கள் தாங்களாகவே முன்வந்து தடுப்பூசி போட்டுக்கொண்டனர். ஏப்ரல் 30 ஆம் தேதி வரை RID 3201 மற்றும் 3202 சார்பில் ரோட்டரி சங்கங்கள் மூலம், ரோட்டரி மையங்களில் 1,00,000 பேருக்கு இலவசமாக தடுப் பூசிகள் போடப்பட்டுள்ளன. கேரளாவில் "பல்ஸ் ஆக்ஸிமீட்டர்" பற்றாகுறையை நிவர்த்தி செய்ய அம்மாவட்ட மற்றும் RID 3201, 3202 சார்ந்த சங்கங்கள் இந்த கருவியை பல வழிகளில் திரட்டி வருகின்றனர்.

புணே ஈஸ்ட், சிவாஜிநகர், டௌன்டவுன் ரோட்டரி சங்கங்கள் (RID 3131)

புணே மேயர் முரளிதர் மோஹோல் வேண்டுகோளுக்கு இணங்க RID 3131க்கு உட்பட்ட புணே ஈஸ்ட் சிவாஜிநகர் மற்றும் டௌன்டவுன் ஆகிய 3 ரோட்டரி சங்கங்கள் இணைந்து ரோட்டேரியன் பிரபாகர் பட்வாலுடன் சேர்ந்து மாநகராட்சி சுகாதார ஊழியர்கள் மற்றும் கோவிட் முன்களப் பணியாளர்கள் உள்பட 10,000 பேருக்கு 20,000 முகக்கவசங்கள், 500 லிட்டர் சானிடைஸர் மற்றும் 1,000 தனிநபர் பாதுகாப்பு உடைகளை வழங்கினர். புணே வட்டம் RMB (Rotary Means Business) அமைப்புடன் இணைந்து இதை செயல்படுத்தினர். RPIC Dr தீபக் ஷிகர்புர், மாவட்ட சேவை இயக்குநர் ஷீதல் ஷா மற்றும் ரோட்டேரியன்கள் இந்நிகழ்ச்சியின் போது உடன் இருந்தனர்.

RC அம்ரேலி கிர் (RID 3060)

RID 3060க்கு உட்பட்ட அம்ரேலி கிர் ரோட்டரி சங்கம் ரோட்டேரி யன்கள், நன்கொடையாளர்கள் அளித்த நிதியைக் கொண்டு மூன்று நாட்களில் ஆக்சிஜன் வங்கியை தொடங்கியுள்ளது. இந்த வங்கியில் 15 கிலோ திறன் கொண்ட 55 ஆக்சிஜன் சிலிண்டர்கள், தலா 35 கிலோ திறன் கொண்ட 6 பெரிய ஆக்சிஜன் சிலிண்டர்கள் மற்றும் இரண்டு ஆக்சிஜன் செறி வூட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் நபர்களுக்கு ஆக்சிஜன் வங்கியிலிருந்து ஆக்சிஜன் வழங்கப்படுகிறது. இதுவரை 320க்கும் மேலானவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந் துள்ளனர் என்றார் Rtn பிரதிக் சங்க்ராஜ்கா. RID 3060 சார்பில் மாவட்டத்தில் உள்ள 11 ரோட்டரி மையங்கள், 21 தேர்ந்தெடுக் கப்பட்ட மையங்கள் மற்றும் தடுப்பூசி முகாம்கள் மூலம் 62,000 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது.

RC லட்டூர் (RID 3132)

RID 3132க்கு உட்பட்ட, லட்டூரில் உள்ள ஐந்து ரோட்டரி சங்கங்கள் கூட்டாக "மிஷன் ஆக்சிஜன்" திட்டத்தை கடந்த ஆண்டு முதல் பொது முடக்கத்தின் போது தொடங்கின. 15 ஆக்சிஜன் செறிவூட்டி கருவிகளை வாங்கி, அவற்றை சவார்கர் ருக்னா சேவை என்ற தொண்டு நிறுவனம் மூலம் தேவைப் படும் கோவிட் நோயாளிகளுக்கு வழங்கி

RID 3211 DG *தாமஸ் வவானிகுன்னல் கேரளாவில் ஒரு ரோட்டரி கோவிட் தடுப்பு முகாமை பார்வையிடுகிறார்.*

வந்தனர். மாவட்ட ஆட்சியர் G ஷ்ரீகாந்த் மற்றும் மேயர் விக்ரந்த் கோஜர்முகுந்தே இதன் தொடக்க விழாவில் பங்கேற்றனர். ஆக்சிஜன் செறிவூட்டி கருவிக்காக ஒரு நாளைக்கு ரூ.50 டோக்கன் கட்டணமாக வசூலிக்கப் படுகிறது. (சந்தையில் இதற்காக ஒரு நாளைக்கு ரூ.500 வசூலிக்கப்படுகிறது). மேலும் மருத்துவரின் ஆலோசனையின் பேரிலேயே ஆக்சிஜன் செறி வூட்டிகள் நோயாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை 80 நோயாளிகள் இதன் மூலம் பயன்பெற்றுள்ளனர். லட்டூரில் கோவிட் தொற்று நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு மேலும் 5 ஆக்சிஜன் செறிவூட்டிகள் கொள் முதல் செய்ய திட்டமிடப்பட் டுள்ளது. PDG Dr ஹரிபிரசாத் சோமானி "மிஷன் ஆக்சிஜன்" திட்டத்தின் முக்கிய ஆதரவாளர். திட்டத்தின் தலைவர் சுதிர் லடூரே மற்றும் துணைத் தலைவர் ராஜ்தூத் ஆகியோர் திட்டத்தை வழிநடத்துகின்றனர்.

ஹரியானா துனை சபாநாயகர் ரன்பீர் கங்குவா (வலதிலிருந்து 3வது) மற்றும் ஹிசார் மேயர் கௌதம் சர்தானா (இடதிலிருந்து 2வது) ஆக்ஸிஜன் கருவிகளை மருத்துவ மனையிற்கு RC ஹிசார் சார்பாக வழங்குகின்றனர்.

PDG *ஹரிப்ரசாத் சோமானி லட்டூரில் மிஷன் ஆக்ஸிஜன் திட்டத்தை* RID 3132 *சார்பாக துவக்கிவைக்கிறார்.*

RC ஹிஸார் (RID 3090)

ஹிஸார் ரோட்டரி சங்கம் மூலம் மூன்று உயர் ஓட்ட ஆக்சிஜன் தெரபி இயந்திரங்கள் (ரூ.9 லட்சம் மதிப்பு) சேவக் சபா அறக்கட்டளைக்கு வழங்கப் பட்டது. சங்கத்தின் தலைவர் மோஹித் குப்தா, செயலர் ஆனந்த் பன்ஸால், திட்டத் தலைவர் அரவிந்த் பன்ஸால் ஆகியோர் கூட்டாக இத்திட்டதை ஒருங்கிணைத்து வெற்றிகரமாக செயல்படுத்தினர். கோவிட் நோயாளிகளில் இரண்டாம் அல்லது மூன்றாவது நிலையில் உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்க இது தேவைப்படும். ஆக்சிஜன் ஆதரவு அளிப்பதன் மூலம் செயற்கைச் சுவாசக் கருவியின் பணியைச் செய்து உயிர்களை காப்பாற்றுகிறது என்றார் ரோட்டரி மாவட்டம், 3090ஐ சேர்ந்த ரோட்டேரியன் நவீன் ஆர்.கர்க்.■

மெகா திட்டங்களுக்கு புகைப்பட போட்டி மூலம் நிதி திரட்டிய RID 3190

கிரண் ஜெஹ்ரா

RID 3190ன் சுற்றுச்சூழல் நிலைத் தன்மைக்கான ரோட்டேரியன்கள் அதிரடிக் குழு (Environment Sustainability Rotarians Action Group - ESRAG) மற்றும் ரோட்டேரியன் புகைப்படக் கலைஞர்களின் சர்வ தேச பெல்லோஷிப் அமைப்பும் (IFRP) இணைந்து மூன்று பெரிய திட்டங்களுக்கு நிதி திரட்டவும், பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு மற்றும் மாறுபட்ட கலாசார பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒரு புகைப்பட போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தன. மேலும் இந்த போட்டி, இணையதளம் மூலம் ரோட்டரி அதிரடி செயல்குழு, (Rotary Action Group) ரோட்டேரியன் மற்றும் ரோட்ராக்டர்களிடம் மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியது. உலகெங்கிலும் உள்ள உறுப்பினர்கள் மூலம் நிதி திரட்டவும் உறுப்பினர்க எண்ணிக்கையை அதிகரிக்கவும் அனுமதிப்பதால் RAG, இன்டர்நேஷனல் பெல்லோஷிப் மற்றும் உள்ளூர் சங்கங்களுக்கு புதுவாழ்வு கிடைத்தது. திட்டங்களை மெய்நிகர் மூலம் பரிமாறிக் கொள்ளவும் உதவியது என்கிறார் லலிதா கிருஷ்ணன். இவர்தான் புகைப்பட்ட கலைஞர்களுக்கான போட்டியின் ஒருங்கிணைப்பாளர்.

மூன்று திட்டங்கள்-ராஜகுண்டே கிராமத்தில் மாதவிடாய் சுகாதாரத் திட்டம், கொய்ரா ஏரி புனரமைப்பு மற்றும் அரசு பள்ளிகளில் மழை நீர் சேகரிப்பு (RWH) ஆகிய மூன்று திட்டங்கள் சுற்றுச்சூழல் மற்றும் மக்களிடம் அவை ஏற்படுத்தும் தாக்கங்களை கருத்தில் கொண்டு நிதியுதவிக்காக தேர்ந்தெடுக்கப் பட்டன. RAGன் மாவட்டத் தலைவர் ரகு அல்லம் பச்சைகொடி காட்டியதை அடுத்து மெய்நிகர் மூலம் ரோட்டரியின் புகைப்படப் போட்டி அறிவிக்கப்பட்டது. மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான திட்டங்கள் குறித்தும் காட்சிப்படுத்தப்பட்டது. அமெச்சூர் மற்றும் தொழில்முறை புகைப்படக் கலைஞர்கள் பல்லுயிர் பெருக்கம் குறித்த சிறந்த படங்களை உலகத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டோம் என்றார் லதா கிருஷ்ணன். IFRP நிபுணர்கள் நாடு முழுவதிலும் வந்திருந்த 500 புகைப்படங்களை பரிசீலனை செய்தனர். இந்நிகழ்ச்சிக்கு DG

பெங்களூர் ராஜ் மகால் விலாஸ் புதுப்பித்த கொய்ரா குளம்.

B L நாகேந்திர பிரசாத் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். 28 ரோட்டரி சங்கங்கள் மற்றும் 4 ரோட்ராக்ட் சங்கங்கள் இதில் பங்கேற்றன. இந்த நிகழ்ச்சி ரூ.5.27 லட்சம் நிதி திரட்ட உதவியது. அவை அந்த மூன்று திட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இநதப் போட்டிக்கு ரோட்டரி வனவிலங்குகள் பாதுகாப்பு பெல்லோஷிப் அமைப்பு ஆதரவு அளித்தது.

ரூபந்திரா திட்டம்

பெங்களூருவுக்கு அருகில் உள்ள சிறு நகரமான ராஜகுண்டேவில் தற்போதுள்ள அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகளை கருத்தில் கொண்டு மூன்றாண்டுகளுக்கு முன்னர் MHM முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன என்றார் MHM திட்டத்தின் மாவட்ட தலைவர் நிஷா பல்லெரி. சுய-உதவிக்குழுக்கள், ஆஷா பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் மூலம் பள்ளியிலும், சமூகத்திலும் மாணவிகளிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தினோம். பயிற்சியின் ஒரு பகுதியாக "ரூபந்திரா சகிஸ்" என அழைக்கப்படும் 12 செயல்திட்ட அமலாக்க பங்காளி களுக்கு துணிப்பேடுகள், மாதவிடாய் கோப்பைகள் அடங்கிய இலவச "கிட்" வழங்கப்பட்டது. கிராம மக்களுக்கு அதன் பயன்பாட்டை எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்து வதற்கு முன் அவர்களிடம் முயற்சித்து பார்க்குமாறு வலியுறுத்தப்பட்டது. MHM கிட்களை பெங்களூரில் உள்ள நாரியாரி என்னும் சமூக நிறுவனம் வழங்கியிருந்தது.

ஒரு முறை பயன்படுத்தப்படும் சானிடரி நாப்கின்களால் ஏற்படும் நச்சுக் கழிவுகளை குறைக்க மீண்டும் பயன்படுத்தக்கூடிய மாதவிடாய் தயாரிப்புகளுக்கு மாறுமாறு ரூபந்திரா சகிஸ், வீடு வீடாகச் சென்று பெண்களிடம் வலியுறுத்தினர்.

ஐந்து சங்கங்கள் ஒன்றிணைந்து கிராமலெட்சுமி என்ற சுயஉதவிக் குழுவை 2019ல் ஏற்படுத்தியது. இந்த சுய உதவிக்குழு இப்போது அரசு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் ரூபந்திரா திட்டத்துக்காக "அறம்" துணிப் பேடுகளை தயாரித்து விநியோகித்து வருகிறது. பெங்களூர் அருகில் உள்ள ஸ்ரீராமனஹள்ளி என்ற இடத்தைச் சேர்ந்த நான்கு பெண்கள் வெற்றிகரமாக இந்த சுயஉதவிக்குழுவை நடத்தி வருகிறார்கள். இப்பகுதியைச் சேர்ந்த 7 கிராமங்களில் உள்ள 350 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அதை ஒரு இயக்கமாக முன்னெடுத்துச் செல்கின்றனர்.

ஏரி புனரமைப்பு

பெங்களூரு ஊரகப் பகுதியான தேவனஹள்ளி தாலுகாவில் உள்ள கொய்ரா கிராமத்தில் ஏரிகள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகள் வறண்டு போனதால் விவசாயம் செய்ய முடியாததால் வேலையிழப்பு ஏற்பட்டது. இதனால், நாங்கள் கிராமத்தை விட்டு வெளியேறி கல்லுடைக்கும் தொழிலுக்குச் செல்ல நேரிட்டது என்றார் உள்ளூர் வாசியான சிக்கேகௌட (54).

அவர் உடனடியாக பெங்களூரு ராஜ்மஹால் விலாஸ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் சஞ்சய் கிருஷ்ணாவைத் தொடர்புகொண்டு உதவி வேண்டினார். இதையடுத்து கொய்ராவில் உள்ள ஏரியை புனரமைக்க கிருஷ்ணா முடிவு செய்தார். முதலில் கால்வாயை சுத்தப்படுத்தும் பணியில் 57,000 கன மீட்டர் வண்டல் வெளியேற்றப்

கொய்ரா கிராமத்தில் நெற்பயிரிடப்படுகிறது.

பட்டது. கிராம மக்கள் ஏற்கெனவே 15,000 கன மீட்டருக்கு தூர்வாறி இருந்தனர். ஏரியை புனரமைக்கும் திட்டத்தை இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்தோம் என்றார் கிருஷ்ணா.

இந்த திட்டத்தை நிறைவேற்ற ரூ.80 லட்சம் தேவைப்பட்டது. புகைப்பட போட்டி மூலம் ரூ.1.8 லட்சம் கிடைத்தது. கூடுதல் நிதி தேவைப்பட்டபோது கிராம மக்களும் தங்கள் பங்களிப்பைச் செய்தனர். மேலும் தங்கள் உடலுழைப்பையும் கொடுத்தனர். வேறு சில வழிகளிலும் புனரமைப்பு பணிக்கு நிதி வந்து சேர்ந்தது. மேலும் 8 குடும்பத்தினர் ஏரி அருகே ஆக்கிரமித்து வைத்திருந்த 10 ஏக்கர் நிலத்தை தங்கள் வாழ்வாதாரத்தை முன்னிட்டு விட்டுக்கொடுக்க முன்வந்தனர். இன்று கொய்ரா ஏரியில் தண்ணீர் நிரம்பியுள்ளது. பக்கத்து கிராமங்களில் உள்ள கிணறுகளிலும் தண்ணீர் ஊறியிருந்தது. இப்போது விவசாயிகள் தங்கள் நிலத்தில் விவசாயம் செய்யத் தொடங்கி யுள்ளனர். ஏரி வறண்டு போனதால் கிராமத்தை விட்டு வெளியே மக்கள் மீண்டும் திரும்ப வரவேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும் என்றார் புன்னகையுடன் சிக்கேகௌட.

துணி நாப்கின்களை பிரபலப்படுத்தும் ரூபந்தாரா சகிகள்.

மழைநீர் சேகரிப்புத் திட்டம்

கர்நாடக மாநிலத்தில் 100 அரசுப் பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு அலகுகளை அமைப்பதை நோக்கமாகக் கொண்ட மழை நீர் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் (RWH) சமீபத்தில் பெங்களூரு அருகில் உள்ள ஹூடி அரசுப் பள்ளியில் இரண்டு அலகுகள் நிர்மாணிக்கப்பட்டு செயலுக்கு வந்தது. இத்திட்டத்துக்கான செலவான ரூ.1.25 லட்சத்தை, கட்டுமானம் மற்றும் சுரங்கத் தொழில்களுக்கான கருவிகளைத் தயாரிக்கும் கார்டர்பில்லர் நிறுவனத்தின் ஊழியர்கள் ஏற்றுக் கொண்டனர். RC பெங்களூர் லேக் வேர்ல்டு இவற்றை மேற் பார்வையிட்டு வருகிறது. மாணவர் குழுவினரை ஒன்று திரட்டி ரோட்ராக்ட் சங்கமாக உருவாக்க திட்டமிட்டுள்ளதாக திட்டத்தின் பொறுப்பாளர் ஜான் டேனியல் தெரிவித்தார். புகைப்பட போட்டி மூலம் கிடைத்த நிதி வேறு பள்ளிகளில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் செயல் படுத்தும் போது பயன்படுத்திக் கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.■

Rotary PEOPLE OF ACTION

பண்டிப்பூரில் தடுப்பணை கட்டிய ரோட்டரி

ஜெய்ஸ்ரீ

மைசூர் சவுத் ஈஸ்ட் ரோட்டரி சங்கம், RID 3181, மைசூருக்கு அருகிலுள்ள பண்டிப்பூர் புலிகள் காப்பகத்திலிருந்து 10கிமீ உள்ளே, அடர்ந்த காட்டுக்கு நடுவில் ஒரு 48-அடி-நீளத் தடுப்பணையைக் கட்டியுள்ளது.

800 சதுர கிலோமீட்டர் பரந்துள்ள இந்தப் பகுதியில் வன விலங்குகள் அடர்த்தியாகப் பரவியுள்ளன. மழைக்காலத்துக்குப்பிறகு இந்த அணை நிரம்பும், விலங்குகள், பறவைகளுடைய தாகம் தீரவும், வெப்பமான கோடை வெய்யிலின் அழுத்தத்தைக் குறைக்கவும் இது உதவும் என்றார் உதவி ஆளுநர் ஹரீஷ் H M. குறிப்பாக, ஃபிப்ரவரி, மார்ச் மாதங்களில் இங்கு பெரும்பாலான நீர்நிலைகள் வறண்டுவிடுகின்றன என்றும், அதனால், உணவு, நீரைத் தேடும் விலங்குகள் மிகவும் சிரமப்படுகின்றன என்றும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு, இந்த மாவட்டம் நீர்நிலை மேம்பாட்டைத் தன்னுடைய கவனப் பகுதிகளில் ஒன்றாகத் தேர்ந்தெடுத்துள்ளது. இயன்ற இடங்களிலெல்லாம் தடுப்பணைகளைக் கட்டும்படி ரோட்டரி சங்கங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

M ராஜீவ் தலைமையில், M மோகனைச் செயலாளராகக் கொண்டு இயங்கும் இந்தச் சங்கம் ரூ.6.5 லட்சம் செலவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த உடனே ஒப்புக்கொண்டது. வனத்துறையிடம் முறையான அனுமதி பெற்றுத் திட்டத்தைத் தொடங்கியது. இந்தப் பகுதி காட்டுக்குள் அமைந்திருப்பதால், பொருட்களைக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவு இருமடங்காகிவிட்டது. அதே நேரம், நாங்கள் உள்ளூர்த் தொழிலாளர்களைப் பயன்படுத்தினோம் என்கிறார் ராஜீவ்.

DG *ரங்கநாத் பட் தடுப்பு அணையை கன்னட நடிகர் தர்ஷன் தூகுதீபா, DG H Mஹரீஷ், சங்கத் தலைவர் M ராஜீவ் மற்றும் செயலாளர் M மோகன் முன்னிலையில் திறந்து வைக்கிறார்.*

மாவட்டச் செயலாளர் விக்ரம்தத்தா, வனப் பாது காப்பாளர் S R நடேஷா, கன்னடத் திரைப்பட நடிகர் தர்ஷன் தூகுதீபா முன்னிலையில் DG ரங்கநாத் பட் இந்தத் தடுப்பணையைத் திறந்து வைத்தார். இந்த மாவட்டத்தின் மிகச் சிறந்த திட்டங்களில் ஒன்றை நிறைவேற்றியதற்காக அவர் சங்க உறுப்பினர்களைப் பாராட்டினார்.

பொதுவாக, பண்டிப்பூரில் மழைக்காலம் ஜூலை மாதத்தில் தொடங்குகிறது, டிசம்பர்வரை இங்கு நல்ல மழை பொழிகிறது. ஆறு அடி ஆழமுள்ள தடுப்பணையால் கோடைக்கால மாதங்கள்வரை தேவைப்படும் அளவு நீரைத் திரட்ட இயலும் என்றார் ஹரீஷ். இந்தப் பகுதியில் வாழும் உள்ளூர்ப் பழங்குடிச் சமூகத்துக்கும் இந்த வசதி பயன்படும். இதை வனத்துறை பராமரிக்கும்.

இந்த ஆண்டின் முற்பகுதியில் இந்தச் சங்கம் தன்னுடைய இன்னர் வீல் சங்கத்துடன் இணைந்து, மைசூரிலிருந்து 18கிமீ தொலைவில் உள்ள ஹடினாரு கிராமத்திலிருக்கும் குளத்தைப் புதுப்பித்தது. முன்பெல்லாம் இந்தப் பகுதிக்குப் பல பறவைகள் புலம்பெயர்ந்து வந்துகொண்டிருந்தன. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, இந்த நீர் நிலையின் மோசமான பராமரிப்பு காரணமாக இந்த எண்ணிக்கை குறைந்துவிட்டது. நாங்கள் ரூ.4 லட்சம் செலவு செய்து, அங்கிருந்து ஆறு டன் வீணான பொருட்களை நீக்கினோம் என்கிறார் ராஜீவ். இதன் தேவைகள், தூய்மை, சுகாதாரத்தைக் கவனித்துக் கொள்வதற்காக இக்கிராமத்தில் ஓர் RCC உருவாக்கப் பட்டது.

அனைத்திந்தியப் பேச்சு மற்றும் கேட்டல் கல்வி நிறுவனத்துடன் இணைந்து, காது கேட்க உதவும் பொருட்களை வழங்கும் முகாம் ஒன்று நடத்தப்பட்டது. கிராம வாசிகள் 100 பேருக்குக் காது கேட்க உதவும் கருவிகள் வழங்கப்பட்டன.■

சமீபத்தில் மறைந்த ரோட்டரி தலைவர்களுக்கு அஞ்சலி

M V ரவிக்குமார்

PDG UB பட்

ஒரு மாதத்துக்குள் RID 3190 மூன்று மிகச் சிறந்த ரோட்டரி யன்களை இழந்துள்ளது: முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் S உதய்குமார் (1989–90), டாக்டர் பிரித்வி ராவல் (2000–01) மற்றும் U B பட் (2008–09). இந்த மூன்று தலைவர்களுடனும் இணைந்து பணிபுரிந்த அதிர்ஷ்டமும் அரிய வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

பட் (UB) அவர்களை முதன் முதலாகச் சந்தித்தது, ஜூன் 1996ல் எங்களுடைய சங்கம் அவர் பதிவுத் தலைவராக இருந்த அவருடைய சங்கத்தைப் (ரோட்டரி பெங்களூர் சவுத் பேரேட்) பதிவு செய்த போது தான். REC சூரத்கல் பொறியியல் பட்டம், IIM-அகமதாபாதில் முதுநிலைப் பட்டம், யுனைட்டெட் ப்ரூவரீஸில் ஒரு மிகச் சிறந்த சந்தைப்படுத்தல் பணி வாழ்க்கை என்று அவர் பல கல்வி, தொழில் சார்ந்த சாதனைகளைச் செய்திருந்தாலும், UB மிக எளிமையான மனிதர், அனைவருடனும் நன்கு பழகும் நண்பர்.

PDG பிரித்வீ ராவல்

டிசம்பர் 24, 1999ல் காத்மண்டு விலிருந்து புது தில்லிக்கு வந்த IC814 விமானம் கந்தஹாருக்குக் கடத்தப்பட்டது. அந்த விமானத்தில் UBம் பயணம் செய்தார். கணங்களை Terror on Board (விமானத்தில் ஏறிய தீவிரவாதம்) என்ற தன்னுடைய புத்தகத்தில் பதிவுசெய்தார்.

2002–03ல் அவர் கருத் தரங்கத் தலைவராக இருந்தார், நூற்றாண்டு ரோட்டரி ஆண்டில் நான் மாவட்ட உறுப்பினர் சேர்க்கைத் தலைவராக இருந்தேன், அப்போது, அவருடைய சங்கம் சங்கச் சேவையில் ICGFஐ நடத்தியது, அதற்கு அவர் தலைவராக இருந்தார், இந்தச் சூழ்நிலைகளில் நான் அவருடன் நெருங்கிப் பணியாற்றினேன். ICGF பங்கேற்பை மிகுதியாக்குவதற்காக அவர் ஒரு சிறப்பு லேபெல் பின் ஊசியை வடிவமைத்தார், ரோட்டரியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்த அனைத்து ரோட்டரியன்களையும் பெருமைப் படுத்தினார்.

2008–09க்கான DGஆக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, என்னை அழைத்து, உங்கள் பேரார்வம் தவிர்க்கக்கூடிய கண் பார்வையிழப்பு (AB) என்பது எனக்குத் தெரியும். ஆனால், நீங்கள் துணை மாவட்டப் பயிற்சியாளராகவும் இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று சொன்னார். அந்த ஆண்டு, எங்கள் மாவட்டம் கண் புரை (பின்பதிவு இல்லாத) RID 3190 திட்டத்தைத் தொடங்கியது. கண் புரை காரணமாகக் கண் பார்வையிழப்பு ஏற்படுவதைக் குறைப்பதில் நாம் அங்கிருந்து நெடுந்தொலைவு வந்துள்ளோம்.

ஜூலை 1999ல் நான் Dr ராவலை முதன்முறையாகச் சந்தித்தது நினைவுக்கு வருகிறது. அப்போது அவர் 2000–1க்கான DGஆகப் பொறுப் பேற்றுக்கொண்டிருந்தார்.

2002–03ல் அவர் தெற்கு ஆசியாவுக்கான பகுதி AB ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட போது, உள்வரும் DG பன்சாலியிடம் என்னை மாவட்ட AB குழுத்தலைவராக நியமிக்கும்படி கேட்டுக்கொண்டார். இதன்மூலம் ABஉடனான என் நீண்ட பயணம் தொடங்கியது, எனக்குத் Service Above Self விருதைப் பெற்றுத்தந்தது.

2003ல், மோட்டார் சைக்கிள் ஓட்டும் ரோட்டரியன்களுக்கான பன்னாட்டுத் தோழமையின் இந்தியப் பிரிவை ராவல் தொடங்கினார், அதை TRFக்கான இரண்டாம் நிலை மிகப் பெரிய நன்கொடையாளராக ஆக்கினார்.

நான் 1988ல் ரோட்டரியில் சேர்ந்த போது, உதய் DGEஆக இருந்தார். அவர் பல MG திட்டங்களை உருவாக்கினார், கிணறுகளை மீட்டு, சேமிப்புத் தொட்டிகளைக் கட்டி 40

வினோத் பன்சால்: அர்ப்பணிப்புள்ள ரோட்டரியன்

ஐஷானி பன்சால்

வினோத் பன்சால், தன்னுடைய துறையாகிய உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதித் துறையில் அர்ப்பணிப்புள்ள, மிகுந்த தகுதி கொண்ட ஒரு தொழில் வல்லுனர், புகழ் பெற்ற ஒரு பெருநிறுவன ஆலோசகர். அர்ப்பணிப்புள்ள ஒரு ரோட்டரியன் என்றமுறையில், அவர் ஒவ்வொரு கவனப் பகுதியிலும் மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

2001ல் ரோட்டரியில் ஒரு மிகச் சிறந்த தொடக்கத்தைப் பெற்ற அவர், 2013–14ல் RID 3010ன் மாவட்ட ஆளுநராக ஆனார். அவருடைய பொறுப்புக் காலத்தில் மாவட்ட, தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் ரோட்டரிக்குத் தொடர்ந்த வெற்றிகளும் புதிய மைல் கற்களும் கிடைத்தன.

2019–22ல் ரோட்டரி அறக்கட்டளையின் மதிப்பு மிக்க "முதலீட்டுக் குழு" உறுப்பினராக பன்சால் செயலாற்றினார். DG ஆக, இரண்டு ஆண்டுகளுக்கு ARRFC ஆக, இப்போது EMGA ஆக அவர் TRFக்கு அதிகபட்ச நிதிகளைத் திரட்டினார். 2013–14ல் அவர் 1.7 மில்லியன் திரட்டிச் சாதனை படைத்தார், உலக அளவில் ஆண்டு நிதிக்குச் செலுத்தப்பட்ட மிகக் கூடுதலான பங்களிப்பு அதுதான்.

2016–2020ல் ரோட்டரி ரத்த வங்கியின் தலைவராகப் பொறுப்பேற்ற பன்சால், சமூகத்தின் இப்போதைய தேவைகளை நிறைவேற்றுகிற அந்த அமைப்பின் சாத்தியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டார். துணிவான தெரிவுகளாலும் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், செயல்பாடுகளை விரிவாக்குதல் ஆகியவற்றில் எதிர்காலம் சார்ந்த முதலீடு களைச் செய்தலாலும் அதை மாற்றியமைத்தார்.

ரோட்டரியின் எதிர்காலத்துக்கு அவருடைய அர்ப்பணிப்புணர்வு ஊக்கம் தருவதாக அமைந்தது. அவருடைய இரக்கமும் உன்னதமும் கவனமும் ரோட்டரிக்கான நீடித்த தொலைநோக்கு அடித்தளத்தை அமைப்பதற்கு அவரைத் தூண்டின, இதில் இந்தியாவின் பங்களிப்பில் அவர் தெளிவான கவனம் செலுத்தினார். இதனால், 2021–22க்கான ரோட்டரியின் வருங்காலத்தை வடிவமைக்கும் குழுவின் உறுப்பினராகச் சேவையாற்றும்படி அவர் அழைக்கப்பட்டதில் வியப்பில்லை.

அவருடன் பணியாற்றிய ஒவ்வொருவரும் அவரை ஒரு மனிதத்தன்மை மிக்கவராக, மன உறுதி, ஊக்கத்துடன் ஒவ்வொரு சவாலையும் எதிர்கொண்டு வென்றவராக, துன்பத்திலும் வாய்ப்புகளை அடையாளம் கண்டவராக நினைவு வைத்திருக்கிறார்கள். அவருடைய கூர்மையான அறிவும் தனித்துவமான ஈர்ப்பும் பல தொடக்க நிலை ரோட்டரி திட்டங்களையும் நீடித்த உடனுழைப்புகளையும் வடிவமைக்க உதவியது.

அவருடைய மனைவி சங்கீதா பன்சால் (இவரும் ஒரு ரோட்டரியன்), மகள்கள் தாமினி மற்றும் ஐஷானி, மருமகன் நீல் மற்றும் உலகெங்கும், ரோட்டரியிலும் உள்ள அவருடைய சிறந்த நண்பர்களும் சக ஊழியர்களும் அவரைப் பிரிந்து வருந்துகிறார்கள், அவருடைய மரபை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்கிறார்கள்.

(கட்டுரையாளர் மறைந்த PDG வினோத் பன்சாலின் மகள்.)

PDG S *உதய்குமார்*

கிராமங்களில் நீர் கிடைத்தலை உறுதிப்படுத்தினார்.

உதய்குமார் சங்கக் கூட்டங்களில் தொடர்ந்து பேசு வார்; அநேகமாக அந்தத் தலைப்பு அவருடைய பேரார்வமான மாதிரிச் சங்க மாக இருக்கும். பயிற்சி மற்றும் உடனுழைப்பின் வழியாக ரோட்டரியன்களை மிகச் சிறந்த தலைவர்களாக ஆவதற்கான கல்வியை வழங்கும் ரோட்டரி தலைமைப்பண்புக் கல்விக் கழகத்தின் உறுதியான ஆதரவாளர்களில் அவரும் ஒருவர். அவர் அனைவரையும் பெரிதாகச் சிந்திக்கும்படி ஊக்குவித்தார். ரோட்டரி பெங்களூர் இந்திராநகரின் முன்னாள் தலைவர் டாக்டர் ஸ்ரீநாகேஷ் சிம்ஹா இதுபற்றிப் பேசுகையில், தானும் Dr கிஷோர் ராவும், குர்மீத் ரந்தவா-வும் இதனால் ஈர்க்கப்பட்டு 1994ல் தங்கள் சங்கத்தின் அடையாளத் திட்டமான கருணாஷ்ரேயா-வை (ஒரு மருத்துவத் தங்குமிடம்) சிந்தித்தது பற்றிக் கூறுகிறார்.

மூன்று முன்னாள் ஆளுநர்களும் Service Above Self விருதைப் பெற்றவர்கள். அவர்களுடைய ஆன்மா சாந்தி அடையட்டும்!

(கட்டுரையாளர் RID 3190ன் மாவட்டத் தவிர்க்கக்கூடிய கண் பார்வையிழப்புக் குழுத் தலைவர்.)

Membership Summary

(As on May 1, 2021)



Rotary at a glance

Rotary clubs	: 36,782	Rotary members	: 1,198,766
Rotaract clubs	: 10,063	Rotaract members	: 217,186
Interact clubs	: 15,035	Interact members	: 368,805
RCCs	: 11,587	*As on 18 May 2021*	



Source: RI South Asia Office

மேம்பட்ட ஒளி பரவட்டும்

ப்ரீதி மேஹ்ரா

நவீன நகரத்து வசிப்பிடம் எதுவும் மின்சாரம் இல்லாமல் செயல்பட இயலாது. உள் வெப்பநிலையைப் பராமரிக்க, சமைக்க, துவைக்க, இன்னும் பலவற்றைச் செய்ய நமக்கு உதவும் பல கருவிகளை இயக்குவதற்குக் கை கொடுக்கும் ஆற்றல் மூலம் அதுதான்.

அதேபோல், மின்சாரம் நம் வீடுகளை ஒளிமயமாக்குகிறது; நமக்குப் பொழுதுபோக்கையும் அறிவையும் அளிக்கும் கருவிகளை இயக்குகிறது.

இந்தக் கட்டுரையில், நாம் ஒளியின்மீது கவனம் செலுத்துவோம். ஆம், மாலை வந்ததும், அல்லது, வீட்டுக்குள் ஏதாவது வேலை செய்யவேண்டியிருக்கும்போது இயற்கை ஒளி போதாவிட்டால் கூடுதல் ஒளிக்காக நாம் எரியவிடுகிற அந்த மந்திர ஒளிதான்.

மகிழ்ச்சியான விஷயம், ஆற்றல் செயல்திறன் மிக்க மற்றும் சுற்றுச்சூழலுக்கு இதமான ஒளிக்கு மாறுவது எளிது. அதற்கு நீங்கள் ஒரே ஒரு மாலை நேரத்தில் கடைக்குச் சென்றுவந்தால் போதும், நீங்கள் இப்போது பயன்படுத்தும் விளக்குகளை மாற்றி விடலாம். இந்த எளிய செயல் பாட்டின்மூலம் உங்கள் மின் கட்டணத்தை 6%க்குமேல் சேமிக்கலாம்.

உங்களுக்காக, சந்தையில் கிடைக்கும் பல ஒளித் தெரிவுகளை இங்கு ஆராய்ந்துள்ளோம். அத்துடன், ஒவ்வொரு தெரிவுக்கும் ஒரு சிறு விமர்சனத்தையும் பசுமைப் பாதையில் நடப்பதற்கு உதவும் குறிப்புகளையும் அளித்துள்ளோம்.

பெரும்பாலான வீடுகளில் உள்ள ஒளி விளக்கு Incandescent Bulb என்று அழைக்கப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜோசஃப் ஸ்வானும் தாமஸ் எடிசனும் இதைக் கண்டறிந்தார்கள். அதன்பிறகு, அதில் பல முன்னேற்றங்கள் வந்துள்ளன.

இந்த விளக்கு ஓர் எளிய கொள்கையின் அடிப்படையில் இயங்குகிறது: ஒரு கண்ணாடிக் குமிழுக்குள் உள்ள டங்க்ஸ்டன் இழையின் வழியாக மின்சாரம் செல்லும்போது, அது ஒளிர்கிறது, வெப்பத்தையும், ஒரு மஞ்சள் ஒளிவீச்சையும் உண்டாக்குகிறது. இந்தக் கொள்கையின்படி இயங்கும் Incandescent பல்ப் பல அளவுகள், வோல்ட்டேஜ்களில் கிடைக்கிறது.

அதே நேரம், சமீபத்திய ஆண்டுகளில் இந்தப் பல்ப் மெதுவாக முக்கியத்துவத்தை இழந்துவருகிறது. அதற்குப் பதிலாக, செயல்திறன் மிக்க ஒளி உமிழும் டையோட்கள் (LEDகள்), கச்சிதமான ஃப்ளோரசென்ட் விளக்குகள் (CFLகள்) மற்றும் ஃப்ளோரசன்ட் குழாய்கள் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

வணிக மற்றும் பிற சிறப்பு நோக்கங்கள், இடங்களுக்கு ஹேலோஜன் விளக்குகள், உலோக ஹாலைட் விளக்குகள், நியான் விளக்குகள், உயர் தீவிர வெளிவிடல் விளக்குகள் மற்றும் குறைந்த அழுத்தச் சோடியம் விளக்குகள் கிடைக்கின்றன.

இப்போது, LED தான் மிகவும் புகழ் பெற்றுள்ளது. இது நீண்ட நாள் உழைக்கிறது, சுற்றுச்சூழலுக்கு

மிகவும் இதமானது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படையில் இந்த விளக்கு ஒரு குமிழுக்குள் பூட்டப்பட்டுள்ள ஓர் அரைக்கடத்திக் கருவியில் எலக்ட்ரான்களுடைய நகர்வின் வழியாக ஒளியை உமிழ்கிறது. இதில் இழை இல்லை, ஆற்றலைக் குறைவாகப் பயன்படுத்துகிறது.

LEDகள் Incandescent விளக்குகளை விடக் கூடுதலான ஒளியை அளிக்கின்றன, ஆற்றலைச் சேமிக்க உதவுகின்றன. விலை Incandescent விளக்கைவிட மிகக் கூடுதலாக இருக்கலாம். ஆனால், தொலைநோக்கில் பார்க்கும்போது, செலவு சேமிக்கப்படுவதால், இது Incandescent விளக்கைவிட மலிவானது தான். LEDகள் Incandescent விளக்குகளை விட 8–25 மடங்கு கூடுதலாக உழைக்கின்றன, 25 முதல் 30% குறைவான ஆற்றலைப் பயன்படுத்துகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

எல்லா Incandescent விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றி விடலாமா என்றால், பலரும் அதை ஏற்றுக்கொள்ளாமல் தயங்குகிறார்கள். காரணம், தொடக்கத்தில் அதன் செலவுகள் கூடுதலாக உள்ளன. குறிப்பாக, ஓரளவு பெரிய வீடு அல்லது அடுக்கக்கத்துக்கு இந்தச் செலவு மிகக் கூடுதலாகிவிடும். இதனால், பல நுகர்வோர் ஒரு நேரத்தில் ஒரு விளக்கை மாற்றத்தான் விரும்புகிறார்கள். இதுவும் நல்ல யோசனை தான், ஏனெனில், இதன்மூலம் செலவுகள் மொத்தமாகத் தொந்தரவு தராது, கொஞ்சம் கொஞ்சமாகச் செலவு செய்து பலன் பெறலாம். அதே நேரத்தில், ஆற்றல் சேமிப்பும் கொஞ்சம் கொஞ்சமாகக் கிடைக்கத் தொடங்கும், விரைவில், இது ஒரு கணிசமான சேமிப்பாக மாறும்.

பல நேரங்களில், Incandescent விளக்குகளுக்குப் பதில், கச்சிதமான ஃப்ளோரசென்ட் விளக்குகள் (CFLகள்) பொருத்தப்படுகின்றன. சில குழாய் வளையங்கள் உள்ளன, இவை Incandescent குமிழ்களைப்போலவே தோன்றுகின்றன. அதே அளவு ஒளியைத் கொடுத்து, குறைவான ஆற்றலைப் பயன்படுத்துகின்றன, குறைந்தது 10 மடங்கு கூடுதல் காலம் உழைக்கின்றன.

அதே நேரம், CFLகளில் ஒரு பிரச்சனையும் உண்டு. இவற்றில் சிறிய அளவு பாதரச நச்சுப்பொருள் காணப்படுகிறது. ஆகவே, இவற்றைப் பயன்படுத்தியபின், கவனமாக அப்புறப்படுத்தவேண்டும்.

நீங்கள் CFL விளக்குகளைப் பயன்படுத்த விரும்புகிறீர்கள் என்றால், பழைய விளக்குகளை மற்ற மின் குப்பைகளுடன் சரியான முறையில் அகற்றவேண்டும்; மறுசுழற்சிக்கான சரியான இடத்துக்கு அவற்றை அனுப்பவேண்டும். CFLகள் பார்க்க அழகாக இருக்கலாம், ஆனால், அது சுற்றுச்சூழலுக்கு இதமான மிகச் சிறந்த தெரிவு இல்லை.

வீட்டில் சமையலறை, பால்கனி அல்லது குளியலறை போன்ற, நிறைய ஒளி தேவைப்படுகிற இடங்களில் ஃப்ளோரசென்ட் குழாயைப் பயன் படுத்துவது நன்கு புகழ் பெற்றுள்ளது. வாயுவை வெளியிடும் இந்தக் குழாய், ஃப்ளோரசென்ஸைப் பயன்படுத்தி வெள்ளையான, கண்ணுக்குத் தெரிகிற ஒளியை உருவாக்குகிறது. இது நீண்ட நாள் உழைக்கிறது, மிகுந்த ஒளிர்வுச் செயல்திறனையும் கொண்டுள்ளது. இது Incandescent விளக்கைவிடக் குறைவான மின்சாரத்தைப் பயன் படுத்துகிறது, ஆனால், இதன் விலை கூடுதலாகும்.

அதே நேரம், CFLகளைப் போலவே இவற்றையும் கவனமாக அகற்றவேண்டும். காரணம், இதில் உள்ள வாயுப்பொருள்தான். மின் குப்பைகளைக் கையாளும் ஒருவரிடம் இதைக் கொடுத்து மறுசுழற்சி செய்யவேண்டும்.

பசுமை வழிக்குச் செல்ல விரும்பு கிறவர்களுக்கான மிகச் சிறந்த தெரிவு, LED விளக்குகளுக்கு மாறுவதுதான் என்பதில் எந்த ஐயமும் இல்லை. மற்றவற்றைவிட இவற்றில் இரண்டு நன்மைகள் உள்ளன: இவற்றில் பாதரசம் இல்லை; இவை வெளிவிடும் வெப்பமும் குறைவு.

ஒரு விளக்கிலிருந்து நாம் எதிர் பார்ப்பது ஒளியைத்தான், வெப்பத்தை இல்லை. ஆகவே, விளக்கிலிருந்து வெளிவரும் வெப்பம் ஆற்றல் வீணாவதைத்தான் சுட்டிக் காட்டுகிறது என்று வல்லுனர்கள் எப்போதும் விளக்குவார்கள். அத்துடன், விளக்குகள் வெப்பத்தை உருவாக்குவதால், கோடை மாதங் களில் ஒரு வீட்டைக் குளிர்ச்சியாக வைத்திருப்பதற்குக் கூடுதல் காற்றுப் பதமாக்கல் தேவைப்படும்.

பொதுமக்கள் LED விளக்குகளுக்கு மாறவேண்டும் என்று அரசாங்கங்கள் அவர்களை ஊக்குவிக்கின்றன. பல மாநிலங்கள் இந்த விளக்குகளுக்கு மானியம் வழங்குகின்றன. இதனால், LED விளக்குகளின் விலைகள் மெதுவாகவும் நிலையாகவும் குறைந்து வருகின்றன, அவற்றை இன்னும் பலர் அணுக இயலுகிறது. தொலைநோக்கில் பார்க்கும்போது, இவை மிகச் சிறந்த ஒளித் தெரிவுகளாகும், மேலும் பசுமையான ஒரு வாழ்க்கைமுறைக்கு மாறுவதற்கு இவை உங்களுக்கு உதவுகின்றன.

பயன்படுத்திய LEDகளை அகற்றுவதும் எளிது. அவற்றை வழக்கமான குப்பைத் தொட்டிகளில் போட்டுவிடலாம். ஆனால், அப்படிப் போடுமுன் அவற்றை எதிலாவது கவனமாக மூடிப் போடவேண்டும். அப்போது, ஒருவேளை இவை உடைந்துவிட்டாலும், குப்பை திரட்டுபவருடைய கைகள் அதனால் பாதிக்கப்படாது.

இப்படித் திரட்டப்பட்ட பழைய LEDகள் நிறைவாக ஒரு மறு சுழற்சியாளரிடம் செல்லும்; அவர் அதிலுள்ள கண்ணாடி, அலுமினியம் போன்ற பொருட்களைத் திரும்பப் பெறுவார்.

வீட்டில் ஆற்றல் பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. அதைச் செயல்திறனோடு பயன் படுத்துவதன்மூலம் மின்சாரப் பயன்பாட்டையும் குறைக்கலாம், பைங்குடில் வாயுக்களைக் குறைத்துக் காலநிலை மாற்றத்தையும் குறைக்கலாம் என்பதால், இது இப்போது ஒரு மந்திரமாகவே ஆகிவிட்டது.

அடுத்தமுறை, நாம் ஒளியைத் தாண்டிச் சிந்திப்போம், ஆற்றலைச் செயல்திறனோடு பயன்படுத்துவதை முன்னிறுத்துவதற்கு நாம் இன்னும் எந்தெந்த இடங்களில் என்னென்ன செய்யலாம் என்பதைப் பேசுவோம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதிவருகிறார்.

Wordsworld

Bookmarks as signals and sentinels

Sandhya Rao

Mostly they tell us how far we've travelled in a book, occasionally they remind us that the journey remains unfinished.

Early April, I returned to *The Library Book* months after having inserted a bookmark to indicate where I had stopped reading. Some of you may remember the name: it's a book by Susan Orlean about a massive fire that was deliberately set off at the Los Angeles Public Library on April 29, 1986, in which some 400,000 books were destroyed. It begins: 'Even in Los Angeles, where there is no shortage of remarkable hairdos, Harry Peak attracted attention. "He was very blond. Very, very blond," his lawyer said to me, and then he fluttered his hand across his forehead, performing a pantomime of Peak's heavy swoop of bangs. Another lawyer, who questioned Peak in a deposition, remembered his hair very well. "He had a lot of it," she said. "And he was very definitely blond." An arson investigator I met described Peak entering a courtroom "with all that hair," as if his hair existed independently.'

I remember the book was so compelling that I told many friends about it. If the felicitous writing and amazing accounts of people, events, places, libraries and reading was so fascinating, why had I left it half-way?

Returning to it now is proving as engrossing as ever, the historical details enlightening, the anecdotes engaging, the descriptions of librarians and patrons absorbing. For instance, around page 160, we are introduced to a young man 'with a sweet, distracted look on his face'. This is CJ. He is deaf and autistic and has an extraordinary knowledge of maps. When the library acquires the Feathers Collection, maps occupying 'the equivalent of two football fields of shelving', it is found to be all jumbled up. CJ is called in to help organise the maps. In the course of putting the maps in order, CJ finds one stuck between the pages of a street atlas. It turns out to be a 'map of the 1932 Summer Olympics, which were held in Los Angeles just as the Great Depression bore down. … along the top of the map was the encouraging yet commanding phrase AVOID CONFUSION. The map had the frozen-moment quality of a snapshot.'

So, again: Why had I stopped reading? If you look online for reasons why people don't finish reading books, the most common answer is that they lose interest in them because they are bad or boring. In my case, two things happened: I was distracted by a whole pile of new books, and laid low by a mountain of work-related deadlines. After a while *The Library Book* was forgotten, although it remained — bookmark visible — on my open reading shelf, it was not consigned to a cupboard with closed doors. There were several occasions when I could have picked it up, given the ever-lengthening of our collective coronavirus isolation period, but the mood did not permit. Until this



moment. Thanks be for the return of the mojo because *The Library Book*, with its unprepossessing, old-fashioned cover design, is a book lover's delight.

The fact is, I rarely read only one book at a time, although usually I prefer to generally do things one at a time and cross them off the list as I complete the tasks. With books, however, three at one go is normal; it's like savouring the flavour of the moment, each book a different flavour. *The Library Book* is quite distinct from Lesley Hazleton's *The First Muslim* (brilliant) which is a far cry from Naguib Mahfouz's *The Quarter* (not as compelling as his other work) and Burhan Sönmez's *Istanbul Istanbul* (a tough read). You could argue that there's some similarity between Mahfouz and Sönmez, but while *The Quarter* is a collection of quirky, short sketches featuring individuals inhabiting a certain part of Cairo, Sönmez sets the complex and sometimes confusing narratives of his characters inside a prison ward. Other titles awaiting my return include *Djinn Patrol on the Purple Line* by Deepa Anappara and *The Vanishing Half* by Brit Bennet.

This is where the game of algorithms comes into play. And we all know that the world of cyberspace is completely ruled by algorithms. So, I really shouldn't have been surprised to see the June 2019 article by Nilanjana Roy pop up on my Google menu: 'Why adults abandon more books than children'. The Internet Of All Things (sorry, IoT) had probably tracked my search for reasons why books are left partially read, and decided to help out. Writing in the *Financial Times*, she — I absolutely loved her book, *The Wildings* — says, 'An unfinished book is not necessarily bad or good — perhaps it is only that it took the reader by surprise. It was not the story they were expecting; they didn't like the main characters; they found the book unsettling. You might feel sympathy for readers who turn to *Moby Dick* expecting a rousing man-versus-great-white-whale adventure, and discover a book rippling with digressions on church services, and an entire chapter on the glories of tubs of whale sperm.'

Respectfully going by Nilanjana Roy's explanation, I shall most likely not pick up *Djinn Patrol* again: the prose is lucid and the plot sufficiently twisty-turny, but in my



view, the book is overwritten, the voices are not entirely in character, and some of the stylistic devices are definitely illogical. Mind you, this is a subjective opinion, so please feel free to make of it what you will. Still, I would urge you to take a shot at *The Vanishing Half*: it holds your attention from the very first page and the storyline seems promising. That's next on my CTR (continue to read) list. As against TBR (to be read). *Istanbul Istanbul* will take a little more fortitude and possibly time, but fortitude shall be garnered and time made because for one, the cover is too dramatic to disregard, and for another, the voices too compelling to ignore. So, too, *The First Muslim*. There's no way I'm not going to finish that book, and since *The Quarter* is our book club's choice, besides being an easy read, that's going to breast the tape as well. This time, on my Kindle.

Which brings me to a question: Would I (or you or we) love a book more if it were an object 'in person' so to speak, pages, jacket, smell and all, rather than on a 'device'? What do you think?

The columnist is a children's writer and senior journalist.

Subscribe NOW!

for Rotary News Print Version & e- Version

For the Rotary year 2021 – 2022

Annual Subscription (India)

Print version	e-Version
₹420/-	₹360/-

Print version ☐ **e- Version** ☐

	English	Hindi	Tamil
No. of Copies			

For every new member the pro-rata is ₹35 a month.

As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-Version.

Please attach the TYPED list of individual members with their complete address, PIN code, Mobile number and e-mail ID. Intimate language preference (English/Hindi/Tamil) against each member's name.

Rotary Club of ..... RI District .....

Name of the President/Secretary .....

Address .....

.....

.....

City ..... State ..... PIN ☐☐☐☐☐☐

STD Code ..... Phone: Off. ..... Res. .....

Mobile .....E-mail .....

Cheque/DD No. ..... Dated ..... for Rs. .....

Drawn on .....

in favour of "**ROTARY NEWS TRUST**" is enclosed.

Date: President/Secretary

Payments can be made online at HDFC Bank, Montieth Road, Egmore, Chennai – Rotary News Trust, SB A/c No 50100213133460; IFSC HDFC0003820. Email us the UTR Number, Club Name, President/Secretary's name, Amount and Date of Transfer.

Mail this form to:
Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

Subscription norms

1. Subscription is for the Rotary year (July to June).

2. It is mandatory for every Rotarian to subscribe to a Rotary magazine.

3. The annual subscription for print version is ₹420 and e-version is ₹360 per member.

4. Subscription for the full year must be sent in July, in the prescribed form.

5. Those joining after July can pay for the remaining Rotary year at ₹35 an issue for print version and ₹30 for e-version.

6. Subscription account of the club with *Rotary News* is a running account and does not cease at the end of June every year.

7. Names of all members, with their complete postal address with **PIN CODE, mobile number and e-mail ID** must be sent along with the form and DD/cheques payable at par.

8. Language preference **(English, Hindi or Tamil)** should be stated alongside member's name.

9. Please send the updated mailing address and contact details of your members **directly** to *Rotary News*.

10. Members to ensure their names are included in the Subscribers' list their club sends us. If you've paid, but your name is not sent to us by your club, you will not get a copy of the magazine.

11. When members leave, clubs should inform *Rotary News*. Please help reduce wastage of copies.

12. Clubs are liable to pay for the number of magazines we despatch according to the list available with the Rotary News Trust.

13. Unpaid dues of the club will be shown as outstanding against the club. Any payment received subsequently will be adjusted against earlier dues.

14. Clubs with subscription arrears will be notified to RI and are liable for suspension.

15. We are in the process of tallying our subscriber list with RI membership from India.

RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

அலுவலகம் மூடப்பட்டிருப்பதால் அறக்கட்டளை அங்கீகாரத்தில் தாமதம்

Covid–19 பரவல் மற்றும் அதனால் ஏற்பட்ட முடக்கத்தால், அங்கீகாரங்களை அனுப்புதல் தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது; அலுவலகம் திறந்தபின் இது தொடரும். இதனிடையே, கையெழுத்திடப்பட்ட அங்கீகார மாற்றக் கோரிக்கைப் படிவம் மற்றும் பால் ஹாரிஸ் சமூக உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை (PDF வடிவத்தில் மட்டும்) மஞ்சு ஜோஷிக்கு *Manju.Joshi@rotary.org* என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்ந்து அனுப்பிவையுங்கள். மிகப் பெரிய நன்கொடையாளர் அங்கீகாரத்துக்கான பொறித்தல் குறிப்புகளையும் இதே மின்னஞ்சல் முகவரியில் பகிர்ந்து கொள்ளலாம்.

சங்க அங்கீகாரம்

ரோட்டரி அறக்கட்டளையின் நல்கைகள் மற்றும் திட்டங்களுக்குச் சங்கங்கள் வழங்கும் ஆதரவுக்கான அங்கீகாரத்தைப் பெற அறக்கட்டளை அவர்களுக்குப் பல வாய்ப்புகளை வழங்குகிறது. My Rotary பக்கத்தில் மாவட்ட/சங்கத் தலைவர்கள் சங்க அறக்கட்டளைப் பதாகை அறிக்கையைக் காணலாம். இது, இந்த ரோட்டரி ஆண்டில் கீழே பட்டியலிடப்பட்டுள்ள பல்வேறு சங்கப் பதாகைகளுக்கான சங்கத்தின் முன்னேற்றத்தைக் காண்பிக்கும்:

- 100% அறக்கட்டளைக்கு வழங்கும் சங்கம்
- 100% ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும் சங்கம்
- ஆண்டு நிதி வழங்கலில் ஒவ்வொருவருக்குமான நிதியில் உயர்ந்த மூன்று
- 100% பால் ஹாரிஸ் சமூகச் சங்கம்
- 100% பால் ஹாரிஸ் தோழமைச் சங்கம் (ஒருமுறைமட்டும் வழங்கப்படும் பதாகை)

ரோட்டரி ஆண்டு 2015–16ல் தொடங்கி, புதிய சங்க உறுப்பினர்கள் (அந்த ரோட்டரி ஆண்டின் போது சேர்ந்தவர்கள் அல்லது இன்னொரு சங்கத்திலிருந்து மாறியவர்கள்) சங்கப் பதாகைகளுக்கான பங்கேற்றல் தேவைகளில் சேர்க்கப்படுவதில்லை (100% பால் ஹாரிஸ் தோழமைப் பதாகை நீங்கலாக). அதே நேரம், ஒவ்வொருவருக்குமான நிதிக் கணக்கீடுகளில் புதிய உறுப்பினர்களுடைய பங்களிப்புகள் பயன்படுத்தப்படும்.

பள்ளிகளில்-Wash இலக்குச் சவால்

பள்ளிகளில் Wash இலக்குச் சவாலின் இந்திய அங்கீகாரக் குழு ஏப்ரல் 15 வரை செயல்படுத்தும் ரோட்டரி சங்கங்கள்/பள்ளிகளுக்கு 233 ரோட்டரி ஒன் ஸ்டார் விருதுகளை வழங்கியுள்ளது. WinS இலக்குச் சவால் முன்னோட்டம் ஜூன் 30, 2021 அன்று நிறைவடையும்.■

ரோட்டரி சங்கங்களில் பால் ஹாரிஸ் சிலை

ரோட்டரி செய்திக்குழு

1.2 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட நம் அமைப்பு, ஒரு மனிதருடைய தொலைநோக்குடன் தொடங்கியது: பால் P ஹாரிஸ். அவரைப் பெருமைப்படுத்தும் வகையில், எங்கள் மாவட்டத்தில் ஒன்பது ரோட்டரி கட்டடங்களில் நாங்கள் அவருடைய மார்பளவு சிலையை நிறுவியுள்ளோம் என்றார் DG கஜேந்திரா நாரங், RID 3040.

RID 3090ஐ சேர்ந்த PDG பாக் சிங் பன்னு உதவியுடன் சிலைகள் பெறப்பட்டு, இந்தூர், மன்ட்சௌர், நீமுச், ஜபுவா, கன்ட்வா, செஹோர், சோன்கட்ச், போபால் மற்றும் சஹிந்த்வாராவுக்கு அனுப்பப்பட்டன. அங்குள்ள சங்கங்கள் இந்தச் சிலைகளைத் தங்கள் ரோட்டரி கூடங்களில் நிறுவினார்கள்.

2017ல் பன்னு ஆளுநராக இருந்த போது, RID 3090ன் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், அந்த மாவட்டத்தில் 20 சங்கங்களில் ரோட்டரி நிறுவனருடைய சிலைகளை நிறுவினார். இவரைப் பார்த்து ஊக்கம் பெற்ற DG நாரங்-கும் இந்த முயற்சியைத் தொடர்ந்து செய்து ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை வலுவாக்கும்படி தன்னுடைய மாவட்டத்தில் உள்ள சங்கங்களைக் கேட்டுக்கொள்கிறார்.■

RID 3090 DG *பாக்சிங் பன்னு மற்றும்* RID 3040 DG *கஜேந்திர நாரங்* RC *செஹோரில் பால் ஹாரிஸ் சிலை நிறுவினர்.*

District Wise TRF Contributions as on April 2021

(in US Dollars)

District Number	Annual Fund	PolioPlus	Endowment Fund	Other Funds	Total Contributions	EREY Donors (in numbers)	EREY %
			India				
2981	78,363	5,351	12,128	0	95,843	356	7.3
2982	40,731	16,977	20,770	49,946	128,424	120	3.9
3000	85,046	27,496	492	47,958	160,992	83	1.6
3011	86,648	16,120	65,653	282,154	450,576	123	3.4
3012	12,808	2,580	0	42,321	57,710	76	2.1
3020	162,332	67,334	81,660	42,726	354,053	280	6.9
3030	54,832	2,315	27,743	143,546	228,436	140	2.7
3040	37,139	354	0	11,876	49,369	50	2.4
3053	22,076	3,298	0	211,400	236,774	53	1.9
3054	74,395	3,562	0	368,873	446,830	266	4.4
3060	94,114	1,341	105,257	161,665	362,377	1,350	31.0
3070	46,199	1,813	0	52,573	100,586	299	9.5
3080	54,707	13,069	0	(13,308)	54,468	181	5.5
3090	35,919	533	0	(736)	35,716	117	5.3
3100	58,126	252	0	15,630	74,009	193	8.6
3110	43,364	200	0	0	43,564	70	1.9
3120	14,665	1,769	0	8,609	25,043	116	3.5
3131	239,586	43,760	136,935	778,326	1,198,606	1,068	20.8
3132	24,107	4,012	15,000	6,451	49,570	57	1.7
3141	652,937	44,754	397,179	1,250,422	2,345,292	968	18.2
3142	232,306	33,969	451	50,782	317,509	802	25.0
3150	128,947	10,115	160,043	38,280	337,385	794	24.0
3160	40,246	9,486	16	440	50,189	82	3.3
3170	55,582	24,189	1,240	206,105	287,116	260	4.6
3181	87,308	6,618	0	7,050	100,976	338	10.1
3182	93,031	6,138	0	16,207	115,375	400	13.0
3190	200,360	80,872	52,035	220,236	553,503	1,092	21.9
3201	170,413	39,821	0	398,400	608,633	595	10.7
3202	54,103	24,622	8,468	54,957	142,150	161	3.0
3211	47,482	3,441	0	106,447	157,369	71	1.6
3212	19,281	55,154	10,153	140,733	225,321	55	1.3
3231	4,776	589	0	23,767	29,132	25	0.6
3232	90,357	45,062	21,500	1,142,888	1,299,807	200	3.5
3240	123,691	25,428	0	49,328	198,448	283	9.3
3250	47,820	4,439	7,195	62,199	121,653	345	9.4
3261	105,540	1,733	50,000	47,471	204,745	37	1.4
3262	100,581	3,253	2,777	(2,060)	104,552	146	4.1
3291	77,124	13,027	35,758	71,251	197,160	138	3.8
India Total	**3,597,043**	**6,44,848**	**1,212,456**	**6,094,914**	**11,549,261**	**11,790**	**7.95**
3220 Sri Lanka	168,897	21,022	26,000	48,781	264,701	258	13.6
3271 Pakistan	48,292	97,291	0	239,793	385,376	202	12.4
3272 Pakistan	72,158	20,559	0	1,168	93,885	445	26.6
3281 Bangladesh	188,712	15,881	33,012	303,777	541,383	440	6.2
3282 Bangladesh	62,851	8,235	0	8,270	79,356	123	3.0
3292 Nepal	286,637	9,867	0	242,429	538,934	1,768	35.8
South Asia Total	**4,424,591**	**8,17,703**	**1,271,468**	**6,939,133**	**13,452,894**	**1,5026**	**8.86**

Source: RI South Asia Office

சீ-சா விளையாட்டிலும் நிலைத்தன்மை

பரத் — ஷலன் சவூர்

சென்ற ஆண்டு ஒரு சீ-சா விளையாட்டைப்போல் இருந்தது உண்மைதானே? ஒரு மாதம் மேலே, ஒரு மாதம் கீழே!

தடுப்பு மருந்துகள் அறிமுகமான போது, நாம் அனைவரும் சுறுசுறுப்பானோம். நோயெதிர்ப்பாற்றலும் பொருளாதாரமும் நம்முடைய ஊக்கத்துடன் சேர்ந்து உயர்வதுபோல் தோன்றியது. ஆனால், வருத்தமான விஷயம், கோவிட்-19ம் அதே வேகத்தில் உயர்ந்தது. முகமூடியை ஒழுங்காக அணியாத, பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றாத பல பொதுமக்கள் கோவிடுக்கு உதவினார்கள், சீ-சா மீண்டும் திரும்பியது.

ஆனால், இத்தனைக்குப்பிறகும், நாம் ஒருபோதும் நம்பிக்கை இழக்கக்கூடாது. நோய்ப்பரவல் உண்மையை ஏற்றுக்கொள்வோம் அது நம் வாழ்க்கைக்குக் கொண்டு வந்திருக்கும் மாற்றங்களையும் நாம் ஏற்றுக்கொண்டுவிட்டால், மனக் கவலை இல்லை, அலைபாய்தல் இல்லை, எங்கும் அமைதி.

அவள்-என்னை-நேசிக்கிறாளா-நேசிக்கவில்லையா என்று ஏங்கும் காதலனைப்போல், நம்மைச் சுற்றி ஓர் உறுதியற்ற சூழ்நிலை உள்ளது. மக்கள் வீட்டிலிருந்து வேலை செய்யப் பழகிய நேரத்தில், அவர்கள் அலுவலக வளாகத்துக்குத் திரும்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள் இன்னும் பல சிறு முடக்கங்கள், சம்பளக் குறைப்புகள், பதவி இறக்கங்கள், கலவையான அமைப்புகளில் இருந்து செயல்படல்கள் வரலாம்...

அப்போதெல்லாம், இதை நினைவில் வையுங்கள்: முதல் விஷயம், உங்கள் மன உறுதி குறையக்கூடாது. மனத்தை அமைதியாக்குங்கள். ஆழமாக ஓரிரு முறை மூச்சு விடுங்கள். நச்சான அச்சங்கள் அனைத்தையும் வெளியில் விடுங்கள். நீங்கள் உறுதியற்ற நிலையைச் சகித்துக் கொள்ளப்போகிறீர்கள், ஏற்றுக் கொள்ளப்போகிறீர்கள் என்று தீர்மானியுங்கள். நம்மால் அனைத்தையும் கட்டுப்படுத்த இயலாவிட்டாலும் பரவாயில்லை. அனைத்தும் உறுதியாக இருக்க வேண்டும் என்ற நிலையான எண்ணத்தை விடுங்கள். வாழ்க்கை எப்போதும் மாறிக்கொண்டுதான் இருக்கும், முடியாமல்தான் இருக்கும், கச்சிதமற்றுதான் இருக்கும் அதன் இயல்பை எதிர்க்காதீர்கள், அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

மாற்றி யோசியுங்கள்: நீங்கள் எப்படிப் பொறுப்பு ஏற்பீர்கள்? ஆர்வத்துடன் இருங்கள், மகிழ்ச்சியுடன் இருங்கள். மிகச் சிறந்த செய்தி என்னவென்றால், உங்கள் மூளையைப் படைப்புணர்வு மிக்க ஆற்றுக்கு அழைத்துச்செல்ல உங்களால் இயலும். மனித மூளை "நியூரோபிளாஸ்டி சிட்டி என்னும் மாறுகிற தன்மையைக் கொண்டது, மாற்றி யோசிப்பதன்மூலம், பழைய கருத்துகளிலிருந்து நாம் அதை மாற்றலாம்.

என்னுடைய தனிப்பட்ட அனுபவத்தில் நான் கற்றுக்கொண்டது, மனச்சோர்வு என்கிற ஏற்றுக் கொள்ளாமையின் அறிகுறி நம்மைத் தடுமாறவைக்கிறது; அதே நேரம், ஏற்றுக்கொள்ளல் ஒரு சிறப்பான அடித்தளத்தை அமைக்கிறது, மீள்திறன், நிலைத்தன்மையைக் கட்டமைக்க உதவுகிறது.

முதலில், மூளையில் மூன்று அமைப்புகள் உள்ளன என்பதையும், அவற்றைப் பயன்படுத்தி நீங்கள் ஒரு மிகச் சிறந்த வாழ்க்கையை உங்களுக்கே பரிசளித்துக் கொள்ளலாம் என்பதையும் தயவு செய்து புரிந்துகொள்ளுங்கள். அந்த அமைப்புகளின்மீது மூன்று

நரம்புக் கட்டுப்படுத்திகள் தாக்கம் செலுத்துகின்றன: டோபமைன், எபினெஃப்ரின், செரோடோனின் என்ற வேதிப்பொருட்கள். இவை முறையே மகிழ்ச்சி, விரைவுத்தன்மை, நிறைவைக் கொண்டுவருகின்றன. இந்த வேதிப்பொருட்களை உங்கள் மூளை வெளிவிடுவதற்கு உங்களால் உதவ இயலும்.

நோக்கத்துடன் செயல்படுங்கள்: நாள் தோறும் காலையில் எழுந்தவுடன் நீங்கள் பணிக்குச் செல்வதை விரும்பினால், நீங்கள் டோபமைன் அமைப்பைத் தூண்டுகிறீர்கள். இந்த வேதிப்பொருள் ஆர்வத்துடன் உயர்கிறது. அப்படி நீங்கள் ஆர்வத்துடன் அலுவலகத்துக்குச் செல்லத் தயாராகும்போது, முடக்கம் செயலுக்கு வந்திருப்பதாக அறிவிக்கிறார்கள் அந்த ஏமாற்றத்தால் டோபமைன் அளவு சட்டென்று குறைவது இயல்புதானே?

இந்த நிலையில் நீங்கள் கட்டுப்பாட்டைப் பெறுவது எப்படி?

நீங்கள் நோக்கத்துடன் செயல்பட வேண்டும். இதுவரை உங்கள் மூளை நன்கு செயல்படக் காரணம், அலுவலகம் செல்லுதல் என்கிற நோக்கத்துடன் நீங்கள் செயல்பட்டது தானே? இப்போது, அதைச் சற்று மாற்றி அமையுங்கள். உங்கள் நோக்கம், உடலை உறுதியாக வைத்துக்கொள்வது, உங்கள் நோயெதிர்ப்பாற்றலை மேம்படுத்துவது, அதற்கு நீங்கள் காலையில் நடைப்பயிற்சிக்குச் செல்லவேண்டும். இந்த முன்னோக்கிய நகர்வு, மூளைக்கு மிக நல்லது. எதிர்பார்க்கும் டோபமைன் தன்னுடைய நண்பராகிய எபினெஃப்ரினை அழைக்கிறது, அது விரைவுத்தன்மையை வழங்கி உங்களைச் செயல்படவைக்கிறது. இதனால், நீங்கள் நல்ல நலம் என்கிற பாதையில் நோக்கத்துடன் நடக்கிறீர்கள், உங்கள் நாள் ஒரு மிக நல்ல தொடக்கத்தைப் பெறுகிறது.

மனச் சோர்வின் எதிர்ச்சொல், மகிழ்ச்சி இல்லை, உதவியற்று, நம்பிக்கையற்று உணராமலிருத்தல், எல்லாரும் நம்மைக் கைவிட்டுவிட்டார்கள் என்று எண்ணாமலிருத்தல்தான். உங்கள் முன்னோக்கிய நடை, வெற்றிகரமான வாழ்வை நோக்கிய நடையாகும்.

உங்களை நீங்களே தட்டிக் கொடுத்துக் கொள்ளுங்கள். மூளையில் தாக்கத்தை உண்டாக்கும்.

நம்மை நாமே பாராட்டிக் கொள்வதற்கு ஒரு நல்ல காரணம் உள்ளது. "பரிசு வேதிப்பொருள்" எனப்படும் டோபமைனை அது உயர்த்துகிறது. எபினெஃப்ரின் நன்கு செயல்படுவதற்கு டோபமைனின் துணை வேண்டும். டோபமைன் இல்லாவிட்டால், எபினெஃப்ரினுடைய விரைவுத்தன்மை பரபரப்பாக, அழுத்தமாக மாறிவிடுகிறது. எளிமையாகச் சொல்வதென்றால், நீங்கள் செய்த அனைத்தையும் நினைத்து மகிழுங்கள், உங்கள் மூளை தன்னைப்பற்றி நன்கு உணரும்.

இங்கு-இப்போது மகிழ்ச்சி: நீங்கள் உங்களுடைய நலனுக்காகச் செய்யவேண்டிய இன்னொரு விஷயம்: செரோடோனின் எனப்படும் இன்னொரு பரிசு வேதிப்பொருளை உயர்த்துதல். நீங்கள் வெளியில் சென்று செய்கிற அனைத்தின்மூலமும் கிடைக்கிற பரிசுகளை டோபமைன் மகிழ்ந்து அனுபவிக்கிறது. அதே நேரம், உங்களைச் சுற்றி ஏற்கெனவே உள்ள பரிசுகளைச் செரோடோனின் மகிழ்ந்து அனுபவிக்கிறது. உங்கள் வீடு, நண்பர்கள், குடும்பம், செல்ல விலங்கு என அது எதுவாகவும் இருக்கலாம் இது உங்களை அமைதியாக்குகிறது, ஓர் இதமான, நிறைவான உணர்வைத் தூண்டுகிறது.

நீங்கள் உங்கள் துணைவரை, உங்கள் குழந்தைகளை அணைக்கும் போது, உங்கள் நாயையோ பூனையையோ கொஞ்சும்போது, அன்புக்குரிய உடன்பிறந்தவர் அல்லது நண்பருடன் தொலைபேசியில் பேசும்போது, செரோடோனின் உயர்கிறது அதற்குப் பிணைப்பு என்றால் மிகவும் பிடிக்கும்.

பிணைப்புகள் என்பவை மனத்துக்கான முதுகெலும்பு, வெளியில் சென்று பல விஷயங்களைச் செய்யும் துணிவை, நம்பிக்கையை அவை நமக்கு வழங்குகின்றன. நமக்காக அவர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்து நாம் பாதுகாப்பாகவும் உறுதியாகவும் உணர்கிறோம்.

நம்முடைய மூளையில் மூன்று நட்பான வேதிப்பொருட்கள் அமர்ந்திருக்கின்றன, நாம் கட்டளையிடுகிறபடி செயல்படுகின்றன என்பது வியப்பான விஷயம்தானே? கட்டுப்படுத்தக்கூடியவற்றை உங்களால் கட்டுப்படுத்த இயலும்போது, உங்கள் உணர்வுகளின்மீது தாக்கம் உண்டாக்க இயலும்போது, நீங்கள் இன்னும் கூடுதலாக உங்களை உணரத் தொடங்குகிறீர்கள். உங்கள் மூளையில் உள்ள மூன்று அமைப்புகளையும் நீங்கள் இணைக்கும்போது, உங்கள் வாழ்க்கையின் புள்ளிகளை இணைத்துக் கோலம் போடலாம்.

இந்த உறுதியற்ற தன்மை ஓரிரு ஆண்டுகளுக்குத் தொடரக்கூடும். கொரோனாவைரஸ் முற்றிலுமாகச் சென்றுவிடாமலிருக்கலாம், ஆனால், அது வலுவிழந்துகொண்டிருக்கிறது. அத்துடன், நம்முடைய தடுப்பு மருந்துகள், முகமூடிகள், சமூக விலகியிருத்தல் ஆகியவற்றால் அதன் பாதிப்பு கிட்டத்தட்ட நீங்கி விடும். இன்னும் ஐந்து ஆண்டுகளில் அது இன்னொரு "சளி, இருமல்" வைரஸ் ஆகிவிடும் என்று வல்லுனர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதுவரை, ஒருவேளை நமக்கு நோய்த்தொற்று ஏற்பட்டாலும் சரி, மற்ற வைரஸ்களுக்கு எதிரான நம்முடைய நோயெதிர்ப்பாற்றலை அது மேம்படுத்தும் என்கிறார்கள் அவர்கள்.

உண்மை என்னவென்றால், நம்மில் பலர், வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்கிற நம்முடைய சிந்தனையில் மிக ஆழமாக மூழ்கி விட்டோம், அதனால், வாழ்க்கை என்பது என்ன என்கிற பார்வையை, நுண்ணுணர்வை இழந்துவிட்டோம். நம்முடைய முரட்டுத்தனமான ஊகங்கள், பிடிவாதமான கருதுகோள்களிலிருந்து நாம் கீழே இறங்கி வரும்போது, அதன் நிச்சயமற்ற தன்மைகளை நாம் வாழவேண்டிய மர்மங்களாகக் காண்போம்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

RC திருவாரூர் மிட்-டவுன் — RID 2981

திருவாரூர் மருத்துவ மையத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 400 பெண்களுக்குத் தோல் நோய்கள், நீரிழிவு, கண் குறைபாடுகளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டது.

RC ராஜமுந்திரி ரிவர் சிட்டி — RID 3020

உலகச் சிறுநீரக நாளில் தூய்மைப் பணியாளர்களுக்கு மிகப் பெரிய நல முகாமொன்று நடத்தப்பட்டது. DGN பாஸ்கர்ரம் V இதில் கலந்து கொண்டார், Dr P சசங்கா தலைமையில் மருத்துவர்கள் சுமார் 500 நோயாளிகளைப் பரிசோதித்தார்கள்.

RC சேலம் — RID 2982

சேலம் மாநகராட்சி ஆதரவுடன் ரோட்டரி கூடத்தில் கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் முகாமொன்று நடத்தப்பட்டு, 160 பேருக்குத் தடுப்பூசி போடப்பட்டது.

RC சங்கம் சலிஸ்காவ்ன் — RID 3030

பேருந்துகள், ரயில்களில் பொருள் விற்கும் மாற்றுத் திறனாளி விற்பனை யாளர்கள் 25 பேருக்கு இச்சங்கம் ரூ.30,000 செலவில் மளிகைப் பொருள்களை நன்கொடையாக அளித்தது.

RC டெல்லி கன்னாட் ப்ளேஸ் ரைசினா ஹில்ஸ் — RID 3011

இந்தச் சங்கம் காசியாபாதில் கூடுதல் இயந்திரங் களுடன் தையல் மையத்தை விரிவாக்கியது. இந்தத் தொழில் சார்ந்த மையத்தின் விரிவாக்கம் சுமார் 50–80 பெண்களுக்கு நன்மையளிக்கும்.

RC பிக்கனெர் — RID 3053

ஓர் அரசு மருத்துவ மனைக்கு வென்டி லேட்டர்கள், PPE பொதிகள் நன்கொடையாக அளிக்கப் பட்டன. இந்த GG திட்டம் RC டென்வர், RID 5450, ஆதரவுடன் செய்யப் பட்டது.

செய்திகள்

RC உதய்பூர் வசுதா — RID 3054

பெட்லா கிராமத்தில் உள்ள ராஜ்கியா பாலிகா உச் மத்யமிக் வித்யாலயா மாணவிகளுக்கு மாதவிலக்குத் தூய்மை நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது, சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்பட்டன.

RC சஹரன்பூர் — RID 3080

கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் முகாமில் 50க்கும் மேற்பட்ட ரோட்டரியன்கள், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டது.

RC தாராப்பூர் — RID 3060

தாரப்பூர், அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த 24 நலிந்த பெண்களுக்குப் பயிற்சியளிக்க ஒரு தையல் வகுப்பு தொடங்கப் பட்டது. இந்தத் திட்டத்துக்கான செலவு ரூ.36,000.

RC கான்பூர் நார்த் — RID 3110

RID 3110, மேலும் ஐந்து சங்கங்களுடன் சேர்ந்து, கோவிட் தடுப்பு மருந்து பற்றிய விழிப் புணர்வை உண்டாக்கு வதற்காக ஒரு கார்ப் பேரணியை நடத்தியது.

RC கங்க்ரா — RID 3070

தொழிலாளர்களுக்குத் தூய்மைப்படுத்திகள், முகமூடிகள், சோப்புகள் வழங்கப்பட்டன. வைரஸைத் தடுப்பதற்கான படிநிலைகளைச் சங்கத் தலைவர் சுனில் டொக்ரா, முன்னாள் தலைவர் நவ்னீத் சர்மா பட்டியலிட்டார்கள்.

RC வாரணாசி ஈஸ்ட் — RID 3120

மருத்துவமுகா மொன்றில் 190 நோயாளிகள் கண், பல், BP, சர்க்கரை, எலும்பு மற்றும் நரம்பியல் குறைபாடு களுக்காகப் பரிசோதிக்கப் பட்டார்கள்.

RC மல்காபூர் — RID 3132

சங்கம் நடத்திய ஆயுர்வேத மருத்துவ முகாம் 100 நோயாளிகளுக்குப் பலனளித்தது. இந்த நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் சலீம் முஜாவர், செயலாளர் பிரவீண் ஜாதவ் கலந்துகொண்டார்கள்.

RC மங்களூர் சீசைட் — RID 3181

பெங்க்ரெயிலுள்ள DKZP உயர்நிலைத் தொடக்கப் பள்ளிக்கு ஒரு மேசைக் கணினி (ரூ.23,000) நன்கொடையாக அளிக்கப்பட்டது. சங்கத் தலைவர் சுரேஷ் M S இதைப் பள்ளித் தலைவரிடம் ஒப்படைத்தார்.

RC சூளூர்பேட் — RID 3160

மகளிர் தினத்தின்போது, மக்களுக்குச் சேவை புரியும் ஐந்து இல்லத்தரசிகள் பெருமைப் படுத்தப் பட்டார்கள். சங்கத் தலைவர் பிரதீமா சுங்கரா ஏழைகளுக்கு 250 சேலைகளை வழங்கினார்.

RC மணிப்பால் — RID 3182

இந்தச் சங்கம் தன்னுடைய தொழில் சார்ந்த சேவைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகச் சமூக ஆற்றலளித்தல் மையம் ஒன்றை அமைத்துள்ளது. இதை DG ராஜாராம பட் தொடங்கிவைத்தார்.

RC சங்க்லி மிட்-டவுன் — RID 3170

கர்னல் கிராமத்தில் வளர்ப்பு விலங்குகளுக்கான மருத்துவ முகாமில் விலங்குகளை மருத்துவர்கள் பரிசோதித்தார்கள். இந்த முகாம் ஒவ்வோராண்டும் நடத்தப்படும்.

RC பலரிவட்டோம் — RID 3201

கைம்பெண் ஒருவருக்குப் புதிய வீடு வழங்கப் பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இயக்குநர் பாலகோபால், A G சித்ரா அசோக் மற்றும் சங்கத் தலைவர் ரமேஷ் குமார் கலந்து கொண்டனர்.

செய்திகள்

RC காசரகோட் — RID 3202

ROPE திட்டத்தின் கீழ், காவல்துறையினருக்குப் போக்குவரத்துத் தடுப்பான்களை DG ஹரி கிருஷ்ண நம்பியார் வழங்கினார். இது ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தியது.

RC தர்மாநகர் — RID 3240

Rtn மொலொய் கான்டிராய் வடக்குத் திரிபுராவில் உள்ள தன்னுடைய ஒரு கட்டடத்தை தடுப்பு மருந்து வழங்கல் மையமாக மாற்றுவதற்காக நன்கொடையாக அளித்தார்.

RC டிரிவான்ட்ரம் சப்அர்பன் — RID 3211

இச்சங்கம், கேரள முதல் அமைச்சரின் துன்ப நேர உதவி நிதிக்கு (CMDRF) ரூ.1 லட்சத்துக்கான காசோலையை வழங்கியது.

RC ரூர்கேலா ரிவர்சைட் — RID 3261

இச்சங்கம், கல்பதரு ஆசிரம வளாகத்தில் உள்ள ஆதரவற்றோர் பள்ளியில் உள்ள குழந்தைகளுக்குப் போர்வைகளை வழங்கியது. மேலும் ஒரு மருத்துவ மனைக்கு இருபது சக்கர நாற்காலிகள் நன்கொடையாக அளிக்கப்பட்டன.

RC வேலூர் காஸ்மோஸ் — RID 3231

இந்தச் சங்கம், கோவிட் நேர உதவியாக, வேலூர் அரசு பென்ட்லான்ட் மருத்துவ மனைக்கு நாடித்துடிப்பு ஆக்ஸிமீட்டர், BP கருவி மற்றும் ஒரு மிகப் பெரிய ஒலிபரப்பித் தொலைபேசியை நன் கொடையாக வழங்கியது.

RC கசபா — RID 3291

சங்க உறுப்பினர்கள் கயாஸ்தபரா பேருந்து நிறுத்தத்துக்கு அருகிலுள்ள பொதுக் கழிப்பறை, குளியல் அறையைத் தூய்மைப் படுத்தினார்கள்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

இரண்டாம்தர திறமைக்கு “வரவேற்பு”

TCA ஸ்ரீனிவாசராகவன்

நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் என்பதில் அதிர்ஷ்டம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. 1991 ஆம் ஆண்டில் நானும் என்னுடன் பணிபுரிந்த வேறு சிலரும் திடீரென எங்கள் அதிர்ஷ்டம் மாறுவதைக் கண்டோம். என் விஷயத்தில் அதிர்ஷ்டம் தலைகீழாக மாறியது திடுக்கிடவைத்தது. 1972 ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் பட்டமேற்படிப்பு முடித்த நான் வேலைதேடத் தொடங்கினேன். பாரத ஸ்டேட் வங்கி, இந்திய ரிசர்வ் வங்கி, ஏர் இந்தியா, யு.பி.எஸ்சி. என பல தேர்வுகளை எழுதியும் தொடர்ந்து மூன்று ஆண்டு களுக்கு நான் நிராகரிக்கப்பட்டேன். எனக்கு பொருளாதரத்தில் இருந்த அறிவைவிட பிரிட்டிஷ் அரசியல் மற்றும் அரசியலமைப்பு பற்றிய வரலாற்றில் போதிய அறிவு இல்லை என்பதாலோ என்னவோ நான் நிராகரிக்கப்பட்டேன். அதனால் என்ன? நான் பொருளாதாரத்தில் ஒரு மேம்பட்ட பட்டம் பெற்றிருந்தாலும், பிற்காலத்தில் குஞ்சிகளிடமிருந்து பொது அறிவை கற்றுக்கொண்டேன். இறுதியில் நான் 25 வயதை நெருங்குவதற்கு முன்னால் ஒரு முன்னணி பிரிட்டிஷ் பப்ளிஷிங் நிறுவனத்தில் பொருளாதார ஆசிரியராக எனக்கு வேலை கிடைத்தது. அதுதான் எனது வாழ்க்கையின் முதல் அதிர்ஷ்டம். எனது தகுதியை அங்கீகரித்து வேலை தர மறுத்த பொதுத்துறை மற்றும் அரசுப் பணியைவிட அந்த நிறுவனத்தில் எனக்கு இரண்டு மடங்கு ஊதியம். ஆனால், ஐந்து ஆண்டுகளில் அந்த வேலையில் எனக்கு சலிப்பு ஏற்பட்டதால், பத்திரிகையாளர் பணிக்குச் செல்ல முடிவு செய்தேன். 1980ல் நான் வாங்கிய மாத ஊதியம் ரூ.1,800, புதிய வேலையில் ரூ.1,200 என குறைந்தது. ஆனால், அதை பொருட்படுத்தவில்லை. வேலையும் ஒரு நாளைக்கு மூன்று மணிநேரம் குறைவாக இருந்தது. எனக்கு அதிக ஓய்வு கிடைத்தது. இது ஒருவகையில் இது எனக்கு இழப்புதான் என்றாலும் எனது மனைவி, குழந்தைகளுடன் அதிக நேரம் செலவிட முடிந்தது.

செய்திப் பத்திரிகைகளில் பணிபுரிபவர்களுக்கு எப்போதுமே குறைவான ஊதியமே வழங்கப்பட்டு வந்தது. 1980 மற்றும் 1990க்கும் இடைப்பட்ட காலத்தில் எனது ஊதியம் ரூ.4,000 தான் அதிகரித்திருந்தது. அதாவது பத்தாண்டுகளில் ரூ.2,800 தான் உயர்ந்தது. ஆனாலும், தலையங்கப் பக்கத்திலோ அல்லது முதல் பக்கத்திலோ உங்கள் பெயர் போட்டு வரும் செய்திகளை அல்லது கட்டுரைகளைப் பார்க்கும்போது கிடைக்கும் மகிழ்ச்சி, பெற்ற ஊதியத்தைவிட அதிகமானது.

ஆனால், நான் சொன்னது போல ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பணம் சம்பாதிப்பதில் ஒரு வீழ்ச்சி இருக்கும். 1993 ஆம் ஆண்டில் தொலைக்காட்சி செய்திகள் முக்கியத்துவம் பெற்றதால் பத்திரிகையாளர்களுக்கு தேவை அதிகரித்தது. செய்திப் பத்திரிகைகளை விட தொலைக்காட்சியின் ஆதிக்கம் அதிகரித்தது. சந்தைப் பொருளாதாரம் காரணமாக ஒவ்வொருவருக்கும் திடீரென ஊதியம் அதிகரித்தது. அதாவது பொது முடக்கத்தின்போது விற்கப்படும் மதுபானங்களின் விலைபோல் இருந்தது. கடல் கொந்தளிப்பில் வேகமாக நகரும் படகுபோல, நீங்கள் கழுதையா அல்லது ரேஸ் குதிரையா என்பது முக்கியமல்ல உங்களுக்கு ஆள் வேண்டுமா? நீங்கள் அதற்கான ஊதியத்தை கொடுக்கவேண்டும் என்ற நிலை உருவானது. நாங்கள் அனைவரும் சிறிது பணக்காரர்களானோம்.

நான் கழுதையும் அல்ல; ரேஸ் குதிரையும் அல்ல, நான் ஒய்வை விரும்புபவனும் அல்ல. ஆனால், ஒரு வகையில் நான் சோம்பேறி. என்னை சிலர் விமர்சிக்கும்போது நான் இந்த அணுகுமுறையை நியாயப் படுத்தினேன். தொழிலாளிக்கு கிடைக்கும் வருமானத்தைவிட அவர் செய்யும் வேலை குறைவாக இருக்கிறது. அதிர்ஷ்டவசமாக எனது மனைவி கடின உழைப்பாளி. ஓரளவு சுகமான வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான அளவு சம்பாதித்து வந்தாள். இப்போதும்கூட ஒரு பேராசிரியர் என்ற வகையில் என்னைவிட மூன்று மடங்கு அதிகம் சம்பாதிப்பவர், ஆறு மடங்கு கடின உழைப்பாளி.

ஆனால், தொலைக்காட்சியில் சேர்ந்து ஊடகவியலாளராகப் பணியாற்ற எங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை. ஏனெனில் தொலைக் காட்சிக்கு வேலைக்கு செல்லும் அளவுக்கு எங்களுக்கு அழகும் இல்லை, இளமையும் இல்லை. ஆனால், திடீரென எங்கள் ஊதியம் 15 மடங்கு அதிகரித்தது.

இந்த திடீர் ஊதிய உயர்வு எங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. எங்கள் உரிமையாளரின் வலதுகரம் போன்றவர் விளக்கினார். நீங்கள் அரிதானவர்கள். உங்களுக்கு கொஞ்சம் பொருளாதாரம் தெரியும், அவ்வளவுதான். உங்களுக்கு கொஞ்சம் ஆங்கிலம் தெரியும், அவ்வளவுதான். ஆனால், சுயமரியாதையுள்ள எந்த ஒரு பொருளாதார வல்லுநர்களும் பத்திரிகைத் துறைக்கு வரமாட்டார்கள். அதனால் தான் உங்களுக்கு அதிக ஊதியம் தருகிறோம். இல்லையென்றால் நீங்கள் எல்லோரும் இரண்டாம் தர திறன்படைத்தவர்களே என்றார்.

இதை அதிர்ஷ்டம் என்று சொல் லாமல் வேறு எப்படிச் சொல்வது?■

செய்தித் துளிகள்

முகமூடிகளை மறுசுழற்சி செய்தல்

லண்டனில் உள்ள வாட்டர்ஹால் என்ற நிறுவனம், பயன்படுத்தப்பட்ட பழைய முகமூடிகளை உருக்கிப் பிளாஸ்டிக் கட்டிகளாக மாற்றுகிறது. இந்தப் பிளாஸ்டிக் கட்டிகளைக் கொண்டு குப்பைத் தொட்டிகள் போன்ற புதிய பொருட்களைச் செய்யலாம்.

இந்தச் சமூக நிறுவனம் இந்த முன்னெடுப்பைப் பரிசோதனை அடிப்படையில் ஒரு மருத்துவமனையில் செய்துவருகிறது. இந்த மருத்துவமனை, பயன்படுத்தப்பட்ட PPE ஆடைகளை எரிப்பதற்காக ஒரு டன்னுக்கு £550 செலுத்துகிறது. இந்த நிறுவனம், பயன்படுத்தப்பட்ட முகமூடிகளுக்காக இந்த மருத்துவமனைக்குப் பணம் செலுத்தும்.

மறுசுழற்சி செய்யப்பட்ட ராக்கெட் செலுத்தி(பூஸ்டர்)களைப் பயன்படுத்தி விண்வெளி ஆய்வாளர்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டார்கள்

நாசா, Space-X அமைப்புகள் மறுசுழற்சி செய்யப் பட்ட ஒரு ராக்கெட் பூஸ்டரைப் பயன் படுத்தி, நான்கு விண்வெளி ஆய்வாளர்களைக் கொண்ட குழுவை விண்வெளிக்கு அனுப்பும் ராக்கெட்டை ஏவினார்கள். 2017முதல் Space-X மறுசுழற்சி செய்யப்பட்ட ராக்கெட் பூஸ்டர்களைப் பலமுறை பயன்படுத்தியுள்ளது, ஆனால், அதிலெல்லாம் பொருட்கள்தான் சென்றுவந்தன.

செவிலியர்களுக்கு நன்றி சொன்ன மருத்துவமனை டீன்

பன்னாட்டுச் செவிலியர் நாளன்று, கோயம்பத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் ESI மருத்துவ மனையிலுள்ள ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் ஓவியத்தின் முன் செவிலியர்கள் ஒன்று கூடினார்கள். அப்போது, அந்த மருத்துவமனையின் டீன் அவர்களை வணங்கினார், கோவிட் முன்களப் பணியாளர்களாக அவர்கள் வழங்கிய சேவைக்கு மிகுந்த நன்றி தெரிவித்தார், செவிலியர்கள் இதைக் கண்டு வியந்தார்கள்.

சிங்கங்களுக்குக் கோவிட் பாசிட்டிவ்

ஹைதராபாதிலுள்ள நேரு விலங்கியல் பூங்காவில் உள்ள சில சிங்கங்களுக்கு மூச்சுத் திணறல், வறட்டு இருமல், மூக்குச் சளி, பசியின்மைப் பிரச்சனை வந்தது. இதனால், அங்கிருந்த அலுவலர்கள் அந்தச் சிங்கங்களுக்குக் கோவிட்-19 பரிசோதனை செய்தார்கள். அதில் எட்டுச் சிங்கங்களுக்குக் கோவிட் இருப்பது கண்டறியப்பட்டது, உடனே, அந்தச் சிங்கங்கள் தனிமைப்படுத்தப்பட்டன. பிற விலங்குகளும் கவனிக்கப்பட்டுவருகின்றன.

டச்சு நகரங்களில் தேனீ விடுதிகள்

சமீபத்திய ஆண்டுகளில் டச்சு மக்கள் தங்களுடைய நகர்ப்புறத் தேனீ எண்ணிக்கை யைத் தக்கவைத்துக்கொள்வதற்காகப் பல உத்திகளைப் பயன்படுத்தி வருகிறார்கள்: தேனீ விடுதிகள், தேனீ நிறுத்தங்கள், ஒரு தேனீ நெடுஞ்சாலை.

தேனீ விடுதி என்பது, உள்ளீடற்ற செடித் தண்டுகள் அல்லது மெலிதான மூங்கிலைக் கொண்ட ஒரு தொகுப்பாகும், இதில் உள்ள துளைகளில் தனித் தேனீக்கள் கூடு கட்டலாம். தேனீ நிறுத்தங்கள் என்பவை, வழக்கமான பேருந்து நிறுத்தங்கள்தான், ஆனால், அவற்றின் கூரைகளில் உள்ளூர்ச் செடிகள் வளர்ந்திருக்கும், இவை தேனீக்களை ஈர்க்கும், தூசுத் துகள்களை, மழை நீரை உறிஞ்சும்.

நெதர்லாந்து முழுவதுமுள்ள 11,000 பேர் தேசியத் தேனீக் கணக்கெடுப்பின் நான்காவது திட்டத்தில் பங்கேற்றார்கள்; இதன் முடிவுகள் ஊக்கம் அளிப்பதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள்.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹ்ரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்.

Regn. No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35

DISCOVER NEW HORIZONS

AT THE 2022 ROTARY INTERNATIONAL CONVENTION IN HOUSTON, TEXAS, USA, 4-8 JUNE 2022

Take advantage of the limited-time registration rate of US$425* from 12 to 16 June. Register today at **convention.rotary.org**.

New this year: Nonmembers are welcome to attend, so invite a friend to join you! Information about nonmember registration rates and virtual-only attendance can be found at **convention.rotary.org**.

**Registration must be paid in full between 12 and 16 June 2021 to receive the US$425 rate.*

Rotary | HOUSTON 2022